2014, April 16 - 30

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2014

23 APR 2014

புலிமுக அரசியலும் புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடையும்

இராணுவமயமாக்கலின் அரசியல்

ஜெனீவாவுக்கும் மாகாண சபை தேர்தல்களுக்கும் பிறகு...

# ராஜபக்ஷவுக்கு மன்மோகன் சிங்கின் கடைசிக் காணிக்கை



| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான கலைக்கேசரி


KALAIKESARI

CULTURE HERITAGE TRADITION EVENTS FASHION INTERVIEWS ENTERTAINMENT

www.kalaikesari.com

இப்போது உங்கள்

iPad, iPhone, Android Phone மற்றும் Tablet களில்




Download your eMagazines now at www.magzter.com

Available on play.google.com


Available on Google Play

Available on Magzter

Feedback and comments
kalaikesari@expressnewspapers.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாமெல்லோரும் உடந்தையாக இருக்காத பட்சத்தில் எவராலுமே முழு நாட்டையும் அச்சுறுத்தி ஆட்சி புரிய முடியாது.

- எட்வேர்ட் ஆர்.முரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2014, ஏப்ரல் 16 - 30
பக்கங்கள் - 68



11 ராஜபக்ஷ ஆட்சி மீது இரு தீர்ப்புகள்

15 ஜெனீவா வாக்கெடுப்பு; பிளவுகளும் பதிற்குறிகளும்

20 இந்தியாவின் குழப்பநிலையும் வஞ்சகமும்

23 ஜெனீவாவுக்கும் மாகாணசபை தேர்தல்களுக்கும் பிறகு...

26 புலிமுக அரசியலும் புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையும்

29 இந்தியாவின் நடுநிலை கூறும் செய்தி


33 இராணுவமயமாக்கலின் அரசியல்


34 ராஜபக்ஷவுக்கு மன்மோகன்சிங்கின் கடைசிக்காணிக்கை

40 திகில் திரைப்படத்தைப்போல 2014 பொதுத்தேர்தல்


46 அனல் பறக்கும் தேர்தல் பிரசாரம்

62 புதுமைப்பித்தனுக்கு வந்த சோதனை











*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# 'எதிரி' கண்டுபிடித்தல்

உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து ஐந்து வருடங்கள் நிறைவடையவிருக்கும் நிலையில், மீண்டும் விடுதலை புலிகள் இயக்கத்தை அணிதிரட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறிக்கொண்டு அரசாங்கம் படை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. வடபகுதியில் தொடர்ச்சியாக சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல்களில் ஈடுபட்டிருக்கும் படையினர் பலரைக் கைது செய்து தடுத்து வைத்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைவரம் மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போரின் அவலங்களில் இருந்து விடுபட்டு வழமை வாழ்வுக்குத் திரும்புவதற்குப் போராடிக் கொண்டிருக்கும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு பெரும் ஏக்கத்தைக் கொடுத்திருக்கிறது.

போரின் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தில் ஜனநாயகச் செயன்முறைகளில் கூடுதல் அக்கறை காட்டிச் செயற்பட்டு வந்திருக்கும் தமிழ் மக்கள் தங்கள் மத்தியில் மீண்டும் ஆயுதப் போராட்ட சக்திகள் தலை காட்டுவதை அனுசரிப்பதற்கான சாத்தியமே கிடையாது என்றுதான் கூறவேண்டும். மேலும் இராணுவ மயச் சூழலில் இருந்து விடுபடுவதற்காக ஏங்கிக் கொண்டிருக்கும் அந்த மக்கள் ஜனநாயக வழிமுறைகளின் மூலமாக அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காண்பதில் அக்கறை கொண்டுள்ள தமிழ் அரசியல் சக்திகளையே தங்களது பிரதிநிதிகளாகவும் தெரிவு செய்திருக்கிறார்கள். அந்த மக்களின் இத்தகைய எதிர்பார்ப்புக்களை கொச்சைப்படுத்தி அவர்களை மேலும் துன்பத்திற்குள்ளாக்கக்கூடிய ஒரு சூழ்நிலையே இன்று தோற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற அரசியல் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகளில் அக்கறை காட்டவேண்டிய அரசாங்கம் இலங்கைச் சமூகங்களின் மத்தியிலான பிளவை ஆழப்படுத்துகின்ற அணுகுமுறைகளையே தொடர்ச்சியாகக் கடைப்பிடித்துவருகின்றது. இத்தகைய துரதிர்ஷ்டவசமான நிலைவரம் சர்வதேச சமூகத்தின் மத்தியில் இலங்கையைத் தனிமைப்படுத்துகின்ற போதிலும், அதைப்பற்றி ஆட்சியாளர்கள் கவலைப்படுபவர்களாக இல்லை. உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்த காலகட்டத்தில் இருந்ததையும் விட தற்போது இனங்களுக்கிடையிலான பிளவு மேலும் கூடுதலான அளவுக்கு ஆழமானதாகவே காணப்படுகிறது. இத்தகைய துருவமயமாதலினால் அரசியல் ரீதியில் ஆதாயத்தைப் பெற்றுக் கொண்டிருக்கின்ற அரசாங்கம் நிலைவரத்தில் மாற்றத்தை விரும்பவில்லை என்பதை அதன் ஒவ்வொரு செயலின் மூலமாகவும் காண்பித்துக் கொண்டிருக்கிறது.

இராணுவவாத அணுகுமுறைகளைக் கடைப்பிடித்து வருகின்ற அரசாங்கத்துக்கு எப்போதுமே ஒரு 'எதிரி' தேவை. அத்தகைய ஒரு எதிரி கண்டுபிடிக்கப்பட்டால் தான் வலுச்சண்டைக்குப் போகிற பாணியிலான அணுகு முறையுடன் அரசியல் செய்யக்கூடியதாக இருக்கும். ஆட்சியாளர்களின் தேவைக்கு ஏற்ப காலத்துக்குக் காலம் 'எதிரிகள்' கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டேயிருப்பார்கள்.

நாடு எதிர் நோக்குகின்ற உண்மையான பிரச்சினைகளில் இருந்து தென்னிலங்கை மக்களின் கவனத்தை திசைதிருப்புவதற்கு போர் வெற்றியைக் தாராளமாகவே பயன்படுத்தி மிகையான அரசியல் அனுகூலத்தை அடைந்திருக்கும் அரசாங்கம் தொடர்ந்தும் அதே போர் வெற்றியை கருவியாகப் பயன்படுத்த முடியாத ஒரு நிலை என்றைக்காவது தோன்றும் என்பதையும் நன்கறியும். அதனால் சிங்கள மக்களின் கவனத்தைத் திசை திருப்பி வைத்திருப்பதற்கு புதிய ஒரு எதிரி கண்டுபிடிக்கப்பட்டேயாக வேண்டும். அது இல்லாத ஒரு எதிரியாக இருந்தாலும் இருப்பதைப்போன்று காண்பிக்க அரசாங்கத்தினால் இயலும். இதுவே இன்றைய கவலைக்குரிய நிலை! ▪

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்














### குஷ்வந்த் சிங்



கடந்த மாதம் டில்லியில் காலமான பிரபல பத்திரிகையாளர் குஷ்வந்த் சிங் பற்றி இலங்கையின் ஊடகங்கள் குறிப்பாக, தமிழ் ஊடகங்கள் பெரிதாக கவனத்தைச் செலுத்தவில்லை. ஆனால், சமகாலம் அவரைப் பற்றி, அவராலேயே பயிற்றுவிக்கப்பட்ட ஒரு பத்திரிகையாளர் றெஜினோல்ட் மாசீ எழுதிய நினைவுக் குறிப்பை பிரசுரித்ததன் மூலமாக பொருத்தமான அஞ்சலியைச் செலுத்தியிருக்கிறது.

அரவிந்தன் ரமேஷ், இரத்மலானை.

### கனதியான சேவை

சமகாலம் பிரசுரித்துவருகின்ற அரசியல் கட்டுரைகளைப் பொறுத்தவரை பெருமளவானவை ஆங்கிலத்தில் எழுதுகிறவர்களின் படைப்புகளாகவே இருக்கின்றனபோல் தெரிகிறது. பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த அரசியல் அவதானிகளினதும் புத்தி ஜீவிகளினதும் கருத்துகளை தமிழ்வாசகர்களுக்கு அளிப்பதில் சமகாலம் கனதியான ஒரு சேவையைச் செய்துவருகிறது.

இந்திய அரசியல் நிலைவரங்களைப் பொறுத்தவரை சென்னை மெயில் முத்தையா காசிநாதனும் டில்லிடயறி எம்.பி.வித்தியாதரனும் எழுதும் கட்டுரைகள் பெருவாரியான தகவல்களைக் கொண்டவையாக இருக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் அக்கட்டுரைகள் மிகவும் நீண்டவையாக அமைந்து விடுவதும் உண்டு. இது விடயத்தில் சமகாலம் ஆசிரியர் குழு கவனத்தைச் செலுத்தும் என்று எதிர்பார்க்கிறேன்.

கடந்த மாத இறுதியில் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் இந்தியா முன்னைய இருவருடங்களின் போதும் கடைப்பிடித்த அணுகுமுறையை விட வித்தியாசமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் என்று முன்கூட்டியே எதிர்வுகூறிய வித்தியாதரனுக்கு பாராட்டுகள்.

சர்வேஸ்வரன் மயூரன், சரசாலை.

### சத்தியமூர்த்தியின் கருத்துகள்

சென்னை அரசியல் ஆய்வாளர் என்.சத்தியமூர்த்தியின் கட்டுரைகள் சமகாலத்தில் தவறாமல் பிரசுரமாகின்றன. ஆரம்பத்தில்

### சினிமா விமர்சனங்கள்

சமகாலத்தில் வெளியாகின்ற சினிமா விமர்சனங்கள் நான்கு, ஐந்து மாதங்களுக்கு முன்னர் வெளியான திரைப்படங்களைப் பற்றியவையாக இருக்கின்றன. இக்குறைபாடு நிவர்த்திக்கப்படவேண்டியதாகும்.

பிரசுரமாகின்ற சினிமா விமர்சனங்கள் தரமானவையாகவும் வித்தியாசமான கோணங்களில் அமைந்தவையாகவும் இருக்கின்றன என்பது வரவேற்புக்குரியது.

சின்னத்தம்பி சிவமயம்,
கோளாவில்.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தே அவரின் கருத்துகளைப் படித்துவருகின்றேன். அவரைப் பொறுத்த வரை, இலங்கை அரசாங்கத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைத்துச் செயற்பட்டார் நிலைவரங்களில் கணிசமான மேம்பாட்டை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கையைக் கொண்டவராக இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அணுகுமுறைகளிலோ கொள்கைகளிலோ எந்தவொன்றையுமே சீரானதாக சத்தியமூர்த்தி கருதுவதாகத் தெரியவில்லை.

தமிழர் பிரச்சினையில் கொழும்பு அரசாங்கங்களின் கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் மாற்றியமைக்க முடியுமென்று சத்தியமூர்த்தி நம்புகிறாரென்றால், அவரின் சிந்தனைப் போக்கில் எங்கோ பெரிய தவறு இருக்கிறது என்பதே எனது அபிப்பிராயம். தமிழ்மக்களை நோக்கி உருப்படியான அரசியல் சமிக்ஞையைக் காட்டுவதற்கு அக்கறைப்படாத இன்றைய இலங்கை அரசாங்கத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைத்துச் செயற்பட்டால் இறுதியில் ஏமாற்றமே கிடைக்கும் என்பதிலும் சந்தேகமில்லை.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான வட மாகாணசபையை உருப்படியாகச் செயற்படவிடாத அரசாங்கத்தின் போக்கை அறியாதவராக சத்தியமூர்த்தி இருக்கமுடியாது என்று நம்புகிறேன்.

இராமலிங்கம் சுரேஷ், சரணவாய்.

## தெற்காசியாவில் நல்லாட்சி நெருக்கடி

கடந்த சமகாலம் இதழில் ‘நல்லாளுகை; தென்னாசியா எதிர்நோக்கும் நெருக்கடி’ என்ற தலைப்பில் இந்திய பேராசிரியை அநுராத எம்.செனோய் எழுதிய கட்டுரை இன்று முழு தெற்காசியாவிலும் நிலவுகின்ற ஆட்சிமுறையின் சீரழிவுத்தனத்தை கச்சிதமாக விளக்கியிருக்கிறது. மக்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாட்டை உணர்ந்து செயற்படும் ஒரு அரசாங்கத்தைக் கூட எமது பிராந்தியத்தில் காணமுடியவில்லை.



குடும்ப ஆட்சியும், ஆளும் கும்பலின் நெருங்கிய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் சலுகை செய்கிற போக்குமே எங்கும் தலைவிரித்தாடுகிறது. சட்டத்தின் ஆட்சியின் சீர்குலைவு இன்று தெற்காசிய மக்கள் பரவலாக எதிர்நோக்குகிற பாரிய நெருக்கடி என்பதை அநுராத செனோய் தெளிவாக விளங்கியிருக்கிறார். இத்தகைய ஆக்கங்களை சமகாலம் தொடர்ச்சியாக பிரசுரிக்க வேண்டும்.

கந்தப்பு கணேசலிங்கம், யாழ்ப்பாணம்.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 02 இதழ் 20
2014, ஏப்ரல் 16-30

A Fortnigtly Tamil News Magazine


**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
**ஈ-மெயில்:** samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**பக்க வடிவமைப்பு**
எம்.ஸ்ரீதரகுமார்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்



வெற்றிபெற்ற மனிதர்கள் சகலருமே ஒரேயொரு பாதையைத் தெரிந்தெடுத்து அதை உறுதியாகப் பின்பற்றியவர்களே.
- அன்ட்ரியூ கார்னகீ

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....



பத்துவருடங்களுக்கு ஒரு தடவை புதிய கற்கை நெறிகளைக் கற்க வேண்டும். அவ்வாறானால்தான் உலகில் இடம்பெறுகின்ற மாற்றங்களுக்கு எம்மைப் பரிச்சயமானவர்களாக்கிக் கொள்ள முடியும் என்று முன்னாள் சிங்கப்பூர் பிரதமர் லீகுவான் யூ ஒருதடவை சொன்னார். நான் அவரின் ஆலோசனையைப் பின்பற்றப் போகிறேன். மசாசூசெட்ஸ் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் விவசாயம், கைத்தொழில்துறை தொழில்நுட்பம் மற்றும் அரசியல் கற்கை நெறிகளை நான் கற்கப்போகிறேன்.

அரசியல் கட்சிகளிலும் அரசியல்வாதிகளிலும் அரசியலிலும் மக்கள் ஒட்டு மொத்தமாக விரக்தியடைந்துவிட்டார்கள். அரசியல்வாதிகள் மக்களின் தேவைகள் மீது கவனம் செலுத்தவேண்டிய நேரம் வந்துவிட்டது.

**எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க**



அரசியலமைப்பில் திருத்தத்தைச் செய்து மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு பல அரசியல்வாதிகளும் ஆதரவாளர்களும் என்னிடம் வேண்டுகோள் விடுத்தார்கள். ஆனால், நான் மறுத்துவிட்டேன். எனக்கு அதிகாரப் பேராசை கிடையாது.

**முன்னாள் ஜனாதிபதி திருமதி குமாரதுங்க**



மக்கள் இந்த அரசாங்கத்தைப் பதவியில் இருந்து அகற்றத் தயாராயில்லை. ஆனால், 2009 ஆம் ஆண்டில் ஆதரவைத் தந்த மந்திரி எம்மை இப்போது ஆதரிக்கவில்லை.

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ**



வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் என்னை விட வயதில் மூத்தவர். அந்த அர்த்தத்தில் அவர் எனக்கு மூத்த சகோதரர். ஆனால், ஒரு முதலமைச்சர் என்ற வகையில் அவர் எனக்கு இளையவர்தான். நான் இதை அகங்காரத்துடன் கூறவில்லை.

**கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன்**



நான் ஒரு கடுமையான ஐக்கிய தேசியக்கட்சி சார்பு குடும்பத்திலிருந்து வந்தவன். மாணவனாக இருந்தபோது கம்யூனிஸ்ட் கட்சியை ஆதரித்ததற்காக தந்தையார் என்னை நையப்புடைத்தார். இளவயதில் நான் என்.சண்முகதாசன் தலைமையிலான பீக்கிங்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியால் கவரப்பட்டேன். 12 வயதில் இருந்தே நான் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளன். எனக்கும் சண்முகதாசனுக்கும் இடையே 40 வயது வித்தியாசம். ஆனால், அவரைத் தோழர் என்றுதான் அழைப்பேன். 50 வயதான மனிதர் உனக்கு எவ்வாறு தோழராக இருக்கமுடியும் என்று தந்தையார் கேட்பார். கட்சி வேலைகள் முடிந்து பின்னிரவில் வீடுவரும்போது தந்தையார் என்னைக் கண்டிப்பார்.

**சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன**



ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா என்னை வைக்கோலால் செய்யப்பட்ட தோட்டத்து வெருளியுடன் ஒப்பிட்டது குறித்து எனக்கு எந்தக் கவலையும் இல்லை. ஏனென்றால் வெருளிக்கு குறைந்தபட்சம் பறவைகளை விரட்டுவதற்கான வல்லமையாவது இருக்கிறதல்லவா. என்னை அவர் ஒரு சடலத்துடன் ஒப்பிடாதது மகிழ்ச்சி தருகிறது.

**தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# முதல் முறையாக ஜனநாயக ரீதியான அதிகார மாற்றத்தை நோக்கி ஆப்கான்

ஆப்கானிஸ்தானில் ஏப்ரில் 5 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் அந்நாட்டில் முதன் முதலான ஜனநாயகரீதியான அதிகார மாற்றத்தைக் குறித்து நிற்கிறது. சுமார் ஒரு கோடி 20 இலட்சம் வாக்காளர்களில் 60 சதவீதத்தினர் வாக்களிப்பில் பங்கேற்றதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தது. தேர்தலில் பங்கேற்பதில் ஆப்கான் மக்கள் காட்டிய ஆர்வம் தலிபான்களுக்கு பெரும் அவமதிப்பாக அமைந்தது. தேர்தலைக் குழப்பியடிப்பதற்கு தலிபான்கள் தங்களாலியன்ற சகலதையும் செய்தார்கள். வாக்களிப்பு தினத்துக்கு முன்னரான இருமாதங்களில் தலிபான்களினால் நாட்டின் பல பகுதிகளிலும் 39 தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பெண்கள் பெருமளவில் திரண்டு வந்து தங்கள் வாக்ககுளைப் பதிவு செய்தமை இத்தடவை முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு அம்சமாகும். 2009 ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தவர்களின் தொகையை விட இத்தடவை வாக்களித்தவர்களின் தொகை சுமார் 30 இலட்சம் அதிகமானதாகும். பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஜெனரல் சாஹிர் அசிமி தெரிவித்த தகவல்களின்படி தேர்தல் தினத்தன்று மாத்திரம் நாட்டின் பல பகுதிகளிலும் தலிபான்கள் சுமார் 700 தாக்குதல்களை நடத்தியிருந்தனர். ஆனால், எந்தத் தாக்குதலுமே வாக்களிப்பைக் குழப்பியடிக்கக்கூடிய அளவுக்கு வலுவானதாக இருக்கவில்லை.

9/11 தாக்குதல்களுக்குப் பிறகு தலிபான்களின் ஆட்சியை அமெரிக்கர்கள் கவிழ்த்ததற்குப் பின்னரான காலகட்டத்தில் ஆப்கான் மக்கள் ஒரேயொரு ஜனாதிபதியையே கண்டிருக்கிறார்கள். ஜனாதிபதி ஹமீட் கர்சாயின் இரு ஐந்து வருடப் பதவிக் காலங்கள் முடிவடைவதையடுத்தே தேர்தல் நடத்தப்பட்டது. 8 வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். இவர்களில் எந்தவொரு வேட்பாளரும் ஒரேயடியாக வெற்றிபெறுவதற்குத் தேவையான 50 சதவீத வரம்பைத் தாண்டக்கூடிய வாய்ப்பு இல்லை என்று நம்பப்படுகிறது.



எந்த வேட்பாளருமே இந்த வரம்பைத் தாண்டாத பட்சத்தில் மே 28 ஆம் திகதி இரண்டாம் சுற்றுவாக்களிப்பு நடைபெறும். அந்த வாக்களிப்பை எதிர்நோக்கக்கூடிய வாய்ப்பு மூவருக்கே கிட்டும் என்று நம்பப்படுகிறது. முன்னாள் வெளியுறவு அமைச்சர்கள் அப்துல்லா அப்துல்லா, சல்மாய் ரசூல், முன்னாள் நிதியமைச்சர் அஷ்ரப் கானி அஹ்மட்சாய் ஆகியோரே அவர்களாவர்.

அமெரிக்கப்படைகளும் அவற்றின் நேச அணிப்படைகளும் இவ்வருட இறுதியில் ஆப்கானிஸ்தானிலிருந்து முற்றாக வாபஸ் பெறவிருக்கும் நிலையில் தலிபான்களின் ஆபத்து அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. ஜனநாயக ஆட்சிமுறையை வலுப்படுத்துவதே தலிபான்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வருவதைத் தடுப்பதற்கு சிறந்த உத்தரவாதமாக இருக்க முடியும். ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களில் முன்னணிப் போட்டியாளர்கள் அமெரிக்கப்படைகள் மேலும் சில காலத்துக்கு ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருக்க வேண்டுமென்றே விரும்புகிறார்கள்.

இரண்டாவது சுற்றுத் தேர்தலை நடத்துவதில் தாமதம் அல்லது இழுபறி ஏற்படுமானால், அதன் விளைவான சூழ்நிலைகளைத் தலிபான்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தக்கூடிய ஆபத்து இருக்கிறது என்று அவதானிகள் எச்சரிக்கிறார்கள். வாக்களிப்பில் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டதன் மூலமாக ஜனநாயகச் செயன்முறைகளில் தங்களுக்கு இருக்கின்ற அக்கறையை வெளிக்காட்டிய ஆப்கான் மக்களின் எதிர்பார்ப்புகள் சிதறடிக்கப்படாதிருப்பதை உறுதி செய்வதற்கு சுமுகமான அதிகாரமாற்றத்துக்கு அரசியல் வாதிகள் வழி செய்ய வேண்டும் என்று அவதானிகள் வலியுறுத்துகிறார்கள். ▪

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# முஷாரப் தண்டிக்கப்படுவதை இராணுவம் அனுமதிக்குமா?



பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதியும் இராணுவ ஆட்சியாளருமான பெர்வெஸ் முஷாரப் மீது தேசத்துரோகக் குற்றச்சாட்டைச் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றமை அந்த நாட்டின் ஜனநாயக மாற்றத்தில் ஒரு தனிக் கவனிப்புக்குரிய மைல்கல்லாகும்.

பாகிஸ்தானின் வரலாற்றிலேயே அரசியலமைப்பை மீறியதற்காக இராணுவ ஆட்சியாளர் ஒருவர் பொறுப்புக்கூற வைக்கப்பட்டிருப்பது இதுவே முதற்தடவையாகும். சுதந்திரத்திற்குப் பின்னரான தசாப்தங்களில் பெரும்பாலான பகுதியில் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியின் கீழேயே இருந்திருக்கிறது. இது காலவரையில் எந்த இராணுவ ஆட்சியாளருமோ அல்லது ஜெனரலுமோ வழக்கு விசாரணையை எதிர்கொண்டதில்லை. அதுவும் குறிப்பாக தேசத்துரோகக் குற்றச்சாட்டை எதிர்நோக்கியதில்லை. முஷாரப் மீது தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கில் கூடுதலாகக் கவனிக்க வேண்டிய அம்சம் அவர் மீதான விசாரணையை ஒரு சிவில் நீதிமன்றமே நடத்துகிறது என்பதாகும். 2007 ஆம் ஆண்டு அரசியலமைப்பை சட்டவிரோதமாக இடைநிறுத்தியதுடன் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியதற்காகவே அவர் மீது தேசத்துரோகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறது. தான் குற்றமற்றவர் என்று முஷாரப் கூறியிருக்கிறார். குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் அவர் மரண தண்டனையை அல்லது ஆயுட்காலச் சிறைத் தண்டனையை எதிர்நோக்க வேண்டியிருக்கும். தேசத்துரோகக் குற்றச்சாட்டுக்குப் புறம்பாக கிரிமினல் குற்றச்சாட்டுகளுடன் சம்பந்தப்பட்ட வேறு நான்கு வழக்குகளையும் முஷாரப் எதிர்நோக்குகிறார். அதில் ஒன்று முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ கொலையுடன் தொடர்புடைய வழக்கும் ஒன்றாகும். பாகிஸ்தானில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கங்கள் இராணுவத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கத் துணிச்சல் கொள்வது என்பது அரிதாகும். ஆனால், நவாஸ் ஷெரீப் அரசாங்கம் அவ்வாறு செய்திருக்கிறது. இந்தச் செயல் சிவிலியன் அரசாங்கம் தன்முனைப்புடன் செயற்படுகிறது என்பதன் வெளிப்பாடாகும்.

இராணுவ ஆட்சியாளர்களை அவர்களது சட்டமீறல்களுக்காக பொறுப்புக் கூறவைப்பதென்பது ஜனநாயக நாடாக கூர்ப்படையும் விடயத்தில் பாகிஸ்தானுக்கு மிகவும் முக்கியமானதாகும். மற்றையவர்கள் சதிப்புரட்சிகளைச் செய்ய முனைப்புக் கொள்வதை அதனால் தடுக்கக்கூடியதாக இருக்கும். ஆனால், அதற்கு முஷாரப் மீதான குற்றச்சாட்டை அதன் தர்க்க ரீதியான முடிவுக்கு எடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கவேண்டும். அவர் மீது விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளியாகக் காணப்பட்டால், அவர் தண்டிக்கப்படவேண்டும். ஆனால் இது சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது. இராணுவம் எப்போதுமே தன்னை நாட்டின் மிகவும் உறுதியான தேசப்பற்றுள்ள நிறுவனமாக காண்பித்துவந்திருக்கிறது. தன்னைச் சார்ந்த ஒருவரே தேசத்துரோகக் குற்றச்சாட்டின் பேரில் விசாரிக்கப்படுவதை இராணுவம் அனுமதிக்கும் என்பது சாத்தியமில்லை. அதனால், முஷாரப் பாதுகாப்பாக நாட்டைவிட்டு வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவதை உறுதிசெய்து கொள்வதில் இராணுவம் அக்கறை காட்டும் என்று அவதானிகள் கருதுகிறார்கள்.

முஷாரப்பிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஷெரீப் அரசாங்கம் தீர்மானித்ததற்கு சட்டத்தின் ஆட்சியைப் பலப்படுத்த வேண்டுமென்பதிலான அக்கறையைக் காட்டிலும் பழிவாங்கும் நோக்கமே காரணம் என்று பரவலாகக் கருதப்படுகிறது. 1999 சதிப்புரட்சியில் முஷாரப் கவிழ்த்தது நவாஸ் ஷெரிப் அரசாங்கத்தையேயாகும். சகல கிரிமினல் வழக்குகளிலும் முஷாரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட பின்னரே அவருக்கு எதிராக தேசத்துரோகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறது. அதனால் அரசியல் ரீதியில் அவரைப் பழிவாங்கும் நோக்குடனேயே காரியங்கள் இடம்பெறுகின்றன என்ற சந்தேகம் பரவலாக எழுகிறது.

அவசரகால நிலையைப் பிரகடனம் செய்வதற்கான தீர்மானம் முஷாரப்பினால் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதல்ல. எதற்காக அவரை மாத்திரம் பொறுப்புக்கூற வைக்க முயற்சிக்கப்படுகிறது என்று அரசியல் அவதானிகள் பலரும் கேள்வி எழுப்புகிறார்கள். இத்தகைய சூழ்நிலையில், முஷாரப் மீது மாத்திரமே தேசத்துரோகக் குற்றச்சாட்டு வழக்கு விசாரணை நடத்தப்படுமானால் அது நியாயமானதாக அமையாது என்றும் அது நீதித்துறையின் உயர்த்தியை மலினப்படுத்திவிடும் என்றும் அவர்கள் அபிப்பிராயம் கூறுகிறார்கள்.

அத்துடன் இராணுவம் தலையீடு செய்வதற்கான சூழ்நிலை மீண்டும் தோன்றி பாகிஸ்தானில் வலுவடைய ஆரம்பித்திருக்கும் ஜனநாயகத்தை ஆபத்திற்குள்ளாக்கி விடக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண பெரும்பான்மையுடனான இடைத்தரமான தேர்தல் வெற்றிகள் ராஜபக்ஷாக்களுக்கு போதுமானவை அல்ல. தாங்கள் மாத்திரமே என்றென்றைக்கும் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தி நிற்க வேண்டும் என்ற தற்பெருமைக்கு முட்டுக்கொடுப்பதற்கு பிரமாண்டமான தேர்தல் வெற்றிகளை அவர்கள் விரும்புகிறார்கள்

*திஸ்ஸரணி குணசேகர*

# ராஜபக்ஷ ஆட்சி மீது இரு தீர்ப்புகள்



உள்நாட்டு அரசியல்

கொடுங்கோலர்கள் தேர்தல்களை மக்களின் விருப்பங்கள் வெளிப்படுத்தப்படுவதற்கான ஒரு வழி வகையாகக் கருதி அவற்றில் தங்கியிருப்பதில்லை. மாறாக அவர்கள் தேர்தல்கள் தங்கள் மீது பாராட்டுத் தெரிவிக்கும் செயற்பாடாக அமைய வேண்டுமென்றே எதிர்பார்க்கிறார்கள். ஒரு சர்வாதிகாரி மக்களிடம் ஆணையொன்றைப் பெறுவதற்காக தேர்தல்களுக்குப் போவதில்லை. ஏற்கனவே தனக்கு ஒரு ஆணை இருப்பதாக அவர் நம்புகிறார்.

*- த கார்டியன் (7-12-2011).*

ஜெனீவாவில் ராஜபக்ஷாக்கள் ராஜபக்ஷாக்களினாலேயே தோற்கடிக்கப்பட்டார்கள். ராஜபக்ஷாக்கள் உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தில் ஜனநாயக விதிமுறைகளில் இருந்து அப்பட்டமாகவும் தொடர்ச்சியாகவும் விலகிச் செல்லாமல் இருந்திருந்தால் ஜெனீவாவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்காது. நீதித்துறை தொடங்கி தேர்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைக்குழுவரை இலங்கையின் ஒவ்வொரு நிறுவனத்தையும் மதிப்பிழக்கச் செய்து கீழ்ப்படுத்தி வைக்காமல் இருந்திருந்தால் சர்வதேச விசாரணையொன்றுக்கான கோரிக்கை வலுப்பெற்றிருக்காது.

பிரதம நீதியரசர் பதவி நீக்கம் செய்யப்பட்ட கேலிக் கூத்துக்குப் பிறகு எந்தவொரு விவகாரத்திலும் சுயாதீனமான தேசிய விசாரணைக்கான சாத்தியப்பாட்டில் (அகவுணர்வுகளுக்கு அப்பால் நின்று நேர்மையாகச் சிந்திக்கும்) எந்தவொரு அவதானியும் நம்பிக்கை வைக்க முடியுமா?

கடந்தமாதம் 27 ஆம் திகதி இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 48 மணித்தியாலங்கள் கடந்து விடுவதற்கு முன்னதாக ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இஸ்ரேலுக்கு எதிரான ஐந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்தத் தீர்மானங்களுக்கு ஆதரவு தெரிவிக்காமல் இருக்கக்கூடியதாக மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளில் எந்தவொன்றையும் உலகின் ஒரேயொரு மேலாதிக்க வல்லரசான அமெரிக்காவினால் அதன் வழிக்குக் கொண்டு வர முடியவில்லை. பிரிட்டனைக் கூட அமெரிக்காவினால் இணங்கச் செய்ய முடியவில்லை. 47 உறுப்பு நாடுகளில் 46 நாடுகள் இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானங்களை ஆதரித்தன. அமெரிக்கா மாத்திரமே எதிர்த்து வாக்களித்தது. ஐ.நா.மனித உரிமைகள் பேரவை ஏகாதிபத்தியத்தின் பகடைக்காய் என்று அல்லது அதை அமெரிக்காவினால் வசப்படுத்தக்கூடிய அமைப்பு என்று அல்லது நவிபிள்ளை ஒரு அமெரிக்க முகவர் என்று சொல்வது எவ்வளவு பொய் பார்த்தீர்களா?

இலங்கை மீதான அமெரிக்கத் தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதற்கு அமெரிக்காவின் பராக்கிரமம் அல்ல, ராஜபக்ஷாக்களினால் அவர்களின் சொந்த மக்களுக்கு எதிராக தொடர்ச்சியாக இழைக்கப்படுகின்ற நிராகரிக்க முடியாத குற்றங்களே காரணமாகும்.

தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்த மூன்றாம் உலக நாடுகளில் பொட்ஸுவானா என்ற ஒரேயொரு நாட்டை மாத்திரமே அமெரிக்காவின் நேச அணி என்று கருத முடியும். பெனின் ஜனாதிபதி ஒரு இவாஞ்சலிக்கல் புரட்டஸ்தாந்துகாரர் என்பதால் அந்த நாடு தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருக்கக்கூடும். (பொதுபலசேனாவும் ஏனையவர்களும் தலை தாழ்த்த முடியும்) கியூபாவைத் தவிர, மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் சகல தென்னமெரிக்க நாடுகளும் தீர்மானத்தை ஆதரித்தே வாக்களித்தன. அவையெல்லாம் அமெரிக்க அடிவருடி நாடுகள் அல்லவே. மாறாக அந்த நாடுகள் இடதுசாரி அரசாங்கங்களை அல்லது மத்திய இடதுபோக்குடைய அரசாங்கங்களைக் கொண்டவை. (Pink-tide nations) தங்களுடைய சொந்த கடந்த காலங்களுக்கும் ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழான இலங்கைக்கும் இடையே குறிப்பிட்ட சில ஒற்றுமைகளை அந்தநாடுகள் கண்டதன் காரணத்தினால் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருக்கக்கூடும். அந்த நாடுகளில் பலவற்றைப் பொறுத்தவரை வெகுஜன கவர்ச்சி அரசியலுடனான கொடுங்கோன்மை ஆட்சி முறை ஒரு வரலாற்று யதார்த்தம். அத்தகைய அனுபவத்தைக் கொண்ட அந்த நாடுகள் இலங்கை விவகாரத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை விவாதித்துக் கொண்டிருந்த வேளையில் கூட, மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களான ருக்கி பெர்னாண்டோ மற்றும் வணபிதா பிரவீன் மகேசன் கைது செய்யப்பட்ட சம்பவம், ஜெயகுமாரி பாலேந்திரன் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டமை. புதிதாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற ஒடுக்குமுறையை நியாயப்படுத்துவதற்காக விடுதலைப் புலிகள் மீண்டும் தலை காட்டத்தொடங்கிவிட்டார்கள் என்று காண்பிப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பிரயத்தனங்கள் போன்ற ராஜபக்ஷாக்களின் செயற்பாடுகளைக் கண்டு இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பில் தங்கள் முடிவுகளை எடுத்திருக்கக்கூடும்.

> ஜெனீவா வாக்கெடுப்பு ராஜபக்ஷாக்களைப் பொறுத்தவரை ஒரு தார்மீக – அரசியல் தோல்வியாகும். இலங்கையர் என்ற கோணத்திலிருந்து மாத்திரமல்ல, சிங்கள பௌத்தர் என்ற கோணத்திலிருந்து பார்க்கும் போதும் இது ஒரு வரவேற்கப்பட வேண்டிய விளைவாகும். சகோதரர்களை அவர்களது எண்ணப்படி செயற்பட விட்டால் அவர்கள் விடுதலைப்புலிகள் தமிழர்களுக்குச் செய்ததை சிங்கள பௌத்தர்களுக்குச் செய்வார்கள்

முன்னர் வாக்குறுதியளித்ததன் பிரகாரம் சித்திரவதைகள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து தேசிய விசாரணையொன்றை ஆரம்பித்திருந்தால், குறைந்தபட்சம் இன்னும் ஒரு வருடகாலத்துக்காவது சுயாதீனமான சர்வதேச விசாரணையைத் தவிர்த்திருக்க முடியும். ராஜபக்ஷவுக்கே உரித்தான பாணியில் அரசாங்கம் பொதுநலவாய உச்சி மகாநாட்டு நாட்களில் ஊறுதிமொழியை வழங்கிவிட்டு, மகாநாடு முடிவுற்றதும் அதை மீறிவிட்டது. ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நவிபிள்ளை சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்டதைப் போன்று '2009 - 2013 காலகட்டத்தில் இழைக்கப்பட்ட சித்திரவதைகள் பற்றிய முறைப்பாடுகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொதுநலவாய செயலகத்தின் மனித உரிமைகள் பிரிவின் ஒத்துழைப்புடன் தேசிய விசாரணையொன்றை நடத்தும் என்று 2013 நவம்பரில் அரசாங்கம் அறிவித்தது. விசாரணை காலவரையறையின்றி பின்போடப்பட்டுவிட்டதாக 2013 டிசம்பர் முற்பகுதியில் ஆணைக்குழு அறிவித்தது'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவினால் சொல்லப்பட்டிருக்கக்கூடிய அல்லது செய்யப்பட்டிருக்கக்கூடிய எதையும் விட இந்த அப்பட்டமான வாக்குறுதி மீறல்கள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்புநாடுகளைத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டுக்கு தள்ளியிருக்கக்கூடும்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் விசாரணை 2002- 2009 கால கட்டத்தையே உள்ளடக்கவிருக்கிறது. அதனால், சிறுவர்களைப் படையணிக்குச் சேர்த்தது முதல் நிராயுதபாணிகளான அரசியல் எதிராளிகளை கொடூரமாகக் கொலை செய்தமை வரை விடுதலைப்புலிகள் செய்திருக்கும் நாகரிக உலகு வெறுக்கும் செயல்களை அம்பலப்படுத்துவதற்கு இது ஒரு அருமையான வாய்ப்பாக அமையும். ஆனால், ராஜபக்ஷாக்களைப் பொறுத்தவரை இது கூட பிரச்சினையைத் தோற்றுவிக்கும். ஏனென்றால், இன்னமும் உயிரோடிருக்கக்கூடிய மிகவும சிரேஷ்ட விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் தங்கள் விசுவாசத்தை சூரிய தேவனிலிருந்து மகா மன்னனுக்கு மாற்றிவிட்டார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, போர்க்குற்றங்கள் என்று சொல்லப்படுகின்றவற்றுக்காக அல்லது ஏனைய மனித உரிமைகள் துஷ்பிரயோகங்களுக்காக எந்தவொரு விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேக நபர்மீதும் கொழும்பு வழக்குத் தொடரத் தவறிவிட்டது என்று நவிபிள்ளை குற்றஞ்சாட்டியிருக்கிறார் என்பது கவனிக்கத்தக்கது.

ஜெனீவா வாக்கெடுப்பு ராஜபக்ஷாக்களைப் பொறுத்தவரை ஒரு தார்மீக- அரசியல் தோல்வியாகும். ஒரு இலங்கையர் என்ற கோணத்திலிருந்து மாத்திரமல்ல, ஒரு சிங்கள-பௌத்த என்ற கோணத்தில் இருந்து பார்க்கும் போது இது ஒரு அவசியமானதும் வரவேற்கப்பட வேண்டியதுமான விளைவு ஆகும். சகோதரர்களை அவர்களது எண்ணப்படி செயற்படவிட்டால், அவர்கள் விடுதலைப் புலிகள் தமிழர்களுக்குச் செய்ததை சிங்கள பௌத்தர்களுக்குச் செய்வார்கள். (பொது பலசேனாவின் உருவாக்கம் முன்கூட்டிய ஒரு எச்சரிக்கையாகும்). ஐக்கிய நாடுகள் முறைமையின் தன்மையை அடிப்படையாகக்கொண்டு நோக்கும் போது, விசாரணை ஒன்றில் ஹேக் நகரில் போர்க்குற்ற வழக்கு விசாரணையில் அல்லது இலங்கை மீதான ஐ.நா. தடைவிதிப்புகளில் வந்து முடியும் என்று கூறமுடியாது. தனிப்பட்ட நாடுகள் ராஜபக்ஷாக்கள் மீது அல்லது அதிகாரிகள் மீது பயணத்தடைகளையும் சொத்துமுடக்கம்/ தடைகளையும் விதிக்கக்கூடும். ஆனால், இவற்றை ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் விசாரணையின்றியே செய்யலாம். ஏனென்றால், மக்னிட்ஸ்கி சட்டம் (Magnitsky Act) ஐ.நா. விசாரணைகளுக்கும் தடைவிதிப்புகளுக்கும் பாதுகாப்புச் சபையின் அங்கீகாரம் தேவை என்று வலியுறுத்துகிறது. (2009 ஆம் ஆண்டு மாஸ்கோ சிறையில் ரஷ்ய வழக்கறிஞரான சேர்ஜி மக்னிட்ஸ்கி மரணமடைந்த சம்பவத்துக்குப் பொறுப்பான ரஷ்ய அதிகாரிகளைத் தண்டிக்கும் நோக்குடன் 2012 நவம்பர்-டிசம்பரில் அமெரிக்க காங்கிரஸினாலும் ஜனாதிபதி பராக் ஒபாமாவினாலும் நிறைவேற்றப்பட்டதே மக்னிட்ஸ் கி சட்டம்) ராஜபக்ஷாக்கள் சீனாவினதும் ரஷ்யாவினதும் வீட்டோக்களை நீண்டகாலத்துக்கு நம்பியிருக்க முடியுமென்பதால் அவர்கள் இஸ்ரேலைப் போன்று ஒரு தார்மீக நையப்புடைப்புடன் தப்பித்துக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்.

## ஜெனீவா எதிர்ப்பு அலை இல்லை

சாதாரண பெரும்பான்மையுடனான இடைத்தரமான தேர்தல் வெற்றிகள் ராஜபக்ஷாக்களுக்கு போதுமானவையல்ல. தாங்களே அதுவும் தாங்கள் மாத்திரமே என்றென்றைக்கும் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்க வேண்டுமென்ற தற்பெருமைக்கு முட்டுக்கொடுப்பதற்கு பிரமாண்டமான தேர்தல் வெற்றிகளை அவர்கள் விரும்புகிறார்கள். மாகாண சபைத்தேர்தல்கள் அதே காரணத்துக்காக விரைவுபடுத்தப்பட்டன. ஏனென்றால் ஜெனீவாவுக்கு எதிரான சிங்கள - பௌத்த அலையை எதிர்பார்த்த ராஜபக்ஷாக்கள் அதிலிருந்து தேர்தலில் பயனடைய விரும்பினார்கள். ஆனால், இந்தப் பெரும்பான்மைவாத தேசபக்த அலையெழுச்சி ஆளும் சகோதரர்களின் கற்பனையில் மாத்திரமே இருக்கிறது என்பதை தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டின.

2011 உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளுடன் மாகாண சபைகளின் தேர்தல் முடிவுகளை ஒப்பிடுவது மக்களின் மனநிலையில் ஏற்பட்டிருக் கும் மாற்றங்களை விளங்கிக் கொள்வதற்கு மிகவும் பொருத்தமான வழியாகும். அதிகாரமற்ற தேர்தல் ஆணையாளர் உட்பட (அரசாங்கக் குண்டர்களிடமிருந்து அவரால் தனது உதவி தேர்தல் ஆணையாளர்களைக்கூட பாதுகாக்க முடியவில்லை) அப்பட்டமான பக்கச்சார்பான தேர்தல் செயன்முறைகளுக்கு மத்தியிலும் அரச அதிகாரமும் வளங்களும் பெருமளவுக்கு துஷ்பிரயோகம் செய்யப்பட்டதற்கு மத்தியிலும், முற்றுமுழுதாக ராஜபக்ஷாக்கள் மயப்படுத்தப்பட்ட பொலிஸ், அடிமைப்படுத்தப்பட்ட அரச அதிகாரிகள் மற்றும் அச்சுறுத்தப்பட்ட ஊடகங்களின் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் அரசாங்கத்தினால் 2011 வாக்கு மட்டங்களைத் தக்கவைக்க முடியவில்லை. ஜெனீவா எதிர்ப்பு அலையொன்று தங்களுக்கு சாதகமாக அமையுமென்று ஆட்சியாளர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்த்தார்கள். ஆனால், அத்தகையதொரு அலையே இல்லை என்பது இப்போது வெளிச்சத்துக்கு வந்துவிட்டது.

**தெற்கில் ஆளும் கட்சியின் வாக்குவீதம்**

| ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | தென் மாகாணம் | காலி | மாத்தறை | அம்பாந் தோட்டை |
|---|---|---|---|---|
| 2011 உள்ளூராட்சித் தேர்தல்கள் | 60.03% | 59.6% | 61.7% | 58.7% |
| 2014 மாகாணசபை தேர்தல் | 58.06% | 57.6% | 59.71% | 57.42% |
| வித்தியாசம் | 1.97% | 2% | 1.99% | 1.28% |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேல்மாகாணத்தில் ஆளும்கட்சியின் வாக்குவீதம்**


| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | மேல் மாகாணம் | கொழும்பு | கம்பஹா | களுத்துறை |
|---|---|---|---|---|
| 2011 உள்ளூராட்சித் தேர்தல்கள் | 56.1% | 53.1% | 59% | 56% |
| 2014 மாகாண சபைத் தேர்தல் | 50.3% | 45.33% | 57.98% | 61.23% |
| வித்தியாசம் | -5.8% | -7.77% | -1.02% | +5.23% |

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 2011 க்கும் 2014 க்கும் இடையே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சராசரி வாக்குவீதம் குறைவடைந்துவிட்டது. மாகாணமட்டத்தில் பார்க்கும்போது 2011 இலிருந்து 2014 இல் சுதந்திர முன்னணியின் வாக்கு 2 சதவீதத்தால் குறைவடைந்துவிட்டது.

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாக்குகள் குறைவடைந்த அதே வேளை களுத்துறையில் அதிகரித்திருக்கின்றன. மாகாண மட்டத்தில் 2011க்கும் 2014க்கும் இடையே சுதந்திர முன்னணியின் வாக்குகள் கணிசமாக அதாவது 5.8சதவீதத்தினால் குறைவடைந்திருக்கின்றன.

ராஜபக்ஷவின் படகை தூக்கி வைத்திருக்க தேசபக்த அலை எதுவும் அங்கே இல்லை. அதேவேளை அரசாங்க எதிர்ப்பு அலை என்றும் ஒன்றுமில்லை. வாக்காளர்கள் அரசாங்கத்திடமிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால், மிகவும் மெது மெதுவாக. தேசியத் தேர்தல்களில் ராஜபக்ஷாக்களுக்கு பாரதூரமான சவாலைத் தோற்றுவிக்க வேண்டுமானால் எதிரணிக் கட்சிகள் கூடுதலான அளவுக்கு துடிப்புடன் செயற்பட வேண்டும். தங்களுக்குள் முரண்பட்டுக்கொள்ளாமல் ஐக்கியப்பட்டுச் செயற்படவேண்டும். மிகவும் குறைக்கப்பட்ட வாக்காளர் தளத்துடனென்றாலும் தனியொரு பெரிய எதிர்க்கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியே விளங்குகிறது.

ஜனதாவிமுக்தி பெரமுனையும் (ஜே.வி.பி.) சரத்பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியும் மூன்றாவது இடத்துக்கு கடும் போட்டி போட்டுக்கொண்டிருக்கின்றன. தேவைப்படுவது என்னவென்றால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் ஏனைய சிறுபான்மை இனக் கட்சிகளையும் உள்ளடக்கிய சாத்தியமானளவுக்கு பரந்த எதிர்க்கட்சிகள் கூட்டணியேயாகும். இக்கூட்டணி ராஜபக்ஷவின் தவறான ஆட்சியினால் பாதிக்கப்பட்ட சகலருக்கும் நீதிபெற்றுக் கொடுப்பதையும் அரசியல், சமூக பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதையும் நோக்கியதொரு பொது வேலைத்திட்டத்தை முன்வைக்க வேண்டுமே தவிர, தேசபக்த மாரடிப்பில் ஈடுபடக்கூடாது.■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# ஜெனீவா வாக்கெடுப்பு

# பிளவுகளும் பதிற்குறிகளும்



ராஜன் பிலிப்ஸ்

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் வெளியிலிருந்து வரும் ஒரு செயலூக்கியாக சாதகமான மாற்றத்தையும் திருப்பத்தையும் உண்டாக்குமா? அல்லது பாதகமான விளைவைத்தான் உண்டாக்கப்போகிறதா?**

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை பற்றிய தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, உலகம் கண்டங்கள் அடிப்படையில் பிளவுபட்டிருந்த காட்சி சுவாரஷ்யமானதோர் விடயமாகும். ஐரோப்பா (மேற்கும், கிழக்கும்) அமெரிக்கா (வடக்கும் தெற்கும்) என்ற இரு கண்டங்களும் ஏறக்குறைய முழுமையாக ஓரணியில் நின்று தீர்மானத்தை ஆதரித்தன. இவ்விரு கண்டங்களையும் சேர்ந்த எந்தவொரு நாடும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாது விலகி நிற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விரு கண்டங்களில் உள்ள உறுப்பு நாடுகள் 18 'ஆம்' என்று வாக்களித்துத் தீர்மானத்திற்குச் சாதகமான 23 வாக்குகளில் 80 சதவீதத்தை தமது இரு கண்டங்களுக்குரியதாக்கின. இவ்விரு கண்டங்களையும் சேர்ந்த ரஷ்யா, கியூபா, வெனிசூலா என்ற மூன்று நாடுகள் மட்டும் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன. ஆசியா, ஆபிரி க்கா என்ற இரு கண்டங்களும் நடந்து கொண்ட முறை முற்றிலும் மாறுபட்டது. 12 நாடுகள் (ஆசியா 6 நாடுகள், ஆபிரிக்கா 6 நாடுகள்) வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. 9 நாடுகள் (6 ஆசிய நாடுகளும், 3 ஆபிரிக்க நாடுகளும்) எதிர்த்து வாக்களித்தன. ஐந்து நாடுகள் (4 ஆபிரிக்க நாடுகள், ஒரேயொரு ஆசிய நாடான தென்கொரியா) தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன. இலங்கையில் இருந்து சிங்களவர்களையும், தமிழர்களையும் பிரதிநிதித்துவம் செய்தவர்கள் ஒருவர் குடுமியை மற்றவர் பிடித்து சண்டை போட்டார்கள் என்பது மட்டுமல்ல, உலகத்தையே கிழக்கு-மேற்கு என்று இரண்டாக பிளவுபடுத்திப் பங்கிட்டுக் கொண்டார்கள். இக்கரு த்தை வெறுமனே குறை கண்டு பிடிக்கும் மனப்பான்மையோடு நான் கூறவில்லை. இந்தியாவிற்குத் திடீரென ஒரு ஞானோதயம் பிறந்தது. இந்த விவகாரம் 'தலையிடும் தன்மையது.. ஒன்றுக்கொன்று முரண்பாடானது. அத்தோடு நடைமுறைச் சாத்தியமற்றது' என்று தனது அணிசேராமை யைப் பகிரங்கப்படுத்தியது இந்தியா. நேரு ஒரு தடவை சொன்னார். நான் கிழக்கினதும் மேற்கினதும் ஒரு விநோதமான கலப்புப் பேர்வழி, சொந்த நாட்டில் எனக்குச் சேர இடம் இல்லை. வெளியே எங்கு போனாலும் எனது அந்நியத் தன்மையை உணர்கிறேன். அங்கும் இல்லை, இங்கும் இல்லை என்ற நேருவின் இக்கட்டான உணர்வு நிலைதான் ஞாபகம் வருகிறது.

இலங்கைக்கு உள்ளேயும், வெளியேயும் தீர்மானம் தொடர்பான பதிற்குறிகளும், கருத்துகளும் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டனவாகவும் முரண்பாடு கொண்டனவாகவும் வெளிப்பட்டன. உள்நாட்டில் வெளிப்பட்ட கருத்துப் பேதங்களை முதலில் பார்ப்போம். இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு இத்தீர்மானம் சட்டவிரோதமானது என்பதாகும். இதனையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்த ஜனாதிபதி தீர்மானத்தை முற்றாக நிராகரித்தார். தீர்மானத்தை வரவேற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன், இலங்கை மக்கள் அனைவருக்கும் கிடைத்த வெற்றி இது. உண்மை, நீதி, நல்லிணக்கம் என்பனவற்றிற்கான அவர்களது போராட்டத்தின் வெற்றிக்கும், இலங்கையின் எல்லாச் சமூகங்களும் தத்தம் மக்களின் பேரால் இழைக்கப்பட்ட மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்கும் குற்றங்களுக்கும் பக்கச் சார்பற்ற சுதந்திரமான செயல்முறை ஒன்றின் மூலம் பரிகாரம் தேடவும் கிடைத்த அரிய சந்தர்ப்பம் என்று கூறினார். இவ்விரு நிலைகளுக்கும் இடைப்பட்ட பல கருத்துகளும் உள்ளன.



சிலர் இன்னொரு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் (LLRC) தொடர்பான ஆணைக்குழு விசாரணை வேண்டும் என்று கூறுகிறார்கள். விஷமத்தனத்துடன் கூடிய இக்கருத்துப்படி அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் இழைத்த குற்றங்கள் மட்டுமல்ல எல்லாத் தரப்பினரதும் குற்றங்களும் ஆரம்பம் முதல் இன்றுவரை உள்ளடக்கப்பட வேண்டும். இந்தியாவையும் இதற்குள் சேர்த்துக் கொள்ளவும் வேண்டும் என்கிறார்கள். வேறு சிலர் தீர்மானத்தில் கூறப்பட்ட ஒவ்வொரு விடயம் பற்றியும் பொறுப்புணர்ச்சியோடும் விரைவாகவும் உண்மையாகவும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஆனால், மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணை என்ற விடயத்தை மட்டும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்கிறார்கள். இறுதியாகச் சொல்லப்பட்ட விடயம் உண்மையில் எல்.எல்.ஆர்.சி ஏற்கனவே சிபார்சு செய்ததும் இன்றைய இக்கட்டான நிலையில் இருந்து அரசாங்கம் தப்பிச் செல்வதற்கு அது திறந்துவிடப்பட்ட கதவு தான் இது என்பதும் குறிப்பிடப்படவேண்டியது.

ஜெனீவாத் தீர்மானத்தின் பின்விளைவுகள் பற்றியும் அரசாங்கம் இதனை அலட்சியப்படுத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியும் பற்பல அபிப்பிராயங்கள் கூறப்பட்டுள்ளன. நான் அவற்றை இங்கு ஆராயப் போவதில்லை. ஜீ.எல். பீரிஸ் அவர்கள் செயல்முறை, முன்னுதாரணம் ஆகிய அற்பவிடயங்கள் பற்றிப் பேசினார். இவை தவிர அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவெனில், மனித உரிமைகள் பேரவை என்ன செய்ய வேண்டும் என்று கூறியதோ அதனை அரசாங்கம் ஏற்கனவே செய்துவிட்டது, செய்து கொண்டிருக்கிறது என்பதாகும். ஆனால் இதனை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மட்டுமல்ல நாட்டுக்குள்ளே இருப்பவர்களும் நம்பத்தயாராக இல்லை. ஆசியாவையும் ஆபிரிக்காவையும் சேர்ந்த பல நாடுகள் வாக்கெடுப்பில் ஏன் கலந்துகொள்ளாமல் விலகி நின்றன என்ற கேள்வி எழுகிறது. இதற்கான காரணம், இந்தநாடுகளுக்கு எந்த ஒரு நாட்டின் அரசாங்கத்தின் மீதாயினும் குற்றவிசாரணையை நடத்துவதை ஏற்பது சங்கடமாக இருக்கிறது. குறிப்பாக பலம்மிக்க நாடுகள் இப்படிச் செய்வதை அவை ஏற்கத் தயாராக இல்லை. (இந்தக் காரணம் இந்தியாவிற்கும் பொருந்தும். ஆயினும் இந்தியாவைப் பொறுத்து வேறு பல விடயங்களும் உள்ளன) ஆயினும் இந்நாடுகள் இலங்கையின் செயற்பாடுகளையோ அதுபற்றி திருப்தி கொள்ளவோ, இந்நாடு பற்றிப் பேரவையில் கூறப்பட்டவற்றை நிராகரிக்கவோ முடியாத சங்கடத்திலும் உள்ளன. இலங்கையின் செயற்பாடுகள் பற்றி அவை சாதகமான கருத்தைக் கொண்டிருந்தால் அந்நாடுகள் ஏன் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் விலகி நின்றன? தீர்மானத்தை எதிர்த்து அல்லவா அவை வாக்களித்திருக்க வேண்டும். இவை யாவற்றுக்கும் மேலாக தீர்மானத்தைக் கொண்டு வந்த நாடுகள் இப்படியொரு தீர்மானத்தைப் பிரேரித்திருக்கும் நிலையே எழுந்திருக்காது.


### இலங்கை அரசின் செயற்பாடுகள்

இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் எப்படி அமைந்தன என்பதை நோக்க வேண்டும். போருக்குப் பிந்திய நிலைபற்றிய புள்ளிவிபரங்களை 'பவர் பொயின்ட்' உதவியுடன் விளக்கப்படுவதுண்டு. உயிர்ப்பற்ற இந்த எண்களுக்கும் உண்மையான வாழ்க்கைக்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் இடையிலான பெரிய வேறுபாடு உள்ளது. மக்கள் மிகமோசமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எந்தவொரு அரசாங்கத் தலைவரும் இம்மக்களின் வருந்தத்தக்க நிலைபற்றி அனுதாபத்துடன் பேசியது கிடையாது. கமரூன் இம்மக்களைச் சென்று சந்தித்தது போல்

**வெளியுறவு அமைச்சர் இராணுவ அதிகார வகுப்பின் கைப்பொம்மையாகச் செயற்படுகிறார் என்று தயான் ஜெயதிலக கூறியிருக்கிறார். எமது வெளிநாட்டு தூதரகங்கள் இராணுவப் பிரிவின் முன்னணி அமைப்புகளாக மாறிவிட்டன என்றும் அவர் குற்றம் சாட்டுகிறார். விடுதலைப்புலிகளை தோற்கடித்த யுத்தம் என்ன முறையில் நடத்தப்பட்டதோ அதன் உள்ளார்ந்த அம்சம் ஒன்றின் வெளிப்பாடுதான் இந்த மாற்றங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் அவர்களைப் போய்ச் சந்திக்க வில்லை. மக்கள் கமரூனுக்கு ஏன் பெருவரவேற்பை அளித்தார்கள் என் பதற்குரிய காரணத்தை இதிலிருந்து ஊகித்து அறிந்து கொள்ளலாம். அரச ாங்கம் போருக்குப் பிந்திய காலத்தில் மக்களின் பிரச்சினைகள் எவ்வாறு உள்ளன என்பது குறித்துத் தீவிர கவ னம் செலுத்த வேண்டும்; அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்ப தற்கு வடமாகாணசபை முதலமைச்ச ருடன் இணைந்து செயற்படவேண் டும். இதனைவிடுத்து மாகாணத்தின் பிரதம செயலாளரின் வகிபாகம், அவரின் உரிமைகள் என்பன தொடர் பாக முதலமைச்சரை அரசாங்கம் வலிந்து மோதலுக்கு இழுக்கின்றது. அரசியல் மட்டத்தில் அரசாங்கத்தின் செய்கைகள் இதனைவிட மிகவும் மோசம். அரசியல் தீர்வைக் காணும்



விடயத்தில் அது எதனையும் புதிதா கச் செய்யவில்லை. அதுமட்டுமல்லா மல் இதற்கு முன்னர் எவையெவை செய்யப்பட்டனவோ அவற்றையெல் லாம் திருப்பிப் பெறவும், தடுக்கவும் எண்ணம் கொண்டுள்ளதை உத்தி யோகபூர்வமாகவும் வேறுவகையி லும் வெளிப்படுத்தியுள்ளது. அரசாங் கம் அதிகாரப் பரவலாக்கம் தொடர் பாக எதனையும் 'செய்யாதிருப்பதன் காரணமாகவே ஐ.நா.தீர்மானத்தில் 13ஆவது திருத்தம் பற்றிக் குறிப்பி டப்பட்டது என்பதனைக் கவனித்தல் வேண்டும்.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் இவ்வளவு தூரம் ஏமாற்றம் அளிப்ப னவாக இருந்தது ஏன்? எம்மில் பலரி டம் இதற்கான விளக்கங்கள் பல உள்ளன. தயான் ஜயதிலக கூறிய விளக்கத்தை நான் இங்கு குறிப்பிட லாம் என்று கருதுகிறேன். '2009 ஆம் ஆண்டின் போர் வெற்றிக்குப் பின் னுள்ள ஐந்துவருட காலத்தில் இலங் கையில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள் ளன. இந்த மாற்றம் யாது? இலங்கை அரசாங்கம் ஒரு மதச்சார்பு, இனத் துவ அரசாக மாறிக்கொண்டிருக்கி றது. இது ஒரு அறநெறிக்கு ஒவ்வாத ஒரு மாற்றம். எமது அரசாங்கம் ஒரு குலக்குழு ஆட்சியாக சிலரின் ஆட்சி யாக மாறிவிட்டது. வெளிவிவகார அமைச்சும், எமது வெளிநாட்டுத்தூத ரகங்களும் அரசுக்கு ஆலோசனை கூறக்கூடிய 'திங்டாங்' எனப்படும் அறிஞர் குழுவும், அரசாங்கத்தின் இராணுவப் பிரிவின் முன்னணி அமைப்புகளாக மாறிவிட்டன. எமது

**போருக்குப் பிந்திய காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் எவ்வாறு உள்ளன என்பது பற்றி அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வட மாகாண முதலமைச்சருடன் இணைந்து செயற்படவேண்டும். இதனை விடுத்து மாகாண பிரதம செயலாளர் விவகாரம் மற்றும் முதலமைச்சரின் உரிமைகள் தொடர்பில் அவரை அரசாங்கம் வலிந்து மோதலுக்கு இழுக்கிறது**

வெளிநாட்டுத் தூதுவர்கள் சகபாடி களாகவும் எமது வெளிநாட்டு அமைச்சர் இராணுவ அதிகார வகுப் பின் கைப்பொம்மையாகவும் செயற் படுகின்றார்'. தயான் ஜயதிலகவின் இக்கூற்றுக்கு நான் ஒரு குறிப்பை மட் டும் சேர்க்க விரும்புகிறேன். அவர் கூறியிருக்கும் இந்த மாற்றங்கள் யாவும் 2009 இல் விடுதலைப்புலிக ளைத் தோற்கடித்த யுத்தம் என்ன முறையில் நடத்தப்பட்டதோ அதன் உள்ளார்ந்த அம்சம் ஒன்றின் வெளிப் பாடுதான் இந்த மாற்றங்கள். இதுபற் றிக் கருத்து வேறுபாடுகள் இருத்தல் கூடும்.

இங்கே நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் ஒன்றுள்ளது. அரசா



ங்கம் ஒரு மதவாத அரசாக, இனத் துவ அரசாக உருத்திரிந்தமையால் அது சர்வதேச அரங்கில் அதிகூடிய கவனத்தைப் பெற்றுள்ளது. அதன் மரியாதையைக் கெடுக்கும் வகையி லான அளவுக்குக் கெட்ட பெயர் ஏற் பட்டுள்ளது. தீர்மானத்தின் சில பிரிவு களில் சமய வழிபாட்டிடங்கள் மீது தாக்குதல் பற்றியும், வெலிவேரியா வில் இராணுவம் மேற்கொண்ட தாக் குதல் பற்றியும் குறிப்பிடப்பட்டிருப் பதும் இதனை எடுத்துக்காட்டுகிறது. இப்போது ஏற்பட்டுள்ள சிக்கல் இது தான். அரசாங்கம் தானாகவே உணர் ந்து தன்போக்கையும் நடைமுறைக ளையும் மாற்றிக்கொள்ளுமா அல்லது ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தின் பிரிவுகளில் உள்ள அறி வுறுத்தல்களை (நேரடியாகவோ, மறைமுகமாகவோ) பின்பற்றப் போகிறதா என்பதே ஆகும். ஆயி னும் அரசாங்கம் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நடத் தப்படவிருக்கும் விசாரணைக்கு மட் டும் ஒத்துழைக்காமல் விட்டு ஏனைய அனைத்தையும் துரிதமாக ஏற்றுச் செயற்பட்டால் வெளியில் இருந்து வரக்கூடிய விசாரணை என்ற விடயம் அழுத்தப்படாமல் விடப்பட்டுக் காலக்கிரமத்தில் கைவிடப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ராஜபக்ஷ அரசாங்கம் சாதகமான முறையில் தன்னை மாற்றிகொள்ளும் என்று அனுமானிப்பதில் தவறு ஏதும் இல்லை. சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்தில் விடுதலைப்புலிகள் தங்கள் போக்கைச் சாதகமாக மாற்றிக் கொள்ளும் தகைமை உடையவர்கள் என்று அனுமானிக்கப்பட்டது போன்று இத்தகையதொரு அனுமானத்தைக் கொள்ள முடியும். ஆயினும் இன்று அரசாங்கம் பலவகையிலும் விடுதலைப் புலிகள் சென்ற பாதையிலேயே விடாப்பிடியாகச் செல்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் அரசாங்கம் தன் போக்கை மாற்றிக் கொள்ளும் ஆற்றல் உடையது. ஆனால், அதற்கான மன உறுதி அதனிடம் இல்லை. அரசாங்கத்திற்கு உள்ளேயே இருக்கும் மதவாத, இனவாதக் குழுக்கள் இதற்கு உடன்படப் போவதில்லை. குடும்ப அடிப்படையிலான சிலர் ஆட்சியும், இராணுவ அதிகாரக்குழு ஆட்சியும் மாற்றத்தையோ சாதகமான திருப்பம் ஒன்றையோ ஆதரிக்கப்போவதில்லை.

பலம்பொருந்திய எதிர்க்கட்சி இருந்திருக்குமாயின் நிலைமை வேறாக இருந்திருக்கும். ஆயினும் பலம் பொருந்திய எதிர்க்கட்சி ஒன்று இருந்தாலும் இன்று இருப்பது போன்ற குறுகிய வட்டம் ஒன்றின் சிலராட்சி (Clan based oligarchy) ஏற்பட்டிருக்க முடியாது. இன்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் குறுகிய வட்டத்தின் சிலராட்சியின் வலிமையை நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. அது ஆழமாக வேரூன்றி நிற்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி மாமன் மருமகன் கட்சி (அங்கிள் நெபியூ பார்ட்டி- UNP) என்று கூறப்பட்டது. எஸ்.எல்.எவ்.பி என்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பெயரில் உள்ள எவ் எழுத்தை வைத்து அதனை ஸ்ரீலங்கா குடும்பக் கட்சி என்று கேலியாகக் குறிப்பிட்டதும் உண்டு. ஆனால் இன்று உள்ள சிலராட்சிக் குழுவுடன் ஒப்பிடும் போது முன்னாள் ஐ.தே.க.வும், ஸ்ரீ.ல.சு.க.வும் ஆட்டுக்குட்டிகள் போன்றன. ஐ.தே.கட்சி இன்று அரசியல் மரணத்தை தழுவிவிட்டது. இது ராஜபக்ஷ அரசுக்கு ஒருபோதும் சவாலாக அமையப் போவதில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தொடர்ச்சியாக இப்போது ராஜபக்ஷவின் சிலர் ஆட்சிக்கு கீழ்ப்பட்ட ஒன்றாக மாறிவிட்டது. ஆதலால் உள்ளிருந்தே வரக்கூடிய மாற்றம் என்பதற்கு ஏதேனும் அறிகுறிகள் உள்ளனவா? ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் வெளியில் இருந்து வரும் ஒரு செயலூக்கியாக சாதகமான மாற்றத்தையும் திருப்பத்தையும் உண்டாக்க முடியுமா? அல்லது பாதகமான விளைவைத்தான் உண்டாக்கப் போகிறதா? நான் ஆட்சி மாற்றம் பற்றிப் பேசவில்லை. மாறாக அரசாங்கம் தனக்குள்ளே கொள்கை மாற்றத்திற்கும் செல்லும் திசையில் இருந்து மாறுவதற்குமான உள்ளாற்றலைக் கொண்டுள்ளதா என்பதைப் பற்றியே பேசுகிறேன்.

### ஐ.நா.மனித உரிமைகள் பேரவைச் செயற்பாடுகள் உதவியா அல்லது தடைகளா?

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி வரவேற்று ஓர் அறிக்கையை வெளியிட்டார். 'இலங்கை' அடைந்த வெற்றியின் பெறுபேறுகளை எதிர்காலத்தில் இலங்கையின் எல்லா மக்களும் பெற்று நன்மையடைவதற்கு ஐக்கிய அமெரிக்கா உதவுவதற்கு உறுதி பூண்டுள்ளது என்று ஜோன் கெரி அந்த அறிக்கையில் குறிப்பிட்டார். ஐக்கிய அமெரிக்காவின் செயலாளருக்கு ஒரு விடயம் புரியவில்லைப்போலும், இலங்கையின் சிங்கள மக்களில் பெரும்பான்மையினர் அமெரிக்கா மீது அதிருப்தி கொண்டுள்ளார்கள். ஆகையால் இலங்கையில் உள்ளோரில் பெரும்பான்மையினர் அமெரிக்காவிற்கும் மேற்குலகிற்கும் எதிரான கருத்து உடையவர்களாவர். அவர்கள் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் சிங்கள

> **இலங்கை அடைந்த வெற்றியின் பெறுபேறுகளை எதிர்காலத்தில் நாட்டின் சகல மக்களும் பெற்று நன்மையடைய அமெரிக்கா உதவும் என்று ஜோன் கெரி கூறியிருக்கிறார். அவருக்கு ஒரு விடயம் புரியவில்லைபோலும். சிங்கள மக்களில் பெரும்பான்மையினர் அமெரிக்கா மீது அதிருப்தி கொண்டுள்ளனர். அமெரிக்காவும் மேற்குலகும் தங்களுக்கு எதிராக நடந்து கொள்வதாகவே அவர்கள் கருதுகின்றனர்**



வர்களுக்கு எதிராக நடந்து கொள்கின்றன என்றே கருதுகின்றனர்.

மேற்குறித்தவாறு சிங்கள மக்கள் கருதுகின்ற போது தமிழ்த்தரப்பில் இருந்தும் தீர்மானத்திற்கு எதிரான கருத்து எழுந்துள்ளது. அமெரிக்காவும் மேற்குலகும் இலங்கைப் பிரச்சினையை மனித உரிமைகள் பற்றிய பொதுப்பிரச்சினை ஆக்கிவிட்டன. அதன் மூலம் தமிழர் பிரச்சினை ஓரங்கட்டப்பட்டுள்ளது. தமிழர் மீதான ஆக்கிரமிப்பு இலங்கையில் வரலாற்று ரீதியானது, அது கட்டமைப்பு முறையிலான ஆதிக்கம், (Historical and structural domination) என்ற விடயத்தை கவனத்தில் கொள்ளவில்லை. தமிழர்கள் (சிங்களவர் ஆதிக்கத்தின் கீழ் உள்ள) அரசால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமிக்கப்படுகிறார்கள் என்றவாறாக தமிழர்கள் கருதுகிறார்கள். தீவிரவாதிகளாக உள்ளோரின் கருத்தை விட்டுவிடுவோம். இருதரப்பிலும் சராசரி மனிதர்களின் அபிப்பிராயம் என்ன? சிங்களவர் மேற்குலகு தமக்கு எதிராக நிற்கிறது என்று கருதுகிறார்கள். தமிழர்கள் மேற்குலகு போதிய அளவில் தானும் தமக்குச் சார்பாக இல்லை என்று கருதுகிறார்கள்.

மேற்கு நாடுகளோ அல்லது உலகின் வேறு எந்த மூலையில் உள்ள நாடோ இலங்கையைப் பிரித்து எடுப்பதில் தமிழர்கள் பக்கம் ஆதரவைப் போதிய அளவில் வழங்க முன்வரமாட்டா என்பதே உண்மை. ஜெனீவாவில் அமெரிக்கா தீர்மானத்தைக் கொண்டுவந்த போது இலங்கை அரசாங்கத்திற்கு அதன் செய்கை விளங்கிக்கொள்ள முடியாத புதிராக இருந்ததை பெயர் குறிப்பிடவிரும்பாத அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். 2007 ஆம் ஆண்டில் அமெரிக்கா கொடுத்த புலனாய்வுத் தகவல்களைக் கொண்டு இலங்கை விடுதலைப்புலிகளின் நான்கு கப்பல்களை சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து மூழ்கடித்தது. அதன் மூலம் 2009 மே மாதத்தின் யுத்தவெற்றிக்கு வழிவகுத்தது என்றும் ஐக்கிய அமெரிக்கா இன்று இலங்கைக்கு எதிராகச் செயற்படுகிறது என்றும் அப்பேச்சாளர் குறிப்பிட்டார். உண்மை யாதெனில் 2009இன் பின்னர் இலங்கை அரசாங்கம் தான் மாறான போக்கில் செல்கிறது. ஐ.நா.மனித உரிமைகள் பேரவையோ, ஐக்கிய அமெரிக்காவோ தம்மை மாற்றிக்கொள்ளவில்லை. இலங்கை அரசு எழுத்துவடிவிலும், வாய்மொழியாகவும் கூறிய உறுதி மொழிகளை காற்றில் பறக்கவிட்டது; போரினால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கத் தவறியது. போரை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்த பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு அரசு (DONALD CAMP) நடவடிக்கை எடுக்கவில்லை. ஐக்கிய அமெரிக்க தூதரக அதிகாரி டொனால்ட் காம்ப் இதுவே அரசின் பெருந்தவறு என்று குறிப்பிட்டிருந்தார். தயான் ஜயதிலகவும் இவ்வாறே குறிப்பிட்டிருந்ததை நான் மேலே மேற்கோள் காட்டியிருந்தேன்.

மேற்குநாடுகள் குறிப்பாக அமெரிக்காவும் ஐக்கிய இராச்சியமும் ஜெனீவாவில் நடந்து கொள்ளும் விதம், இலங்கை நிலைமை பற்றி அவை இவ்வளவு தூரம் ஏன் கரிசனை எடுக்கின்றன. ஏன், மனித உரிமைகள் பேரவையில் தீவிரமாக நடந்துகொள்கின்றன என்பது பற்றிப் பல விளக்கங்கள் உள்ளன. இதற்கான பிரதான காரணம் இலங்கைக்குள் நடைபெறும் அதிருப்தி தரும் நிகழ்வுகள்தாம். ஒரு குறுகிய வட்டத்தின் சிலர்ஆட்சி இங்கு இறுகிக் கொண்டு செல்கிறது. இந்தக்குழு தன் ஆட்சியைப் பலப்படுத்துவதற்கு மதவாத-இனவாத பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலை முன்வைத்துச் செயற்படுகிறது. புலம்பெயர் தமிழர்களை இயக்கிக் கொண்டிருப்பதும் அவர்களின் நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதும் இந்த யதார்த்த நிலைமையே. 1983 இல் உலக அரசியல் சூழலில் இல்லாத புதிய விடயம் ஒன்று இப்போது புகுந்துள்ளது. மனித உரிமைகள் விவகாரம் பற்றிய பிரச்சினை இன்று அழுத்தம் பெறுகிறது. கடந்த இரண்டு தசாப்தங்களாக வலுப்பெற்று வருகின்ற இந்த விடயம் R 2 P என்று கணினிப் பரிபாஷையில் கூறப்படும் பாதுகாப்பு வழங்குவதற்கான உரிமை (Right to protect) என்ற தத்துவம் முழுமையான வடிவைப்பெற உதவியது. ஒபாமா நிர்வாகத்தில் மனித உரிமைகள் விடயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதொரு மாற்றம். இர்ராஜாங்கச் செயலாளராக இருந்த கிலாரி கிளின்டன் இவ்விடயத்தில் தீவிரம் காட்டினார். அவரைத் தொடர்ந்து சுசான் றைஸ். (தேசிய பாதுகாப்பு ஆலோசகர்) சமந்தா பவர் (SAMANTHA POWER) ஐ.நா.தூதுவர் ஆகிய 'பெண்கள் செயலணி' (Action women) அமெரிக்காவில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

மேலே நான் கூறியவை எல்லாம் நான் எழுப்பிய கேள்விக்குரிய விடைகளைக் கூறவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் செயற்பாடுகள் இலங்கைக்கு உதவியாக அமைந்து நன்மை தருமா அல்லது முன்னேற்றத்திற்கு அவை முட்டுக் கட்டையாக அமையப் போகின்றனவா என்பதே நம்முன் உள்ள பிரதான கேள்வி. இலங்கையின் களநிலைமை எப்படி அமையும் என்பதைப் பொறுத்தே இவை உதவியா அல்லது உபத்திரமா என்பதற்கான விடை இருக்கும் என்பதே எனது கருத்து. இலங்கைக்குள் என்ன நடக்கப்போகிறது; ஜனாதிபதி ராஜபக்ஷ எவ்வாறு நடந்துகொள்வார்; தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அவர் எப்படி நடந்துகொள்ளப்போகிறார், மத்திய அரசுடனும் வடமாகாண சபையுடனும் அவர் ஒத்துழைப்பாரா என்பனவே முக்கியமான விடயங்கள். ஜனாதிபதி நினைத்தால் ஆட்சி அதிகாரத்தைப் பங்கிட்டுக்கொண்டுள்ள சிறுகுழுவையும், மதவாதிகளையும் அப்புறப் படுத்தி விடலாம். ஆனால் அவர் அப்படிச்செய்யமாட்டார். அவர் அவ்வாறு செய்யாதவிடத்து எழப்போகும் முக்கிய பிரச்சினை இதுதான். தன்னைத் திருத்திக் கொள்வதை விடுத்து மேலும் மேலும் மோசமான போக்கில் சென்று கொண்டிருக்கும் அரசை சர்வதேச சமூகம் கண்காணித்துக் கொண்டிருப்பதான அவமதிப்பைச் சிங்கள மக்கள் எவ்வளவு காலத்திற்குத் தாங்கிக் கொள்வார்கள் என்று கேள்வி எழுகிறது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் 'ஜெனிங்ஸும் ஜெனீவாவும்' (JENNINGS AND GENEVA) என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை நான் எழுதினேன். (பல்கலைக்கழக உபவேந்தராகவும், 1947 அரசியல் யாப்பை வரைந்தவருமான சேர் ஐவர் ஜெனிங்ஸ் அவர்களின் பேத்தி இலங்கை வந்து போனார்) இதனால் இலங்கையின் பழந்தலைமுறை அறிவு ஜீவிகள் வர்க்கத்திடம் கடந்து போன அந்தக் காலம் பற்றிய நினைவுத் துயர் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. நானும் இந்த நினைவுத் துயர் தந்த கிளர்ச்சியில் பங்குகொண்டுஎழுதினேன்.

*(28ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்




# இந்தியாவின் குழப்பநிலையும் வஞ்சகமும்



குமார் டேவிட்

## ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் இந்தியா ஒத்துழைக்குமா?

இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டங்களில் இடம்பெற்ற போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வதேச விசாரணையொன்றைக் கோரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்துக்கு ஆதரவளிப்பதிலிருந்து விலகி இந்தியா வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் விட்டமை எவரும் எதிர்பார்த்திராத ஒரு குட்டிக்காரணமாகும். காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கமும் அடுத்து அரசாங்கத்தை அமைப்பதில் நம்பிக்கை கொண்டிருக்கும் பாரதிய ஜனதாக் கட்சியும் இதில் உடந்தையாகவே செயற்பட்டிருக்கின்றன. மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்களுக்காக இந்தியாவின் முன்னைய அரசாங்கங்களையும் தற்போதைய அரசாங்கத்தையும் எதிர்காலத்தில் பதவிக்கு வரக்கூடிய அரசாங்கங்களையும் சிக்கவைக்கக்கூடிய குறிப்பிட்ட சில பந்திகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தில் இருப்பதன் விளைவாகத் தோன்றிய அக்கறையே இந்தியா வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் விலகியிருந்ததற்கான காரணமென்று நாம் நம்பவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது ஓரளவுக்கு உண்மையாக இருக்கக்கூடும். ஆனால், தங்களது சொந்த மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களை தேசிய சுயாதிபத்தியம் என்ற போர்வைக்குள் மறைக்க முயற்சிக்கின்ற அரசாங்கங்கள் தொடர்பில் எவரும் ஏன் மென்மையாக நடந்து கொள்ள வேண்டும்? இன்று நாம் உலகமயமாக்கப்பட்ட கிரகமொன்றில் வாழ்கிறோம். அங்கு தேசிய சுயாதிபத்தியம் என்பது சர்வாதிகாரிகளைப் பொறுத்தவரை ஒரு ஆசாரக்கேடான விடயமாக இருக்கிறது. அத்துடன் அரசுகள் எண்ணிறைந்த பாவங்களை மூடி மறைப்பதற்கு முயற்சித்துக்கொண்டிருக்கின்றன.

இரு காரணங்களுக்காகவே கொழும்புடனான உறவுகளைப் பழுதாக்கிக் கொள்ளாமல் தொடர்ந்தும் கதவுகளைத் திறந்து வைத்திருக்க டில்லி விரும்பியதாகக் கூறப்படுகிறது. சீனாவின் அரவணைப்புக்குள் ராஜபக்ஷவை மேலும் தள்ளிவிடக் கூடாது என்பது ஒரு காரணம். மற்றையது தமிழர்களின் பிரச்சினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தப்பட்ட விவகாரங்களில் முன்னேற்றம் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. கொழும்பை மேலும் வருடிவிடுவதன் மூலம் மேலும் முன்னேற்றங்களை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கை. இரண்டாவது காரணத்தில் டில்லிக்கு உண்மையிலேயே நம்பிக்கை இருக்கிறது என்று என்னால் நம்பமுடியவில்லை. ஆனால், ஜெனீவாவில் டில்லி அதைத்தான் கூறியது. உண்மையில் டில்லி பல தடவைகள் பொய் கூறிவந்திருக்கிறது.



தீர்மானம் நடைமுறை சாத்தியமற்றது என்று ஜெனீவாவில் இந்திய பிரதிநிதி டிலிப் சின்ஹா தெரிவித்தார். தீர்மானத்தை நடைமுறைப் படுத்தும் விடயத்தில் இந்தியா ஒத்துழைக்கப் போவதில்லை என்பதைத்தான் அவர் ராஜதந்திர மொழியில் அவ்வாறு கூறினாரோ

இந்தியாவின் நம்பிக்கையிலும் எதிர்பார்ப்புகளிலும் இருக்கக்கூடிய அபத்தம் சில தினங்களுக்குள்ளாகவே வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்திற்கு பிறகு ஒருவாரம் கழித்து பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்ட வர்த்தமானிப் பிரகடனத்தில் வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழர்கள் மத்தியில் இயங்குகின்ற 15 அல்லது 20 'அமைப்புகள் தடை செய்யப்பட்டிருப்பதுடன், 400க்கும் அதிகமான தமிழர்கள் இலங்கைக்கு வர முடியாதவர்கள் என்றும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆவேசத்துக்கு ஒரே காரணம் இந்த தமிழ் அமைப்புகளும் ஆட்களும் தான் அரசாங்கத்துக்கு எதிராக பிரசாரங்களை முன்னெடுத்து மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு பங்களிப்புச் செய்தவர்கள் என்பதேயாகும். அவர்களை பயங்கரவாதிகள் என்று அரசாங்கம் வகைப்படுத்தியிருக்கிறது. இது பகுத்தறிவுக்குப் பொருந்தாத ஆத்திரத்தின் வெளிப்பாடே தவிர வேறு ஒன்றுமில்லை. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேறச்செய்த அமெரிக்காவினதும் பிரிட்டனினதும் அரசாங்கங்களையும் பயங்கரவாத அமைப்புகள் என்று கோதாபய ஏன் வகைப்படுத்திப் பிரகடனம் செய்யவில்லையோ? ராஜபக்ஷ அரசாங்கத்துடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை நடத்தி அதைக் கொண்டு சாதகமான நடவடிக்கைகளை எடுக்கச் செய்வதற்கு செல்வாக்கைச் செலுத்த முடியுமென்று நம்பிக்கொண்டிருந்த இந்தியாவுக்கு பெரும் அசௌகரிய த்தை ஏற்படுத்தக்கூடிய காரியம் செய்யப்பட்டிருக்கிறது. இதுதான் ஆக்கபூர்வமான ஈடுபாடும் ஊடாட்டமுமோ?

இந்தியாவின் நடத்தையினால் இலங்கையில் ஏற்பட்டிருக்கக்கூடிய விளைவு என்று பார்த்தால், அது நெருக்கடிக்குள்ளாகிக்கொண்டிருந்த ராஜபக்ஷ குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு இந்தியா முயன்று கொண்டிருக்கிறது என்பதேயாகும். 'நாம் எந்தத் தவறையும் செய்யவில்லை. இந்தியா கூட அவ்வாறு கூறிவிட்டதே' என்றும் 'எதுவும் நடக்கப்போவதில்லை. பயமே வேண்டாம், சிக்கல் எதுவும் ஏற்படுமேயானால், எப்படியென்றாலும் எம்மைப் பாதுகாக்க இந்தியா இருக்கிறது' என்றும் அரசாங்கத்தினால் அதன் பிரஜைகளுக்குக் கூறக்கூடியதாக இருக்கிறது. சர்வதேச விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டு அது கடுமையடையும் பட்சத்தில் ராஜபக்ஷாக்களைக் காப்பாற்றுவதற்கான உடன்படிக்கையொன்று இந்தியாவுடன் ஏற்கனவே செய்யப்பட்டுவிட்டதோ தெரியவில்லை. தீர்மானம் நடைமுறைச் சாத்தியமற்றது என்று ஜெனீவாவில் இந்தியப் பிரதிநிதி டிலிப் சின்ஹா அறிவித்தார். தீர்மானத்தை நடைமுறைப் படுத்தும் விடயத்தில் இந்தியா ஒத்துழைக்கப்போவதில்லை என்பதைத் தான் அவர் இராஜதந்திரப் பாஷையில் அவ்வாறு கூறினாரோ? அவ்வாறு தீர்மான நடைமுறைப்படுத்தலை இந்தியா மலினப்படுத்துமாக இருந்தால் அது அருவருக்கத்தக்கதாகும்.

ஐ.நா.மனித உரிமைகள் தீர்மானத்தின் நடைமுறைப்படுத்தலுக்குரிய பகுதிகள் (Operative parts) பிரிவு 2 இலும் பிரிவு 10 (பி) யிலும் உள்ளடங்கியிருக்கின்றன. அவற்றைக் கீழே தருகிறேன்.

பிரிவு 2; சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாயச் சட்டம் ஆகியவற்றுடன் தொடர்புடைய விடயங்களில் நடைபெற்றதாகக் கூறப்படும் உரிமை மீறல்கள் குறித்து நம்பகமானதும் சுதந்திரமானதுமான விசாரணைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்வதோடு, அத்தகைய உரிமை மீறல்களை நிகழ்த்தியோரைப் பொறுப்புக் கூறவைத்தல், இலங்கையில் மனித உரிமை மீறல்களும் துஷ்பிரயோகங்களும் தொடருவதைத் தடுக்க வேண்டும். அத்துடன் ஐ.நா.மனித உரிமைகள் ஆணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளர் அலுவலகத்தின் அறிக்கைக ளில் குறிப்பிடப்பட்டிருக்கும் சிபாரி சுகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

பிரிவு 10 (பி); இருதரப்பினராலும் (இலங்கை அரசாங்கமும் விடுத லைப் புலிகளும்) இழைக்கப்பட்டதா கக் குற்றஞ்சுமத்தப்படும் மனித உரிமை மீறல்களையும் அவற்றோடு தொடர்புடைய ஏனைய குற்றச்செ யல்களையும் பற்றிய பூரண விசார ணையொன்றை நடத்துவதற்கும், இவ்விசாரணை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைக்கால த்தை உள்ளடக்கியதாக இருப்ப தோடு, நிகழ்த்தப்பட்டதாகக் குற் றஞ்சாட்டப்படும் உரிமை மீறல்கள், குற்றங்கள் என்பன குறித்த நேர்வுக ளையும் அவை நடைபெற்ற சூழ்நி லைகளையும் பற்றிய உண்மைகளை நிறுவுவதாக இருக்க வேண்டும் என வும் தண்டனையில் இருந்து தப்பிக் கொள்வதைத் தவிர்ப்பதாயும் பொறு ப்புக்கூறுதலை உறுதிசெய்வதாயும் இருக்கவேண்டுமெனவும் பொருத்த மான நிபுணர்களதும் விசேட நடைமு றைகளுக்கான அதிகாரம் கொண்ட வர்களினதும் உதவியுடன் இந்த விசாரணை நடத்தப்படவேண்டுமெ னவும் விதந்துரைத்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அதி காரமளிக்கப்படுகிறது.

இவ்விரு பிரிவுகளும் ஒன்றை யொன்று ஒத்திருப்பவை போன்று காணப்படுகின்றன. சுதந்திரமானதும் நம்பகமானதுமான விசாரணையை நடத்துவதற்கு விடுக்கப்பட்டிருக்கும் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரிக்கும் பட்சத்தில் மாத்திரமா அல்லது உள்நாட்டு விசாரணை சுதந் திரமானதாகவும் நம்பகமானதாகவும் இல்லாத பட்சத்தில் மாத்திரமா ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாள ரின் விசாரணை முன்னெடுக்கப் படும். இது தெளிவற்றதாக இருக்கி றது. பிரிவு 10இன் முதல்வசனம் இந்தத் தெளிவற்ற தன்மை வேண்டு மென்றே ஏற்படுத்தப்பட்டது என்று எண்ண வைக்கிறது. 'தற்போது இடம் பெறுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான ஐ.நா.மனித உரிமை கள் ஆணையாளரின் சிபாரிசுகளை யும் முடிவுகளையும் உருப்படியான விளைவுகளுடன் கூடிய நம்பகமான தேசியச் செயன்முறையொன்று இல் லாதபட்சத்தில் சர்வதேச விசாரணை யொன்றுக்கான பொறிமுறைக்கான தேவையையும் கருத்தில் எடுத்து...', என்று அந்த வசனம் தொடங்குகிறது.

நம்பகமான தேசியப் பொறிமுறை யொன்று இல்லாத பட்சத்தில் மாத் திரம் தான் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் விசாரணை முன் னெடுக்கப்படுமா? அல்லது தேசிய பொறிமுறைகள் உண்மையை நிலை நாட்டவும் நீதியைச் சாதிக்கவும் தொடர்ச்சியாகத் தவறிவிட்டன என்று நவிபிள்ளையின் அறிக்கை யில் கூறப்பட்டிருப்பது இங்கு வெறு மனே ஒரு குறிப்புரையாக மாத்திரம் சுட்டிக் காட்டப்படுகிறதா? உள் நாட்டு விசாரணை ஒரு பித்தலாட்ட மாகப் போகும் பட்சத்தில்தான் சர்வ தேச விசாரணை இடம்பெறுமா? அல்லது சர்வதேச விசாரணை புறம் பான விடயம். உள்நாட்டு விசார ணைக்கு சமாந்தரமாக ஏககாலத்தில் அதுவும் முன்னெடுக்கப்படுமா? இந்த விடயங்களில் தெளிவற்ற தன்மை வேண்டுமென்றே ஏற்படுத் தப்பட்டிருக்கிறது. உள்நாட்டு விசார ணையொன்று ஆரம்பமான பிறகு அதைப் போலியானது என்று பிரக டனம் செய்வது சாத்தியமில்லை. ஆனால், அந்த விசாரணை திருப்திக ரமானதாக இல்லையென்றால், பிரிவு 10 (பி) யின் கீழ் ஒரு விசாரணையை ஆரம்பிப்பது சாத்தியம். ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரும் மேற்கு லக நாடுகளும் உரிய தருணம் வரும் வரை வேறு திட்டத்தை மறைத்து வைத்துக்கொண்டிருக்கின்றன போல் தோன்றுகிறது.

அரசாங்கம் ஒத்துழைப்பது போன்று பாசாங்கு செய்வதன் மூலம் காலத்தை இழுத்தடித்து தற்காலிக மாக தன்னைக் காப்பாற்றிக்கொள்ளக் கூடும். இவையெல்லாவற்றுக்கும் மத்தியில் மனங்குழம்பிப் போன சில தமிழர்கள் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானமும் இந்தியா வின் அங்குமிங்குமான ஊசலாட் டமும் பொருத்தமற்றவை என்று கூறு கிறார்கள். இவற்றிலிருந்து பிரயோ சுமான விளைவு எதுவும் வரப்போ வதில்லை என்று வாதாடுகிறார்கள். விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்ப தில் டில்லியும் வாஷிங்டனும் செய்த உதவிகளினால் அவர்கள் மனவேத னைக்குள்ளாகியிருக்கிறார்கள். உண் மையிலேயே, வடமாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் நடத்துவதற்கு இந்தியாவினதும் சர்வதேச சமூகத்தி னதும் நெருக்குதல்கள் அவசியமான வையாக இருந்தன. அரசியல் தீர் வொன்றைப் பெறுவதற்கும் அதே நெருக்குதல்கள் அவசியமாகத் தேவைப்படும். ஐ.நா.மனித உரிமை கள் பேரவையில் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் இந்தியா செய்த வஞ்சகத்துக்குப் பிறகும் கூட இதை நான் கூறுகின்றேன்.

வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத இந்தியாவின் செயலின் விளைவு பாதிப்பைத் தரக்கூடியதாகும். அது உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் முகத் தில் அறைந்ததைப் போன்ற செய லாகும். அதனால் தமிழர்கள் ஆத்திர மடைந்திருக்கிறார்கள். அதேவேளை பேரினவாதிகளும் ராஜபக்ஷ குடும் பமும் உற்சாகமடைந்திருக்கிறார்கள். என்றாலும், அதிர்ஷ்டவசமாக தீர் மானம் கணிசமான பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டு விட்டது. அதனால் இந்தியாவின் துரோகச் செயலின் தாக்கம் அங்கு முடிவைத் தீர்மானிக்கிற ஒன்றாக இருக்கவில்லை. சர்வதேச விசா ரணை எவ்வாறு இடம்பெறக்கூடு மென்பது பற்றி கொழும்பில் அதிகார பீடத்தினர் மத்தியில் அக்கறை தோன்றியிருக்கிறது. விசாரணையை கொழும்பு நிராகரித்தால், தடைகள் விதிக்கப்படுவதற்கு அது வழிவகுக் கக்கூடும் என்ற அச்சமும் உண்டு. கிறிமினல் குற்றச்சாட்டுகள் சுமத்தப் படக்கூடிய சாத்தியம் குறித்து ராஜ பக்ஷாக்களும் உயர்மட்ட அதிகாரி களும் அச்சமடைந்திருக்கிறார்கள்.

கடைசிவரைக்கும் இந்தியா வித்தி யாசமான முறையிலேயே நடந்து

(28ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



*கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து*

# ஜெனீவாவுக்கும் மாகாணசபை தேர்தல்களுக்கும் பிறகு...

ஜெனீவா தீர்மானம் தொடர்பாக மாகாண சபைத் தேர்தல்களின் போது கிளப்பிவிடப்பட்ட அமளிக்கு மத்தியில் தங்களுக்கு ஆதரவாக மக்கள் அமோகமாக வாக்களிப்பார்கள் என்று ஆட்சியாளர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. இனிமேலும்கூட அத்தகைய பிரசாரங்கள் பயனளிக்கப் போவதில்லை

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் மூன்றாவது தடவையாகக் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்றும் மேல்மாகாண சபைக்கும் தென்மாகாண சபைக்கும் நடத்தப்பட்ட தேர்தல்கள் தொடர்பான அமளிகள் தணிந்துள்ள நிலையில், அடுத்து நடக்க வேண்டியவை பற்றியும் அடுத்து நடக்கக்கூடியவை பற்றியும் விளங்கிக் கொள்வதற்கு சில தெளிவுகளைப் பெற வேண்டியிருக்கிறது. தேர்தல் பரபரப்பில் மக்கள் இருந்த வேளையிலேயே தீர்மானம் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்டது. அத்துடன், தடைவிதிப்புகள் மற்றும் மின்சாரக் கதிரை பற்றிய வெருட்டல் கதைகளும் கட்டிவிடப்பட்டன. அவை போதாதென்று ஜெனீவா வாக்கெடுப்பு பற்றி வேறுயாருமல்ல வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்களே அபத்தமான எண்கணிப்பு ஒன்றை வெளியிட்டதையும் காணக்கூடியதாக இருந்தது. இவையெல்லாம் காரணமாகத்தான் சில விடயங்கள் தொடர்பில் தெளிவு தேவை என்று நான் கருதுகிறேன்.

பல்வேறு கதைகளைச் சொல்லி மக்களை வெருட்டி தங்களுக்குச் சார்பாக வாக்களிக்க வைக்க ஆட்சியாளர்கள் முயற்சித்தார்கள் என்பது வெளிப்படையானது. முதலில் வந்த கதை மின்சாரக் கதிரை பற்றியது. இதை பல தடவைகள் அரசாங்கம் கூறிவிட்டது. போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களுக்காக மின்சாரக் கதிரையில் அமரவைத்து தண்டனை வழங்குவதானால், அதை தங்களுக்குத் தான் செய்ய வேண்டும் என்று மின்சாரக்கதிரைத் தகுதிக்கு சரத்பொன்சேகா தொடக்கம் பலர் உரிமை கோரினார்கள். ஆனால், தான் பிரதமராக இருந்தபோது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை அமைப்பதற்கு கொண்டுவரப்பட்ட றோம் உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திடவில்லையென்பதால் எவருமே மின்சாரக் கதிரைக்குப் பயப் படத் தேவையில்லை, நிம்மதியாகவும் பாதுகாப்பாகவும் இரவில் நித்திரை கொள்ளலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெம்பூட்டினார். அவர் சொன்னது உண்மையே. ஏனென்றால் றோம் உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திடவில்லை. அதனால் இலங்கை விவகாரத்தை றோமுக்கு பாரப்படுத்துவதானால் ஒரு தீர்மானத்தின் மூலமாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையினால் மாத்திரமே செய்யமுடியும். எது எவ்வாறிருந்தாலும், இந்த மட்டத்தில் மரணதண்டனை கிடையாது.

நாடொன்றுக்கு எதிராக தடைகளை விதிப்பதாக இருந்தால் கூட அதையும் ஐ.நா.பாதுகாப்புச் சபையினாலேயே செய்ய முடியும். தடைவிதிப்பதற்கான தீர்மானமொன்றுக்கு ஐ.நா.வின் சகல உறுப்பு நாடுகளும் இணங்க வேண்டும். விடயத்தைச் சுருக்கமாகச் சொல்வதானால், இலங்கை மீதோ அல்லது வேறு எந்தவொரு உறுப்பு நாட்டின் மீதோ கட்டாயத் தடைகளை ஐ.நா. மனித உரிமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரவையினால் விதிக்க முடியாது. இலங்கைக்கு எதிரான தற்போதைய தீர்மானத்தைக் கொண்டுவந்த நாடுகள் தடைகள் குறித்துச் சிந்திக்கவில்லை என்று வெகு ஆரம்பத்திலேயே தெளிவுபடுத்திவிட்டன. தடைகளை விதிப்பது குறித்து வேண்டுமானால், தனிப்பட்ட ரீதியில் நாடுகள் தீர்மானிக்க முடியும். ஆனால், அண்மைய எதிர்காலத்தில் அவ்வாறு எதுவும் நடப்பதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை என்றே தோன்றுகிறது.

விசாரணைக்கான வழிமுறைகளை ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் அடையாளம் கண்டு விசாரணைக்குழுவை அமைப்பதே இப்போது செய்ய வேண்டிய காரியமாக இருக்கிறது. எந்தவொரு சர்வதேச ஆணைக்குழுவும் இலங்கைக்கு வருகை தருவதற்கு அரசாங்கம் அனுமதிக்கப்போவதில்லை என்பது தெளிவானது, இலங்கைக்கு வெளியே ஏற்கனவே கிடைக்கக் கூடியதாக இருக்கும் தகவல்களையும் இலங்கைக்குள் இருந்து தொடர்புகொள்வதற்கு துணிச்சல் கொள்ளக்கூடிய

**புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலுள்ள அமைப்புகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடை வடக்கு, கிழக்கிற்கும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கும் நிதி வருவதைத்தடுப்பதற்கு உதவும். அத்துடன் இந்த அமைப்புக்களுடனான தொடர்புகளை காரணம் காட்டி சர்வதேச விசாரணையை சட்டவிரோதமானது என்று காண்பிப்பதற்கான முயற்சிக்கும் இது உதவும்.**

எவரும் வழங்கக்கூடிய எந்த சான்றையும் வைத்துக் கொண்டே ஆணைக்குழு செயற்பட வேண்டியிருக்கும்.

அரசாங்கம் செய்கின்ற பிரசாரங்கள், மற்றும் வெளியுறவு அமைச்சரும் வேறுபல ஏவலர்களும் செய்கின்ற திரிபுபடுத்தல்களுக்குப் புறம்பாக தீர்மானம் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற வேண்டுமானால், மனதிற்கொள்ள வேண்டியதும் படித்துக்கொள்ள வேண்டியதுமான விடயம் ஒன்றுள்ளது. அது வெளியுறவுக் கொள்கை சம்பந்தப்பட்டதாகும். பிரத்தியேகமாக ஒரு நாட்டின் பெயரைக் குறிப்பிட்டுக்கொண்டு வரப்படக்கூடிய (Single country Resolution) தீர்மானங்களை விரும்பாத போதிலும், இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பில் கொண்டிருக்கக்கூடிய அவநம்பிக்கை உணர்வுகளுக்கு மத்தியிலும், ஆபிரிக்கா, மத்திய அமெரிக்கா, லத்தீன் அமெரி க்கா, மற்றும் ஆசியாவைச் சேர்ந்த (Global South) 12 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தன. ஆம், அவை அமெரிக்காவுடன் சேர்ந்து வாக்களிக்கவில்லை. மிகமுக்கியமாகக் கவனிக்க வேண்டியது இந்த நாடுகள் ராஜபக்ஷ ஆட்சிக்கு ஆதரவாகவும் வாக்களிக்கவில்லை என்பதாகும். ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் தீர்மானமொன்று சாதாரணப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுவது இந்த நாடுகள் சகலதுக்கும் நிச்சயமாகத் தெரியும். எனவே, வாக்களிப்பில் கலந்துகொள்ளாத செயல் தீர்மானமொன்று நிறைவேறுவதற்கு முட்டுக்கட்டையாக இல்லாமல் நிறைவேற்றப்படுவதற்கே துணை புரிவதாக அமைகிறது. எனவே அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையை வகுப்பவர்கள் நகைப்புக்கிடமான மயிரிழை நுணுக்க வாதங்களில் ஈடுபடுவதற்குப் பதிலாக இந்த உண்மையை அக்கறையுடன் கவனத்தில் எடுக்க வேண்டும்.

அரசாங்கம் கொள்கையை மறுபரிசீலனை செய்வதற்கான சாத்தியங்கள் தொலைவானதாகவும் மங்கலானதாகவுமே இருக்கின்றன. ஜெனீவாவில் வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்னதாகவே தீர்மானம் தொடர்பில் அரசாங்கத்தின் பிரதிபலிப்பு எத்தகையதாக இருக்கும் என்பதை நாமெல்லோரும் முன்னுணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக குரல் கொடுக்கின்றவர்களான ஜெயகுமாரியும் அவரது மகளும் வணபிதா பிரவீன் மகேசனும் ருக்கி பெர்னாண்டோவும் கைதுசெய்யப்பட்டனர். வணபிதாவும் ருக்கியும் பின்னர் விடுவிக்கப்பட்டனர். இலங்கைக்குள்ளே கூட விடுதலைப்புலிகள் மீளவும் தங்களை அணிதிரட்டுவதாகவும் அதற்கான பொறுப்புகள் கோபி என்ற ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் எமக்குக் கூறப்படுகிறது. இந்த கோபிக்கு ஜெயகுமாரியும் மகளும் புகலிடம் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. என்றாலும் கடுமையாக இராணுவமயப்படுத்தப்பட்டிருக்கும் வன்னியில் இன்னமும் கோபி கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த சம்பவங்களைத் தொடர்ந்து வடக்கில் தொடர்ச்சியாக சுற்றிவளைப்புகளும் தேடுதல் நடவடிக்கைகளும் இடம் பெறுகின்றன. 30-40க்கும் இடைப்பட்ட எண்ணிக்கையானவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன. இறுதியாக, புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் உள்ள 16 அமைப்புகள் ஐ.நா.வின் பயங்கரவாத எதிர்ப்பு தீர்மானமொன்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. அந்த அமைப்புகளுக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாகக் காரணம் கூறியே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. உள்நாட்டிலோ அல்லது வெளியிலோ அந்த அமைப்புகளுடன் தொடர்பை வைத்துக்கொள்வது தடுக்கப்படுகிறது. அவ்வாறு தொடர்பை வைத்தால் கடுமையான தண்டனைகளை எதிர்நோக்க நேரிடும்.

தேசியரீதியிலும் சர்வதேச ரீதியிலும் தகவல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவுவதைத் தடுப்பதே அரசாங்கத்தின் முன்னுரிமைக்குரிய விடயமாக இருக்கிறது போலத் தோன்றுகிறது. அரசாங்கத்தின் பிரசாரங்களுக்கு எதிராக சிவில் சமூகத்தினால் முன்வைக்கப்படக் கூடிய கருத்துகளை தடுக்க இது உதவும் என்று ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கிறார்கள். புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் உள்ள அமைப்புகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடை வடக்கு, கிழக்கிற்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் நிதிவருவதைத் தடுப்பதற்கு உதவும். அத்துடன் இந்த அமைப்புகளுடனான தொடர்புகளைக் காரணம் காட்டி சர்வதேச விசாரணையை சட்டவிரோதமானது என்று காண்பிப்பதற்கான முயற்சிக்கும் இது உதவும். விடுதலைப் புலிகளுக்குச் சார்பான வட்டாரங்களினால் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டதே விசாரணை என்று அரசாங்கம் வாதிடவும் செய்யும்.

பல்வேறு வகைப்பட்ட அமைப்புகளை ஒரே மாதிரியானவை என்று நோக்கி பிரிவினைவாத முத்திரை குத்துகின்ற வேலை ஒன்றும் தற்செயலானதல்ல. புலம்பெயர் தமிழர் அரசியலைப் பற்றி நுணிப்புல்லறிவு கொண்ட ஒருவர் கூட, (அந்த அமைப்புகள் சகலவற்றையும் தீவிரவாதத்திற்குள் தள்ளிவிட்டு ஓரங்கட்டுவதை இலக்காகக் கொண்டிருக்காவிட்டால்) அவை சகலவற்றையும் ஒரே மாதிரியானவையாக நோக்கமாட்டார். அவர்கள் மத்தியில் மிதவாதிகள் இல்லையா? அடுத்து தடை செய்யப்படப்போவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பா? அப்படியானால், நல்லிணக்கத்துக்கு நேரப் போவது என்ன? கே.பி.யுடனும் கருணாவுடனுமான ஊடாட்டத்தின் மூலமாக மாத்திரம் நல்லிணக்கம் சாதிக்கப்படப்போகிறதா?

ஏன் இத்தகைய நடவடிக்கைகளில் அரசாங்கம் இறங்கியிருக்கிறது என்று கேள்வி எழுகிறது. இந்த நடவடிக்கைகள் அவசியமானவை தானா? பொருத்தமானவைதானா? இந்த நடவடிக்கைகள் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் காட்டுகின்ற சமிக்ஞைகள் எவை? வடக்கில் மேற்கொள்ளப்படுகின்ற தேடுதல் மற்றும் தடுத்துவைப்பு நடவடிக்கைகளும் தடைவிதிப்புகளும் அப்பகுதி மக்களின் வாழ்வில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன என்பதை கிடைக்கக்கூடிய தகவல்கள் மூலமாக உணரக் கூடியதாகவுள்ளது. சமாதானம் நிலைநாட்டப்பட்ட ஒரு நாடு போன்று இலங்கை இல்லை என்ற செய்தி தான் சர்வதேச சமூகத்துக்குக் கொடுக்கப்படுகிறது.

கடுமையான இராணுவ மயமாக்கலையும் கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் நியாயப்படுத்துவதற்கான காரியங்களாகவே இவை செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அத்துடன் இத்தகைய நடவடிக்கைகளில் இறங்குவதன் மூலமாக, மீண்டும் தலைகாட்டும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தேசத்தைப் பாதுகாப்பவர்கள் தாங்களே என்று ஆட்சியாளர்கள் தங்களைக் காட்டிக் கொள்ளவும் முடியும். இதனால் அரசியல் ஆதாயம் பெறக்கூடியதாக இருக்கும்.

**இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வந்த நாடுகள் தடைகள் குறித்து சிந்திக்கவில்லையென்று ஆரம்பத்திலேயே தெளிவுபடுத்தி விட்டன. தடைகளை விதிப்பது குறித்து வேண்டுமானால் தனிப்பட்ட ரீதியில் நாடுகள் தீர்மானிக்க முடியும். ஆனால் அண்மைய எதிர்காலத்தில் அவ்வாறு எதுவும் நடப்பதற்கான சாத்தியப்பாடுகள் எதுவும் இல்லை**

ஜெனீவாத் தீர்மானம் தொடர்பாகவும் அதனால் நாட்டின் சுயாதிபத்தியத்துக்கு ஏற்படுகின்ற அச்சுறுத்தல் தொடர்பாகவும் மாகாண சபைத் தேர்தலின் போது அரசாங்கத்தினால் கிளப்பிவிடப்பட்ட அமளியை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, தேர்தலில் தங்களுக்கு ஆதரவாக மக்கள் அமோகமாக வாக்களிப்பர் என்று ஆட்சியாளர்கள் எதிர்பார்த்திருக்கக்கூடும். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை. இனிமேலும் அத்தகைய பிரசாரங்கள் பயனளிக்கப்போவதில்லை என்பதை இது உணர்த்துகிறது. ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடத்தப்படுமானால் அது வேறுபட்ட கதையாகவே இருக்கும். ஆனால், அதேவேளை, தேர்தல் முடிவுகளைப் பற்றி எதிர்க்கட்சிகள் என்னதான் கூறினாலும், தற்போதைய அரசாங்கத்துக்கு மாற்றீடாக தங்களால் விளங்க முடியுமென்று பிரதான எதிர்க்கட்சி மக்களை நம்ப வைக்க வேண்டியிருக்கிறது.

அரசியல் ரீதியில் நாடு ஒரு வேண்டத்தகாத நிலையில் இருக்கிறது. அரசாங்கத்தின் செல்வாக்கு குறைந்து கொண்டு போகிறது. தேர்தல்களில் வெற்றி பெறுவதற்குத் தேவையான அளவுக்கு எதிரணியின் செல்வாக்கு அதிகரித்துச் செல்லவில்லை.

உண்மையை நிலைநாட்டுதல் மற்றும் பொறுப்புக்கூறலுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மாற்றங்களுக்கான வாய்ப்புகள் தென்படுகின்றன. அந்த வாய்ப்புகள் பலரின் திருப்திக்கு ஏற்றவையாக இல்லாமலிருக்கலாம். ஆனால், அதுமாத்திரமே தற்போதைக்கு மாற்றத்துக்கான ஒரே வழியாக இருக்கக்கூடும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# புலிமுக அரசியலும் புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையும்

அரசாங்கம் விதித்திருக்கும் தடையின் மூலம் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் செயற்பாடுகளுக்கு பெரிய அளவில் நெருக்கடி ஏற்படப்போவதில்லை. ஏனென்றால் தடை செய்யப்பட்டிருக்கும் ஒருசில அமைப்புகளைத் தவிர பெரும்பாலானவை குறித்த நாடுகளின் சட்ட பூர்வமாகவே இயங்கி வருகின்றன. அத்துடன் அந்த நாடுகளின் ஆளும் பிரிவினருடனும் தொடர்புகளைப் பேணி வருகின்றன



யதீந்திரா

தடை இலங்கைக்குள்ளும் வெளிநாடுகளிலும் சில தாக்கங்களை ஏற்படுத்தவல்லது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் தமிழ் அரசியல் தரப்பினர் தங்களுக்குள் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி இதிலிருந்து நாம் எதை கற்றுக் கொள்ளப்போகிறோம் என்பதுதான்

அரசாங்கம் அவ்வப்போது மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளால் அது எத்தகைய நன்மைகளை அடைந்தது அல்லது அடைய முற்படுகின்றது என்பதை ஊகிப்பது கடினமானாலும், அரசாங்கத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும் சோர்வடைந்து கொண்டிருக்கும் தமிழ் அரசியல் தரப்பினருக்கு, உற்சாக மருந்தூட்டுவதாக அமைந்துவிடுகிறது என்பது மட்டும் உண்மை. ஜெனீவா விவாதங்கள் சூடு தணியத் தொடங்கிக்கொண்டிருந்த வேளையில், மீண்டும் புலம்பெயர் அமைப்புகள் மீதான தடை பிறிதொரு விவாதக் களத்தைத் திறந்து வைத்திருக்கிறது. புலம்பெயர் அமைப்புகள் மீதான தடை ஜனநாயக விரோதமானது என்னும் நோக்கில் சிலர் விவாதிக்க, வேறு சிலரோ, அரசாங்கம் ஜெனீவாவில் தோல்வியடைந்ததற்குப் பதிலடியாகவே இவ்வாறானதொரு நடவடிக்கையில் இறங்கியிருப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் சாதாரண மக்கள் மத்தியில் இந்த விடயம் பெரிய அதிர்வலைகள் எதனையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. தற்போது அரசாங்கத்தால் பயங்கரவாதத்துடன் தொடர்பானவர்கள் என்னும் தரப்படுத்தலின் கீழ் தடைசெய்யப்பட்டிருக்கும் 16 அமைப்புகளில், உலகத் தமிழர் பேரவை, பிரித்தானிய தமிழர் பேரவை, கனடியத் தமிழ்க் காங்கிரஸ், நாடுகடந்த தமிழீழ அரசு போன்ற ஒரு சில அமைப்புகளைத் தவிர ஏனைய அமைப்புகள் குறித்து (இலங்கையிலிருந்து வெளிவரும்) தமிழ் ஊடகச் சூழலில் கூட எவரும் பிரஸ்தாபித்ததாகச் சான்றில்லை.

மேற்குறிப்பிட்ட அமைப்புகள் எவையும், இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்துவரும் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் அக்கறையுடையவர்களாக, தங்களை நிரூபித்திருக்கவும் இல்லை. மாறாக அழிவுற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தொடர்ச்சியாக அல்லது அதன் நிழல் அமைப்பாகவே தங்களைக் காண்பித்துக் கொண்டனர். பிரபாகரனின் அரசியல் இலக்கே தங்களுடைய அரசியல் இலக்கென்றும் சூளுரைத்தனர். ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப்பகிர்வு குறித்து இவர்கள் ஒரு போதும் வாய்திறந்ததேயில்லை. ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளின் அழிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து பல பொய்யான தகவல்களை புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் பரப்பிக்கொண்டிருந்த மேற்படி அமைப்பின் அங்கத்தவர்கள் வருடங்கள் நகர, நகர மெதுவாக தங்கள் பொய்யுரைத்தலிலிருந்து, தாங்களாகவே விலகிக்கொண்டனர். ஆனாலும் புலிக்கொடியை தொடர்ந்தும் இறுகப் பற்றிக் கொண்டனர். இந்தப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டே, அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பயங்கரவாத அமைப்புகளைத் தடுப்பதற்கான உலகளாவிய ஒத்துழைப்பிற்கான ஏற்பாட்டின் கீழ் மேற்படி 16 அமைப்புகளைத் தடைசெய்திருக்கிறது. இவ்வாறான விடயங்களை முன்னுணர்ந்த சில ஆய்வாளர்களும், ஊடகவியலாளர்களும் புலிவாதத்தைக் கைவிடுமாறும், அதனை கைக்கொள்வதன் மூலம் தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையையும் செய்ய முடியாதென்றும், கடந்த நான்கு வருடங்களாக வாதிட்டு வந்திருக்கின்றனர். ஆனால், அவ்வாறு யதார்த்தத்தை உணர்ந்து செயற்படுமாறு வலியுறுத்தியவர்கள் அனைவரும் துரோகிகளென்றும் அரசாங்கத்தின் ஆட்களென்றும் எள்ளிநகையாடப்பட்டனர். ஆனால் அவ்வாறானவர்கள் முன்னுணர்ந்ததே இன்று நடைபெற்றிருக்கின்றது.

ஜெனீவா விவகாரத்திற்குப் பதிலடியாகவே அரசாங்கம் இத்தகையதொரு முடிவை எடுத்ததாக சிலர் வாதிடுவதில் ஓரளவு உண்மையிருப்பினும் கூட, அது முழு உண்மையாக இருக்க வாய்ப்பில்லை. அரசாங்கம் மீண்டும் புலிகளுக்கு புத்துயிரளிக்கும் முயற்சியில் மேற்படி புலம்பெயர் அமைப்புகள் ஈடுபட்டுவருவதாக குற்றம்சாட்டியிருக்கிறது. இத்தகைய சூழலில்தான் மேற்படி அமைப்புகளை இலங்கைக்குள் தடை செய்யும் முடிவை அறிவித்திருக்கின்றது. ஜெனீவாவில் ஒரு பிரேரணையை எதிர்கொண்டிருக்கும் சூழலிலேயே தர்மபுரத்தில் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இதனைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல கொழும்பிலும் கூட சிலரை அடையாளம் காட்டுமாறு, மக்களின் ஒத்துழைப்பு கோரப்பட்டிருந்தன. அரசாங்கத்தை விமர்சிப்போர் இவை அனைத்தும் அரசாங்கத்தின் திட்டமிட்ட சோடிப்புகள் என்று கூறி, ஒரே வரியில் அனைத்தையும் நிராகரிக்கின்றனர். ஜெனீவாவில் அரசாங்கம் ஒரு பிரேரணையை எதிர்கொண்டிருக்கின்ற சூழலில் இது போன்றதொரு சோடிப்பைச் செய்வதன் மூலம் அரசாங்கம் நன்மைகளைப் பெற முடியுமா? யுத்த வெற்றியை மூலதனமாக்கியிருக்கும் அரசாங்கம், தனது வெற்றியைத் தானே நீர்த்துப்போகச் செய்யும் வகையில் செயற்படுமா? இப்படியும் சிலர் கேள்விகளைத் தொடுக்கின்றனர்.

ஆனால் இந்தத் தடையின் மூலம் புலம்பெயர் அமைப்புகளின் செயற்பாடுகளுக்கு பெரியளவில் தடைகள் ஏற்படப்போவதில்லை. ஏனெனில், தற்போது தடைசெய்யப்பட்டிருக்கும் ஒருசில அமைப்புகளைத் தவிர பெரும்பாலான அமைப்புகள் அனைத்தும் குறித்த நாடுகளில் சட்டபூர்வமாகவே இயங்கிவருகின்றன. தவிர, குறித்த நாடுகளின் ஆளும் பிரிவினருடனும் தொடர்புகளைப் பேணி வருகின்றன. அந்த நாடுகளின் பதிவுகளில் குறித்த அமைப்புகள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கான சான்றுகளும் இல்லை. எனவே இந்தப் பின்னணியில், அரசாங்கத்தின் தடையின் மூலம் ஐரோப்பிய நாடுகளில் இயங்கும் புலம்பெயர் அமைப்புகளின் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. ஆனால், பிறிதொரு நெருக்கடியைக் கொடுக்கலாம். ஐரோப்பாவிற்கு வெளியில், குறித்த அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் பயணம் செய்யும் போது, அந்த நாடுகளுக்கும் இலங்கை பாதுகாப்புப் பிரிவிற்கும் இடையில் இருக்கும் தொடர்புகளைக் கொண்டு, இலங்கை அரசு விரும்பும்பட்சத்தில், அவர்களைக் கைது செய்து இலங்கைக்குக் கொண்டுவர முடியும். முன்னர் அவ்வாறானதொரு பாதுகாப்பு ஒத்துழைப்பின் பேரிலேயே, விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்வனவாளர் கே.பி மலேசியாவில் வைத்து கைதுசெய்யப்பட்டு, இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தார். எனவே இந்தப் பின்னணியில் குறித்த தடையின் கனதியை நோக்கினால், தற்போது பட்டியலிடப்பட்ட புலம்பெயர் அமைப்புகளின் அங்கத்தவர்கள் முன்னரைப் போன்று சுதந்திரமாக உலகமெல்லாம் சுற்றித்திரிய முடியாமல் போகும். உதாரணமாக, புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகள் கிழக்காசிய நாடுகளுக்குள் நுழையுமிடத்து, அந்நாட்டின் புலனாய்வுத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையின் ஒத்துழைப்புடன் அவர்களைக் கைது செய்யக்கூடிய வாய்ப்பை தற்போதைய தடை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. வெளி நிலைமைகள் இவ்வாறென்றால், உள்ளக நிலைமைகளில் அரசாங்கம் மேலும் சில இறுக்கங்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பும், இத்தடை மூலம் உருவாகியிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் அழிவின் பின்னரான, கடந்த நான்கு வருட கால தமிழர் அரசியலை உற்றுநோக்கினால், ஒரு விடயம் வெள்ளிடைமலையாகும். பெரும்பான்மையான தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சரி, கூட்டமைப்பின் எதிரணியாகச் செயற்பட்டுவரும் கஜேந்திரகுமார் அணியினரும் சரி, புலம்பெயர் அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகின்றனர். குறிப்பாக கஜேந்திர குமார் அணியினர் புலம்பெயர் அமைப்புகளுடன் கூடுதல் நெருக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். இதற்கு அவர்கள் முன்னிறுத்திவரும் அரசியல் நிலைப்பாடும் ஒரு காரணமாகும். கஜன் அணியினர், ஒப்பீட்டளவில் கூட்டமைப்பை விடவும் கவர்ச்சிகரமான அரசியல் கோஷத்தைக் கொண்டிருப்பதும், புலிகளை எட்டிப்பிடித்து விடும் தூரத்தில் உள்ளவர்களாக தங்களைக் காண்பித்துவருவதுமே மேற்படி கூடுதல் நெருக்கத்திற்குக் காரணமாகும். எனவே தற்போது நடைமுறைக்கு வந்திருக்கும் தடையின் மூலம் கூட்டமைப்பின் மீதும், கஜேந்திரகுமார் அணியினர் மீதும், அரசாங்கம் சில கட்டுப்பாடுகளை விதிக்க முடியும்.

கூட்டமைப்பைப் பொறுத்தவரையில், அதனை வழிநடத்திச் செல்லும் இரா.சம்பந்தன் புலிகளின் ஆதரவாளராக இல்லாது விட்டாலும் கூட, கூட்டமைப்பில் உள்ள ஒரு சிலர் தங்களை புலிமுக அரசியலுக்குரியவர்களாகவே காண்பித்து வருகின்றனர். அவ்வாறானவர்கள் மீது இத்தடை நிச்சயம் பாயும். மேலும் கூட்டமைப்பின் தலைவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது, குறித்த அமைப்புகளுடன் தொடர்புகளைப் பேணுகின்றனர். இறுதியான ஜெனீவா நிகழ்வின் போதும், சுமந்திரன் கனடிய தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த ஹரி சங்கரி மற்றும் உலகத் தமிழர் பேரவையைச் சேர்ந்த சுரேன் சுரேந்திரன் ஆகியோருடன் இணைந்தே, இலங்கையின் மீதான அமெரிக்கப் பிரேரணைக்கு ஆதரவு திரட்டும் பிரசாரங்களில் ஈடுபட்டிருந்தார். அதேவேளை தேர்தல்களின் போது, சில புலம்பெயர் அமைப்புகள் கூட்டமைப்பிற்கும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பினருக்கும் நிதி சேகரிப்பில் ஈடுபடுகி ன்றன. கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போதும், கனடிய தமிழ்க் காங்கிரஸ் பெருந்தொகையான நிதியை கூட்டமைப்பிற்கு வழங்கியிருந்தது. இதேபோன்று வடக்கு மாகாணசபைத் தேர்தலின் போதும் கூட்டமைப்பின் தலைவர்கள் புலம்பெயர் நாடுகளில் நேரடியாகவே நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், தற்போதைய தடை, இவ்வாறான நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது எனலாம். இத்தடையை மீறி கூட்டமைப்போ அல்லது கஜன் அணியினரோ, புலம்பெயர் அமைப்புகளுடன் தொடர்புகளைப் பேண முற்படுவார்களாயின், அவர்கள் மீது அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். மொத்தத்தில் புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையானது, வெளிநாடுகளிலும் இலங்கைக்குள்ளும் சில தாக்கங்களை ஏற்படுத்த வல்லது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், தமிழ் அரசியல் தரப்பினர் தங்களுக்குள் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி, இதிலிருந்து நாங்கள் எதைக் கற்றுக்கொள்ளப் போகின்றோம்.■

---

***(19ஆம் பக்கத்தொடர்ச்சி...)***

இலங்கையின் அரசியல் யாப்பு வரலாற்றை நன்கு அறிந்து வைத்திருக்கும் எவருக்கும் ஒரு விடயம் நன்குபுரியும். 1948 இல் இலங்கையின் இனங்களுக்கு இடையே ஒரு உடன்பாடு (A Communal Compact) அடையப்பட முடியுமாயின் அரசியல் யாப்பின் ஏனைய விடயங்களில் பிரச்சினை எதுவுமே இல்லை என்ற நிலை இருந்தது. அன்றைய நிலை அப்படி. 2012 இல் ஜெனீவாவில் இலங்கை எப்படி நடந்து கொண்டது? (ஒரு உடன்பாட்டுக்கு இணங்கினால் மிச்சம் உள்ளவை யாவும் சின்னஞ்சிறு பிரச்சினைகள் அல்லவா-) 1948 இன் பின்னுள்ள இந்த வரலாற்று இடைவெளியில் நடந்தவற்றுக்குப் பரிகாரம் காண ராஜபக்ஷவால் முடியுமா? இந்த நோக்கில் பார்க்கும் போது ஐ.நா. தீர்மானம் தலையீடாக அமைவதென்பதை விடப் பொருத்தமற்றதாகத்தான் இருக்கப் போகிறது என்றே கூறலாம். இது பொருத்தமான தக்கதொரு தலையீடா? இலங்கை இதனால் நன்மை பெறுமா? என்பது சந்தேகமாகவே இருக்கிறது.■

---

***(22ஆம் பக்கத்தொடர்ச்சி...)***

கொண்டது. மார்ச் 27 ஆம் திகதி ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இந்தியாவின் பிரதிநிதி நெளித்து வளைத்து தெரிவித்த கருத்துகள் பரிதாபகரமானவையாக இருந்தன. தீர்மானம் உள்விவகாரங்களில் தலையீடு செய்யும் தன்மை வாய்ந்ததாக இருப்பதாக அவர் கூறியது கவனிக்கத்தக்கது. தேசிய பொறிமுறைகள் உண்மையை நிலைநாட்டவும் நீதியைச்சாதிக்கவும் தொடர்ச்சியாகத் தவறிவிட்டன என்ற நவிபிள்ளையின் மதிப்பீட்டுடன் ஒத்துப் போகத் தயாராயிருப்பதைப் போன்ற சமிக்ஞையை முதலில் இந்தியா காட்டியது. அந்த மதிப்பீட்டை ஏற்றுக் கொள்வதானால், சர்வதேச பொறிமுறை தேவை. சர்வதேசம் என்பது உள்நாடு அல்லவே. டில்லியின் வாதங்களில் தர்க்க குறைபாடு இருக்கிறதல்லவா?■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# இந்தியாவின் நடுநிலை கூறும் செய்தி



கடந்த இரண்டு ஆண்டுகளைப் போல் இல்லாமல், இந்த முறை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்தின் மீதான வாக்களிப்பில் இந்தியா நடுநிலை வகித்தது. இது இலங்கை அரசுக்கு ஆச்சரியத்தையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அதிர்ச்சியையும் கொடுத்திருக்கிறது. ஆனால், ஜெனீவாவில் இந்தியாவின் நிலைமை குறித்து கூர்ந்து கவனித்து வந்திருந்தால், ஆச்சரியத்திற்கோ, அதிர்ச்சிக்கோ இடமிருந்திருக்காது. மாறாக, இந்தியா இந்த முடிவை தவிர்த்திருக்க முடியாது என்பது முதலிலேயே புரிந்திருக்கும்.

இலங்கை அரசு ஆகட்டும், கூட்டமைப்பு ஆகட்டும், அல்லது தீர்மானத்தை முன்வைத்து ஆதரவு திரட்டிய அமெரிக்கா போன்ற மேலை நாடுகள் ஆகட்டும், ஜெனீவாத் தீர்மானத்தை அரசியல் ரீதியாக மட்டுமே பார்த்தார்கள். கடந்த இரண்டு ஆண்டுகள் இந்தியாவின் ஆதரவு வாக்கையும் 'தமிழ் நாடு அரசியல்' என்ற போர்வைக்குள் உள்ளடக்கி அவர்கள் பார்த்து வந்ததால், அவர்களால் இந்தியாவின் முடிவின் பின்னால் இருந்த கொள்கை மற்றும் தார்மீக அடிப்படைகளை கடந்த காலத்திலும் சரி, தற்போதும் சரி புரிந்துகொள்ள முடியவில்லை.

ஜெனீவா
வாக்கெடுப்பு
புறக்கணிப்பால்
மட்டும் இந்தியா
கூறுவதை
இலங்கை அரசு
ஏற்றுக்கொள்ளும்
என்று அர்த்தமில்லை


என்.சத்தியமூர்த்தி

அவர்கள் அனைவரது புரிதல்களுக்கும் எதிராக, கடந்த இரண்டு வருடங்களிலும் சரி, இந்த முறையும் சரி, இந்தியா ஒரே கொள்கையின் அடிப்படையில் மட்டுமே அமெரிக்கத் தீர்மானத்தை அணுகியதால், முடிவு எடுப்பதில் குழப்பம் இருக்கவில்லை. உள்நாட்டில், அது குறித்து சர்ச்சைகளுக்கோ, விவாதங்களுக்கோ கூட தேவை இருக்கவில்லை. ஆனால், கூட்டமைப்பு உள்ளிட்ட பிறர் அனைவரும் கடந்த வருடங்களைப் போலவே இந்த முறையும் இந்தியாவின் நிலைப்பாட்டை தமிழ் நாடு ஒட்டிய அரசியல் ரீதியாக மட்டுமே அணுகியதால், அவர்களுக்கு ஆச்சரியமும், அதிர்ச்சியும் மட்டுமே மிஞ்சியது.

கடந்த 2012ஆம் ஆண்டு, இலங்கைக்கு எதிரான தீர்மான வரைவை அமெரிக்கா முன் வைத்தபோது, அதுவும் தற்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் போன்றே, இனப்போர் காலத்தில் மனித உரிமைகள் மீறல்கள் குறித்து, சுதந்திரமான விசாரணை வேண்டும் என்றே கூறியது. அது இலங்கையின் இறையாண்மைக்கு எதிரானது என்பதால், அதனை இந்தியா ஆதரிக்காது என்ற நிலைமை தோன்றியது. அன்று, இந்தியாவின் ஆதரவு முக்கியம் என்ற எண்ணத்தில், இலங்கை அரசு நியமித்த 'கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு' சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் மட்டுமே அடுத்த கட்ட நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்று அமெரிக்கா முடிவு செய்தது. அந்த நிலைமையே கடந்த ஆண்டும் தொடர்ந்தது.

ஆனால், இந்த முறை, ஆணைக் குழு அறிக்கைக்கு அப்பால் சென்று, தனிப்பட்ட விசாரணை தேவை என்று வாக்களிப்பிற்காக சமர்ப்பிக் கப்பட்ட தீர்மான வரைவு கூறியது. இது, மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் தொடங்கும் சமயத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரைவில் இருந்து முற்றிலும் மாறுபட்டு இருந்தது. இன்னும் சொல்லப்போனால், வாக்களிக்கப்பட்ட வரைவில், ஆணைக்குழுவின் அறிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்த போதிலும், தனிப்பட்ட விசாரணை தேவை என்றும் அது கூறியது, இந்தியாவை குழப்பத்தில் ஆழ்த்தும் முயற்சியாகவே இருந்தது எனலாம். இடைப்பட்ட காலத்தில், புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் அளித்த அழுத்தத்தின் காரணமாக, அமெரிக்காவின் முக்கிய நட்பு நாடான இங்கிலாந்தின் கட்டாயத்தின் பேரிலே இவ்வாறு நிகழ்ந்தது என்று கருத இடம் இருக்கிறது. உக்ரெயின்-கிறிமியா விடயத்தில் எதிர்பார்த்ததையும் விட, ' ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்ததால்,' இங்கிலாந்து உட்பட்ட ஐரோப்பிய நாடுகளை தாஜா செய்யவேண்டிய கட்டாயம் அமெரிக்காவிற்கு இருந்தது என்பதும் உண்மை. அந்தந்த நாடுகளில், புலம்பெயர்ந்த தமிழர்களின் வாக்கும், இலங்கை அரசிற்கு எதிரான அவர்களது பிரசார உத்திகள்

**இலங்கைப்பிரச்சினையில் இந்தியா எந்த விதத்திலும் தன்னிச்சையாகவோ தன்னலம் கருதியோ செயற்படவில்லை என்ற உண்மையை சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ளும் வாய்ப்பை கடந்த மூன்றாண்டுகளாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வாக்களிப்பில் இந்தியாவின் பங்கு உறுதி செய்யப்பட்டுள்ளது**

முக்கியமானதும் மற்றொரு காரணம்.

அந்த வகையில், கடந்த காலத் தீர்மானங்களிலிருந்து இந்த முறை வரைவு மாறியிருந்ததால், இந்தியா தனது நாள்பட்ட, கொள்கை ரீதியான முடிவை எடுக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது. அந்த வகையில், கடந்த காலத் தீர்மானங்களின் மூலம் இந்தியாவின் கையைக் கட்டிவிட்டு தற்போது தன்னிச்சையாக அமெரிக்கா செயல்பட நினைத்ததால், இந்தியாவால் இத்தகைய முடிவை மட்டுமே எடுத்திருக்க முடியும் என்பதே உண்மையும் கூட.

## நிகழ்காலத்தின் நிதர்சன உண்மை

தனது பங்கிற்கு கூட்டமைப்பும் பாராளுமன்றத் தேர்தல் சமயத்தில், தமிழ் நாடு அரசியல் நிர்ப்பந்தங்கள் காரணமாக, இந்தியா தனது நிலைமையை மாற்றிக்கொள்ள முடியாது என்ற ஒரு முடிவிற்கு முன்னரே வந்திருந்தது. அதன் காரணமாக, அவர்களால் நிகழ்காலத்தின் நிதர்சன உண்மையை, ஆய்ந்து உணர்ந்து புரிந்து கொள்ள முடியவில்லை. அதனால் தானோ என்னவோ, இனப்போர் முடிவிற்கு வந்த பிந்தைய காலங்களைப் போல் அல்லாது, தற்போது இடைப்பட்ட காலகட்டத்தில், கூட்டமைப்பு, இந்திய அரசு அமைப்பிற்கு அப்பால் சென்று, குறிப்பிட்ட அரசியல் தலைமைகளுடன் இந்தியாவின் தேர்தலை மனதில் நிறுத்தி, இந்திய அரசியல் எதிர்காலத்தை மனதில் கொண்டு, அளவளாவத் துவங்கியது என்றும் கருத இடம் இருக்கிறது. இந்திய அரசியலின் எதிர்காலம் குறித்து சிந்தித்த கூட்டமைப்பு, தங்களது நிகழ்காலத்தை மறந்தமை வருந்தத்தக்கது.

இனப்போர் உச்சத்தில் இருந்த போது, 2009-ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றத் தேர்தலுக்கு முந்தைய காலகட்டத்திலும், கூட்டமைப்பு இது போன்ற தவறைச் செய்தது. அதே தவறை கூட்டமைப்பு தற்போது செய்வதற்குத் தூண்டியது யார் என்பதும், காரணமானோர் யார் என்பதும், புரியாத புதிர். காரணம், இனப் பிரச்சினைக்கான தீர்வு காண்பதில் இந்தியாவை விட அமெரிக்கா உட்பட்ட சர்வதேச சமூகத்திற்கு அதிக அக்கறை உள்ளது என்ற முடிவை கூட்டமைப்பு எடுத்துச் செயல்பட்டது. அதனால் பாதிக்கப்பட்டது இலங்கைத் தமிழ்ச் சமுதாயம் என்பது வருந்தத்தக்க விடயம்.

இதில், இந்தியாவின் சுய கௌரவம் என்று எதுவும் இல்லை. அதனால் தான், கடந்த காலங்களில், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது. அன்று, தமிழ் மக்களின் கோரிக்கைக்கு செவிமடுத்து, அவர்கள் தங்களுக்கு நன்மை என்று கருதுகிறார்கள் என்ற நோக்கத்தில் இந்தியா அத்தகைய முடிவை எடுத்தது. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக மனித உரிமைகள் பேரவையும் அதன் தலைவரான நவி பிள்ளையும் தங்களது சட்டதிட்டங்களின் மூலம் இலங்கை அரசிற்கும், நாட்டின் இறையாண்மைக்கும், தமிழர்களின் எதிர்காலத்திற்கும் ஊறு விளைவிக்கிறார்கள் என்பது நிதர்சனமாக புரியத் தொடங்கியது.

இந்தப் புரிதல், கூட்டமைப்பிற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது. அது அவ்வாறாக அமையவில்லை என்பதும் வருந்தத்தக்க விடயம். ஆனால், கூட்டமைப்பு உண்மையைப் புரிந்து செயல்படும்வரை, காத்திருக்க இந்தியாவால் முடியவில்லை. ஏனெனில், பிரச்சினை சுதந்திரம் அடைந்த காலம் தொட்டே, தொடர்ந்து வரும் இந்தியாவின் கொள்கை மற்றும் தார்மீக நிலைப்பாடு குறித்தது.

### அரசியல் தீர்வும் அதிகாரப் பரவலும்

இலங்கைத் தமிழர்கள் நலனிற்கும் எதிர்காலத்திற்கும், அரசியல் தீர்வே மிக முக்கியம் என்று இந்தியா இன்றளவும் கருதுகிறது. அந்தக் காரணத்தினால் தான், இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே, இலங்கையில் பதின்மூன்றாவது அரசியல் சட்ட திருத்தத்தின் மூலம் அதிகாரப் பரவலுக்கு வகை செய்தது. அதே நிலைப்பாட்டை, கடந்த இரண்டு ஆண்டுகளிலும் ஜெனீவாத் தீர்மானத்தில் அமெரிக்காவும் சேர்த்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அது போன்றே, இந்த வருடத்திய தீர்மானத்திலும் பதின்மூன்றாவது திருத்தம் குறித்த அதே வாசகங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அது 'ஊறுகாய்' வகையைச் சேர்ந்தது என்றும், அது இந்தியாவை தர்க்க ரீதியாக ஒத்துழைக்க வைப்பதற்கான அமெரிக்காவின் உத்தியே என்பதும் தெளிவாகப் புரிவதற்கு அதிக காலம் ஆகவில்லை. அமெரிக்கா உட்பட்ட மேலை நாடுகள், 'போர்க் குற்றம்' என்ற பெயரில் அதிகாரப் பரவலுக்கு இலங்கை அரசை நிர்ப்பந்திப்பார்கள் என்ற எண்ணம் கனவாகவே முடிந்தது.

மாறாக, போர்க் குற்றம் என்ற பெயரில், இலங்கையின் ஆளுமையைக் குறிவைத்து காய் நகர்த்தப்பட்ட போது, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை முன்னெடுப்பது இந்தியாவால் மட்டுமே முடியும் என்ற நிலைமையும் மீண்டும் தோன்றியது. அந்த வகையிலும், ஜெனீவா குறித்த இந்தியாவின் முடிவும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றே. இது குறித்தும், இந்தியா அடுத்த முன்னெடுப்புகளைச் செய்ய வேண்டிய கட்டாயமும், சூழ்நிலையும் தோன்றியுள்ளது. இதனைக் கூட்டமைப்பு உட்பட்ட தமிழ் அரசியல் மற்றும் சமூகத் தலைமைகள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

**இலங்கை விடயத்தில் இந்தியாவால் வெற்றிப்பெற முடியாத நிலையில் மற்றைய நாடுகளோ சர்வதேச சமூகமோ வெற்றி பெற்று விட்டதில்லை என்பதே நோர்வே போன்ற நாடுகளின் கடந்த கால பங்களிப்பு நிரூபிக்கும் சரித்திர உண்மையாகும்**

ஜெனீவா வாக்கெடுப்புப் புறக்கணிப்பால் மட்டும் இந்தியா கூறுவதை இலங்கை அரசு தரப்பு ஏற்றுக் கொள்ளும் என்றல்ல பொருள். இலங்கை அரசோடும், தமிழ் அரசியல் தலைமையோடும், சரிசமமாகப் பேச்சுவார்த்தை நடத்தும் வாய்ப்பு இந்தியாவிற்கு மீண்டும் தோன்றியுள்ளது என்று வேண்டுமானால் கூறிக் கொள்ளலாம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதும், அதனைப் புறந்தள்ளுவதும் இலங்கை அரசு மற்றும் கூட்டமைப்புத் தலைமைகளிடமே உள்ளது.

### இந்தியாவும் தென்னாபிரிக்காவும்

எங்களுக்குள் பிரச்சினை இருந்ததால் தான், இனப் போர் நிகழ்ந்தது. அதனால் தான், தற்போதும் நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு ஏற்படுவது முடியாமல் போனது. எனவே, அண்டை நாடான இந்தியா மற்றும் சர்வதேச சமூகம் எங்களிடையே பேச்சுவார்த்தை மீண்டும் தொடர வழி செய்திருக்க வேண்டும் என்று இலங்கையில் எந்தத் தரப்பும் மீண்டும் ஒரு முறை கூறி விடமுடியாது. அந்த வகையில் இந்தியாவின் உதவியை அந்த இரு தரப்புகளும் கோரலாம். கோருவதற்கான வாய்ப்புகள் தோன்றியுள்ளன.

அந்த வகையில், இந்த முறை ஜெனீவா வாக்களிப்பில், தென்னாபிரிக்காவும் நடுநிலை வகித்துள்ளது. தற்போதைய நிலையில், அரசு மற்றும் கூட்டமைப்பு ஆகிய இரு தரப்பினரிடையேயும் சுமுகமான சூழ்நிலை உருவாவதற்கு தென்னாபிரிக்கா முயற்சி செய்து வருவது புதிய செய்தி அல்ல. இதுபோன்ற பிரச்சினையில், பிரச்சினைக்குரிய காலத்தில், ஒருங்கிணைப்புப் பணியைச் செய்ய முன்வரும் நாடுகள் தங்களது நடுநிலைமையைத் தெளிவாக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள்.

இந்தியாவின் நிலையும் இது போன்றது தான். இன்னும் சொல்லப் போனால், தென்னாபிரிக்காவை விட இந்தியாவின் பங்களிப்பு மிக முக்கியமானது. அவசியமானதும் கூட. தென்னாபிரிக்காவைப் போல் இல்லாமல், இலங்கையில் உள்ள பல்வேறு தரப்பினர் குறித்தும் இந்தியா முழு அளவில் அறிந்து வைத்துள்ளது. அவர்கள் அனைவருடனும் தொடர்ந்து தொடர்பில் இருந்து வந்துள்ளது.

இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மை மீது, இலங்கையைப் போலவே இந்தியாவிற்கும் முழு அக்கறை உள்ளது. இது தென்னாபிரிக்கா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு முழுமையாகப் பொருந்தாது. இதற்கும் மேலாக, இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் மீது பிற எல்லா நாடுகளையும் விட, இந்தியாவிற்கு அக்கறையும் கரிசனையும் உள்ளது.

*(39ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்

# இராணுவ மயமாக்கலின் அரசியல்



றிச்சார்ட் செய்மூர்

**அரசாங்கங்கள் உள்நாட்டில் கைக் கொள்ளும் பலவிதமான தந்திரோபாய நடவடிக்கைகளோடு இராணுவச்செலவு என்ற விடயம் பிணைக்கப்பட்டுள்ளது. இராணுவப் போட்டியின் உண்மையான பரிணாமங்களை விளக்குவதற்கு அர சாங்கம் அதன் கொள்கை பிரசாரத்தை யாரை நோக்கி முன்வைக்கிறது என்று பார்க்க வேண்டும்**

சீனாவில் இராணுவச் செலவு உயர்ந்து செல்வது பற்றி பத்திரிகைகள் கொட்டை எழுத்துகளில் செய்தி வெளியிடுகின்றன. பிராந்தியத்தின் சக்திமிக்க ஜப்பான் தேசத்துடன் சீனா போட்டி போடுவதும் அதன் பயங்கர விளைவுகளும் பற்றிய கரிசனை இதற்கு ஒரு காரணம் ஆயினும் சீனாவின் இராணுவச் செலவு உயர்வு இராணுவத்தின் ஆழ்நிலைக் கட்டமைப்பை மாற்றப்போகிறது. இது மிகவும் முக்கியமான விடயம்.

சீனாவின் உள்நாட்டுச் செலவின் பங்கீட்டில் ஆச்சரி யத்திற்குரிய விடயங்கள் உள்ளன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 40% இராணுவச் செலவாகப் போகிறது. அமெரிக்காவில் கூட இது 20 %த்தை தாண்டவில்லை. இதைவிட ஆச்சரியமான விடயம் இராணுவச் செல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் அளவு ஆகும். 2012இல் 1.756 றில்லியின் டொலர்களாக இது இருந்தது. கெடுபிடி யுத்தத்திற்குப் பின்னர் சீனாவிற்குக் கிடைக்கவிருந்த 'சமாதானத்தின் லாபம்' பொய்யாகிப் போனது. உலகமட்டத்திலும் இராணுவச் செலவு 1989 இற்கு முந்திய உயர்மட்டத்திற்குச் சென்றது. பயங்கரவாதத்திற்கு எதிரான போர், இராணுவப் பலப்பரீட்சை என்பன இதற்கான காரணங்கள். 2011ஆம் ஆண்டில் உலகின் இராணுவச் செலவு இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் உச்சத்தைத் தொட்டது.

நாடுகள் இவ்வாறு உயர்ந்தளவு இராணுவ முதலீடுகளை ஏன் செய்கின்றன? அரசுகள் என்றால் அதிகாரத்தைப் பலப்படுத்தும் நிறுவனங்கள் என்பதுதான் காரணமா? வரி அறவீட்டில் மேன்மிகை தோன்றும்போது இராணுவச்செலவுகளைச் செய்வதிலும் யுத்தம் பற்றி கனவு காண்பதிலும் அவை ஈடுபடுகின்றனவா?

இராணுவமயமாக்கல் என்பது பொதுவாக முதலாளித்துவத்தின் பிரிக்க முடியாத ஓர் அம்சம். முதலாளித்துவத்தின் புரியாத புதிர்களில் ஒன்று அது உலகுதழுவி நிற்கும் ஒரு முறைமை என்பதே. அது உற்பத்தியையும் பரிவர்த்தனையையும் தேசிய எல்லைகளைத்தாண்டி விரிவடையச் செய்கிறது. ஆயினும் மூலதன அலகுகள் (பெரும் கம்பனிகள்) தேசிய எல்லைக்குள்ளேயே இருக்கின்றன. அவற்றுக்கு வேண்டிய உட்கட்டமைப்புகள், தொழிற்படை, ஆரம்ப முதலீட்டுத் தளம் என்பன தேசத்துக்குள் மட்டுப்பட்டதாக இருக்கும். பூகோள மயமாக்கம் என்ற செயல்முறை கூட தேசிய அரசுகளின் முதலீடு, வழிகாட்டல் என்பனவற்றின் படிதான் நடைபெறுகிறது. பெரும் முதலாளித்துவக் கூட்டுத்தாபனங்கள் தேசிய அரசுகளுடன் எந்தளவுக்குப் பிணைக்கப்பட்டுள்ளனவோ, அதே அளவுக்கு பூகோள மட்டத்தில் தமது அரசுகள் நடத்தும் போட்டிச் சண்டையிலும் அவை அக்கறை கொண்டனவாய் உள்ளன. இராணுவ ரீதியில் முன்னணியில் நிற்க வேண்டும் என்ற தேவை முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த தர்க்கத்தின் பாற்பட்ட விடயமாகும்.

இது ஓர் அடிப்படையான தத்துவம். இதைத் தெரிந்துகொண்ட போதும் எமது கேள்விக்கான விடை கிடைக்கவில்லை. புவிசார் அரசியல் போட்டி றில்லியன் கணக்கான டொலர் முதலீட்டை இராணுவச் செலவுக்காக ஒதுக்க வேண்டிய கட்டாயத்தை உண்டாக்குவதாகக் கூறுவதற்கு நியாயம் இல்லை. இரண்டு உலக யுத்தங்களுக்குப் பிற்பட்ட உலகின் பூகோள அரசியலில் பாதுகாப்புச்செலவு ஆழ வேரூன்றிய ஓர் அம்சமாகிவிட்டதை விளங்கிக்கொள்ள வேண்டும். அப்போது தான் ஏன் இப்படி நடக்கிறது என்பதை ஓரளவு புரிந்துகொள்ள முடியும். இரண்டாம் உலகயுத்தத்தின் போதும் அதற்குப் பிந்திய கெடுபிடி யுத்த காலத்திலும் இராணுவச் செலவு பற்றிய ஓர் உண்மை தெளிவாயிற்று. அது யாதெனில், இராணுவ முரண்பாடும் மோதலும் காரணமாக ஏற்படுவதில்லை என்பதே. போர்களினை நடத்துவது எப்படி நிறுவனமயப்படுத்தப்படுகிறதோ அவ்வாறே இராணுவச் செலவும் நிறுவனமயப்படுத்தப்படுகிறது. வெளிப்படத்தெரியும் நோக்கம் எதுவோ அதனோடு சம் பந்தமில்லாத பல விடயங்களோடு இராணுவச் செலவு பிணைக்கப்படுகிறது.

இராணுவ முதலீடுகளைப் பேரளவில் மேற்கொள்ளும் அரசுகள் நாட்டின் பொருளாதாரத்தின் முக்கிய துறைகள் மீது தம் ஆதிக்கத்தைப் பலப்படுத்திக்கொள்கின்றன. திட்டமிடல், ஒருங்கிணைத்தல் ஆகிய பணிகளில் அரசின் பங்கை அதிகரித்துக் கொள்கின்றன. அரசிற்கு தகைமை உள்ளது என்பதையும் காட்டிக் கொள்கின்றன. இல்லாவிடில் அரசின் தலையீடு 'சோஷலிசம்' என்று குறை கூறப்படும். ஐக்கிய அமெரிக்காவில் சுதந்திர தொழில் முயற்சி என்ற நாமத்துடன் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றங்கள் அரச முதலீடாகவே ஆரம்பத்தில் இருந்தன. அவை பாதுகாப்பு என்ற பதாகையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கு நல்ல உதாரணம் அப்பிள் தொழில்நுட்ப புத்தாக்கக் கண்டு பிடிப்புகளாகும். (Apple's Innovations)




அடுத்ததாக நாம் கவனிக்க வேண்டிய விடயம், இராணுவ முதலீடுகள் பொருளாதார வளர்ச்சியின் பெறுபேறாக ஏற்படுவன அல்ல என்பதாகும். அவை பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டுதலாக இருப்பதுண்டு. இராணுவ முதலீட்டின் வரலாறு சிக்கல் மிகுந்த ஒரு கதை. யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில் அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி இராணுவச் செலவுகளால் உந்துதல் பெற்றது. ஆயினும் வியட்நாம் யுத்த காலத்தில் இராணுவச் செலவு எல்லை மீறிச் சென்றதால் வேறு பல லாபம் தரும் முயற்சிகளில் இருந்து மூலதனம் திசை திருப்பப்பட்டது. ஜப்பான் இராணுவச் செலவு செய்யக்கூடாது

(57ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷவுக்கு மன்மோகன்சிங்கின் கடைசிக் காணிக்கை




**உள்நாட்டு அரசியலின் நெருக்குவாரங்கள் இல்லாமல் தன்னால் தந்திரமாக செயற்பட முடியுமாகவிருந்தால் எப்போதுமே இலங்கை ஜனாதிபதியை தன்னால் ஆதரிக்க முடியும் என்பதை அவருக்குக் காண்பிப்பதற்கு இச்சந்தர்ப்பத்தை மன்மோகன் சிங் முழுமையாகப் பயன்படுத்தியிருக்கிறார்**

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த மாதம் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் இருப்பதற்கு முடிவு செய்ததன் மூலம் மன்மோகன்சிங் அரசாங்கம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சகலரையும் அதிர்ச்சியடைய வைத்துவிட்டது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில், இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றைக் கோரும் மேற்குலகின் தீர்மானத்தின் கடுமையைத் தணிப்பதற்கு இந்தியா கடுமையாகப் பாடுபட்டபோதிலும், அது வாக்களிப்பில் பங்கேற்காமல் ஒதுங்கியிருக்கும் என்று எவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கவில்லை. கடந்த இருவருடங்களிலும் இலங்கைக்கு எதிராக மேற்குலக நாடுகளுடன் சேர்ந்து வாக்களித்த இந்தியா, இத்தடவை அதுவும் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறவிருப்பதற்கு முன்னதாக தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வதற்கான சாத்தியத்தை அவதானிகளும் ஆய்வாளர்களும் நிராகரித்தேயிருந்தார்கள். ஆனால், இந்தியாவின் அயல் நாடுகளுடன் நல்லுறவுகள் பேணப்படவேண்டுமென்பதில் உறுதியான நிலைப்பாட்டை எப்போதுமே கொண்டிருக்கும் மன்மோகன்சிங் எல்லோருக்கும் அதிர்ச்சியைத் தந்துவிட்டார். காங்கிரஸ் கட்சி இத்தடவை தேர்தலில் தோல்வியடைவது அனே



எம்.பி.வித்தியாதரன்

கமாக நிச்சயம் என்பதைத் தெரிந்த நிலையில், அத்துடன் தமிழ் நாட்டில் எந்தவொரு முக்கிய கட்சியுடனும் தேர்தல் கூட்டணியொன்றை அமைத்துக்கொள்ள காங்கிரஸினால் முடியா



மற்போன நிலையில், தனது அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையில் குறைந்த பட்சம் ஒரு 'திருத்தத்தையாவது' செய்துவிடுவதற்கு பிரதமர் தீர்மானித்தார் போலும், உள்நாட்டு அரசியலின் நெருக்குவாரங்கள் இல்லாமல் தன்னால் சுதந்திரமாகச் செயற்பட முடியுமாக இருந்தால் எப்போதுமே இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தன்னால் ஆதரிக்க முடிந்திருக்கும் என்பதை அவருக்குக் காண்பிப்பதற்கு இச்சந்தர்ப்பத்தை மன்மோகன்சிங் முற்று முழுதாகப் பயன்படுத்தியிருக்கிறார்.

பிரதமர் என்றவகையில் இதுவே தனது கடைசிப் பதவிக்காலம் என்பதை மன்மோகன்சிங் ஏற்கனவே அறிவித்திருந்தார். எனவே, அவரைப் பொறுத்தவரை இலங்கை தொடர்பான கொள்கையைத் திருத்திக்கொள்வதற்கு இது ஒரு வாய்ப்பான தருணமாகிப் போய்விட்டது. கடந்த இருவருடங்களும் தமிழ் நாட்டின் சகல கட்சிகளும் அவரின் அரசாங்கத்தின் மீது கடுமையான நெருக்குதல்களைப் பிரயோகித்தன. மன்மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தில் பங்காளியாக இருந்த திராவிட முன்னேற்றக்கழகம் நெருக்குதல்களைக் கொடுத்த கட்சிகளில் முக்கியமானது. தமிழ் நாட்டைச்சேர்ந்த காங்கிரஸ் தலைவர்களும் மத்திய அமைச்சர்களுமான பி.சிதம்பரம், ஜி.கே.வாசன், ஜெயந்தி நடராஜன் போன்றவர்களும் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவாகவே இந்தியா வாக்களிக்க வேண்டுமென்று பகிரங்கமாக வலியுறுத்தினார்கள். கடந்த வருடம் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவகாரம் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியை எட்டியதும் அவர் முடிவொன்றை எடுப்பதற்கு குழுவொன்றை அமைத்தார். சிதம் பரம் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி ஆகியோரையும் உள்ளடக்கிய அக்குழு இலங்கைக்கு எதிராக வாக்களிக்கவே தீர்மானித் தது. பிரதமருக்கு வேறு வழியிருக்க வில்லை.

ஆனால், இவ்வருடம் மன்மோகன் சிங்கினால் சுதந்திரமாகச் செயற்படக் கூடியதாக இருந்தது. இத்தடவை காங்கிரஸ் கட்சி மீண்டும் அதிகாரத் துக்கு வருவதற்கான வாய்ப்பு பெரி தாக இல்லை என்பது தலைவி சோனியா காந்திக்கும் தெரியும். காங் கிரஸுடன் கூட்டணி அமைத்துக் கொள்ளப்போவதில்லை என்று தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தீர் மானித்த நிலையில், தமிழ் நாடு பற்றி காங்கிரஸ் தலைமைத்துவம் கவலைப் பட வேண்டிய தேவையிருக்க வில்லை. தமிழ் நாட்டிலிருந்து காங்கி ரஸ் எதையும் பெரிதாக எதிர்பார்க்க வில்லை. அமைச்சர்கள் சிதம்பரம், வாசன் போன்றோர் தேர்தலில் போட் டியிட விரும்பவில்லை என்று ஏற் கனவே அறிவித்தும் விட்டார்கள். சிதம்பரம் தனது தொகுதியான சிவ கங்கையில் மகன் கார்த்தியை நிறுத்தி யிருக்கிறார். நியமனப் பத்திரத்தைத் தாக்கல் செய்வதற்கு முன்னதாகவே கார்த்தி தான் தோல்வியைப் பற்றிக் கவலைப்படவில்லை என்று அறிவித் ததைக் காணக்கூடியதாக இருந்தது. இதுதான் தமிழ்நாட்டில் காங்கிரஸின் இன்றைய நிலை. இத்தகையதொரு சூழ்நிலையில், மத்திய அரசின் மட் டத்தில் இத்தடவை இலங்கை விவ காரம் குறித்து பெரிய அக்கறை இரு க்கவில்லை. காங்கிரஸ் கட்சியின் உயர்மட்டத்தி லும் இலங்கை விவ காரம் குறித்து ஆராயப்படவில்லை. தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பு முற்றுமுழுதாக பிரதமர் மன்மோ கன்சிங்கிடமே விடப்பட்டது.

மன்மோகன்சிங்கும் அவரது வெளி யுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்தும் கூட இந்த விவகாரத்தை சாமர்த்திய மாகக் கையாண்டார்கள். இலங் கைக்கு எதிரான மேற்குலகின் தீர்மா னத்தின் கடுமையைத் தணிப்பதற்கு மாத்திரமே இந்திய அரசாங்கம் முயற்சித்துக்கொண்டிருந்தது என்ற தோற்றப்பாட்டை மாத்திரமே அவர் கள் இருவரும் திரும்பத்திரும்பக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். கடந்த வருடம் கொழும்பில் பொதுந லவாய உச்சிமகாநாட்டுக்குச் சென்றி ருந்த வேளையில் சல்மான் குர்ஷித் தெரிவித்த கருத்துகள் தமிழ் நாட்டில் பெருமளவு சர்ச்சைகளைத் தோற்று வித்திருந்தன. யாழ்ப்பாணம் ஊடாக கொழும்புக்குச் செல்ல வேண்டுமென் பதில் அக்கறை கொண்டிருந்தார் என் றபோதிலும், பிரதமர் இறுதியில் பொதுநலவாய உச்சிமகாநாட்டைத் தவிர்க்க வேண்டியதாயிற்று. தமிழ் நாடு அரசியல்வாதிகளின் நெருக்கு தல்களே இதற்குக் காரணம். ஆனால், இத்தடவை உகந்த நேரத்தில், உகந்த முடிவு எடுக்கப்படுமென்று அரசாங் கம் உத்தியோக பூர்வமாகக் கூறிக் கொண்டிருந்த அதேவேளை, இலங் கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தன என்ற தோற்றப்பாட் டையே அரசாங்க உயர்மட்ட அதிகா ரிகள் தனிப்பட்ட முறையில் கொடு த்துக்கொண்டிருந்தார்கள்.

அதனால், மார்ச் 27ஆம் திகதி ஜெனீவாவில் வாக்களிப்பில் கலந்து கொள்ளாதிருக்க இந்தியா தீர்மானித்த போது சகலருக்கும் அது அதிர்ச்சி யைத் தந்தது. என்ன நடக்கப்போகி றது என்பது காங்கிரஸின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் மூத்த அமைச்சருமான சிதம்பரத்துக்கே கூடத் தெரியாது. வாக்களிப்பில் கலந் துகொள்ளாமல் விட்டமை குறித்து சி தம்பரம் பகிரங்கமாக வேதனையை வெளிப்படுத்தினார். ஏனைய சகாக் களான வாசன் மற்றும் ஜெயந்தி நடரா ஜனும் மத்திய அரசின் செயலைக் கண்டனம் செய்தார்கள். ஆனால், மன்மோகன்சிங் நீண்டகாலமாக நினைத்துக்கொண்டிருந்ததை இறுதி யில் சாதித்துவிட்டார். அதாவது இலங்கையில் தமிழர்களின் நிலையை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி ராஜ பக்ஷ மீது இந்தியாவினால் செல்வாக் கைச் செலுத்தக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதே பிரதமரின் நிலைப்பாடு. இந்தியாவுடன் புராதன காலந்தொட்டு நெருக்கமான உறவுக ளைக் கொண்டிருக்கும் சுயாதிப் பத்தியம் கொண்ட நாடான இலங்கை யுடன் விவகாரங்களைக் கையாளுவதற்கு வேறுவழியில்லை என்பதே பிரதமரின் நம்பிக்கை.

வடமாகாணத்தில் தேர்தலை நடத்தி யது உட்பட வடக்கில் இலங்கை அர சாங்கத்தினால் செய்யப்பட்டிருக்கக் கூடிய நல்லிணக்க முயற்சிகளை மேற்குலகின் தீர்மானம் அலட்சியம் செய்தது என்பதே இந்தியாவின் நிலைப்பாடு. எனவே, ஜெனீவாவில் உள்ள இந்தியப் பிரதிநிதி தனது நாட் டினால் தீர்மானத்துடன் இணங்கிப் போக முடியாது என்றும் வாக்களிப் பில் கலந்து கொள்ளாமல் புறக்கணி க்கப்போவதாகவும் அறிவித்தார்.

இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரத்தை மதிப்பீடு செய்து கண் காணிக்குமாறும் விசாரணை செய்யு மாறும் ஐ.நா.மனித உரிமைகள்

**தமிழ்நாட்டிலுள்ள கட்சிகளின் கோரிக்கைகளுக்கு புதுடில்லி எந்தளவு தூரத்திற்குப் பணிந்து போகின்றதோ அந்த அளவுக்கு இலங்கையில் தமிழர்களின் உரிமைகளை மேம்படுத்துவதில் குறைந்த அளவு செல்வாக்கையே செலுத்தக் கூடியதாக இருக்கும் என்ற காங்கிரஸ் கட்சியின் புரிதலை அடிப்படையாகக் கொண்டதே ஜெனீவா வாக்கெடுப்பில் இந்தியாவின் முடிவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்மோகன்சிங் நீண்ட காலமாக நினைத்துக்கொண்டிருந்ததை இறுதியில் சாதித்து விட்டார். இலங்கையில் தமிழர்களின் நிலையை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷ மீது இந்தியாவினால் செல்வாக்கை செலுத்தக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதே அவரின் நிலைப்பாடு. இலங்கையுடன் விவகாரங்களைக் கையாள்வதற்கு வேறு வழியில்லை என்பதே அவரின் நம்பிக்கை**

ஆணையாளரின் அலுவலகத்தைத் தீர்மானம் கேட்கிறது. இது ஏற்கனவே இலங்கையில் ஏற்பட்டிருக்கக்கூடிய முன்னேற்றங்களை அலட்சியம் செய்வதாக அமைகிறது என்று கூறி தீர்மானத்தை நிராகரித்த இந்தியா, அது இலங்கையின் முயற்சிகளுக்கு உதவுவதைவிடவும் குந்தகமாக அமையக் கூடியதாக இருப்பதுடன் நிலைவரங்களைச் சிக்கலாக்கிவிடுமென்று விசனம் தெரிவித்தது.

தீர்மானத்துடன் இணங்கிப் போகாவிட்டாலும் இந்தியா, கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பில் சுதந்திரமானதும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான விசாரணைகளை உத்தரவாதம் செய்ய இலங்கை தவறிவிட்டது என்று சுட்டிக்காட்டத் தவறவில்லை. காணாமல் போனவர்கள் மற்றும் தடுப்புக்காவலில் உள்ளோர் விவகாரம், அதியுயர் பாதுகாப்பு வலயங்களைக் குறைத்தல், இராணுவத்தினால் சுவீகரிக்கப்பட்ட தனியார் காணிகளை உரியவர்களுக்குத் திருப்பிக் கொடுத்தல், வடமாகாணத்தில் சிவிலியன் அலுவல்களில் பாதுகாப்புப் படைகள் தலையிடுவதைத் தடுத்தல் போன்றவை உட்பட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சகல ஆக்கபூர்வமான விதப்புரைகளைகளையும் பயனுறுதியுடைய முறையில் இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தியா கேட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் உள்ள கட்சிகளின் கோரிக்கைகளுக்கு புதுடில்லி எந்தளவு தூரத்துக்குப் பணிந்து போகின்றதோ அந்தளவு தூரத்துக்கு இலங்கையில் தமிழர்களின் உரிமைகளை மேம்படுத்துவதில் குறைந்தளவு செல்வாக்கையே செலுத்தக்கூடியதாக இருக்கும் என்ற காங்கிரஸின் புரிதலை அடிப்படையாகக் கொண்டே ஜெனீவா வாக்கெடுப்பு தொடர்பில் இந்தியாவின் முடிவு அமைந்தது போலத் தோன்றுகிறது.

மன்மோகன்சிங் அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை பல தடவைகள் கூட்டணி அரசியல் நிர்ப்பந்தங்களின் கைதியாக இருந்துவந்திருக்கிறது. இதுவிடயத்தில் தமிழ் நாட்டு அரசியல் மாத்திரம் தான் நிர்ப்பந்தத்தைக் கொடுத்தது என்றில்லை.

மற்றைய மாநிலம் மேற்குவங்காளம். அதன் முதலமைச்சரான மமதா பானர்ஜி தலைமையிலான திரிநாமுல் காங்கிரஸ் தி.மு.க.வைப் போன்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தின் பங்காளியாக முன்னர் இருந்தது. பங்களாதேஷுடனான உறவுகளை மேம்படுத்துவதற்கு மன்மோகன் சிங் எடுத்த முயற்சிகளை மமதா பானர்ஜி சீர்குலைத்துக் கொண்டே வந்திருக்கிறார். மத்திய அமைச்சரவையில் மாத்திரமல்ல, பாராளுமன்றத்திலும் அவர் பிரதமரின் முயற்சிகளுக்கு குந்தகம் விளைவித்திருக்கிறார். இருநாடுகளுக்கும் இடையேயான உறவுகளை மேம்படுத்துகின்ற விடயத்தில் ஆற்றுநீர் பங்கீடு மிகவும் முக்கியமான ஒரு அம்சமாகும். அதற்கு இணங்குவதற்கு மமதா பானர்ஜி தொடர்ச்சியாக மறுத்துக் கொண்டேயிருக்கிறார். இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையேயான தரை எல்லை மீதான உடன்படிக்கை ஒன்று கூட இன்னமும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறவில்லை. அதற்குப் போதுமான வாக்குகள் கிடைக்கவில்லை.

2005 ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் அணுசக்தி உடன்படிக்கையைச் செய்து கொள்வதிலும் மன்மோகன் சிங் முட்டுக்கட்டைகளை எதிர்நோக்கினார். சிங்கின் முதலாவது பதவிக் காலத்தின்போது அமெரிக்காவுடன் அந்த உடன்படிக்கையைக் கைச்சாத்திடும் கொள்கையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையில் இடதுசாரிக் கட்சிகள் எதிர்த்தன. ஆனால், சிங் உறுதியாக நின்றார். இடதுசாரிகளுக்கு அடிபணிவதை விட மக்களிடம் மீண்டும் ஆணையைப் பெறுவதற்காக தேர்தலுக்குப் போவதை அவர் விரும்பினார். ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவியான சோனியாகாந்தி ஆரம்பத்தில் தயக்கம் காட்டியபோதிலும், இறுதியில் மன்மோகன்சிங் எடுத்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டார். இந்திய-அமெரிக்க அணுசக்தி உடன்படிக்கையில் கைச்சாத்திடமுடியாமற் போகுமேயானால் பிரதமர் பதவியைத் துறக்கக் கூட அவர் தயாராயிருந்தார். தேர்தல் இடதுசாரிகளை அம்பலப்படுத்தியது. மன்மோகன்சிங் இரண்டாவது பதவிக்காலத்துக்கும் பிரதமராக வந்தார்.

ஜெனீவா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலை வகித்ததன் மூலமாக இலங்கையுடனான விவகாரங்களைக் கூடுதலான அளவுக்கு நெகிழ்வுத்தன்மையுடன் கையாளக் கூடிய அனுகூலமான நிலை இந்தியாவுக்குக் கிட்டியிருக்கிறது. ராஜபக்ஷ செய்ய வேண்டியிருக்கும் மாற்றங்களை விரைவுபடுத்த அவரை இந்தியாவினால் தூண்டக் கூடியதாக இருக்கும். வடமாகாண சபைக்கு தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை நடத்தியதைப் போன்ற பல நடவடிக்கைகளை ராஜபக்ஷ கடந்த வருடம் மேற்கொண்டார். ஐ.நா.மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தின் மூலமாக அல்ல, இந்தியாவின் தீவிர இராஜதந்திரம் காரணமாகவே வடமாகாணசபைத் தேர்தல் சாத்தியமானது. 'இனி மேல் விவகாரங்கள் சரியான திசையில் செல்லும்' என்று இராஜதந்திரிகளும் அவதானிகளும் கூறுகிறார்கள். இத்தடவை இலங்கையின் பக்கத்தில் நிற்பதற்கு இந்தியா தவறியிருந்தால், அந்த நாட்டில் சீனாவின் செல்வாக்கு விஸ்தரிப்பதைத் தடுக்க முடியாமற் போயிருக்கும் என்றும் அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றிவிடவேண்டுமென்று முனைப்புடன் நின்ற பல நாடுகள் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழ் சமூகத்தினால் நெருக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றன என்ற முடிவுக்கு இந்திய அரசாங்கம் வந்தது. அத்தகைய நலன்களினால் தனது கொள்கைகள் செல்வாக்கிற்கு உட்படுத்தப்படக்கூடாது என்பதில் இந்தியா எச்சரிக்கையாக இருந்தது. கடந்த இருவருடங்களிலும் இந்திய வெளியுறவுக் கொள்கைக்குப் பாதகமான முறையில் குறுகிய நோக்குடைய தமிழ் அரசியலுக்கு விட்டுக் கொடுத்துச் செயற்பட்டுவிட்ட போதிலும், இனிமேல் அவ்வாறு செய்தலாகாது என்ற முடிவுக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் வந்தது. இந்திய வெளியுறவுக் கொள்கை கீழ்நோக்கிய பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்ற அபிப்பிராயம் பெரும்பாலான அவதானிகளுக்கு இருந்தது. மன்மோகன்சிங்கின் பதவிக் காலத்தின் இறுதி வருடம் அந்த கீழ் நோக்கிய போக்கில் திருத்தமொன்றைச் செய்வதாக அமைந்துவிட்டது.

நாடொன்றின் தேசிய சுயாதிபத்தியத்தையும் நிறுவனங்களையும் மலினப்படுத்தக்கூடிய தலையீடுசெய்யும் தன்மையான அணுகுமுறையொன்றைக் கடைப்பிடிப்பது நல்ல விளைவுகளைத் தரப்போவதில்லை என்பதில் இந்தியா உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. நாடொன்றில் மனித உரிமைகளைப் பேணும் தேசிய செயன்முறைகளைக் கண்காணிப்பதற்கு எல்லை வரையறையில்லாத ஆணையுடன் கூடிய வெளித்தரப்பு விசாரணைப் பொறிமுறையொன்றை ஏற்படுத்துவது 2006 ஆம் ஆண்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவைத் தோற்றுவித்த ஐ.நா.பொதுச்சபையின் 60/251 தீர்மானம் மற்றும் 2011 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பேரவையை மீளாய்வு செய்த பொதுச் சபையின் 65/281 தீர்மானம் ஆகியவற்றில் விதந்துரைக்கப்பட்ட ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை மற்றும் ஒத்துழைப்பு அணுகுமுறையைப் பிரதிபலிக்கவில்லை என்று இந்திய வெளியுறவு அமைச்சு அதன் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியது.

சர்வதேச விசாரணையைக் கோரும் தீர்மானம் 23 வாக்குகளைப் பெற்று மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. 12 நாடுகள் எதிராக வாக்களித்தன. இந்தியா உட்பட 12 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. உண்மையில் தீர்மானத்தை ஆதரிக்காத நாடுகளின் எண்ணிக்கை 24 என்று இதை அர்த்தப்படுத்திக்கொள்ள முடியும். எமது பிராந்தியத்தின் செல்வாக்குமிக்க சகல நாடுகளும்- சீனா, இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா-தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை. இது மேற்குலக நாடுகளுக்குக் கிடைத்த வெற்றியை பெருமளவுக்கு சக்தில்லாததாக்கிவிட்டது எனலாம். அதனால், தீர்மானம் தொடர்பில் மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் மிகவும் எச்சரிக்கையாக மேற்குலகம் செயற்படவேண்டியது அவசியமாகும்.

அதேவேளை, அதிகாரத்துக்காக பிராந்திய கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தும்போது இந்தியாவின் தேசியக் கட்சிகள் மிகுந்த நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். வெளியுறவுக் கொள்கைக் கோட்பாடுகளைத் தாரைவார்த்துவிடக்கூடாது. குறுகிய அரசியல் போக்குகளினால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். எமது அயல்நாடுகளில் இடம்பெறக்கூடிய நிகழ்வுப் போக்குகளின் இராஜதந்திர சிக்கல்கள் குறித்து தமிழ்நாட்டிலும் மேற்கு வங்காளத்திலும் மக்கள் மத்தியில் புரிதல் ஏற்படுவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இலங்கையில் தமிழர்களின் தேவைகளையும் நல்வாழ்வையும் கவனிப்பதில் புதுடில்லி மேற்கொள்கின்ற திட்டங்கள் குறித்து சரியான புரிந்துணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(31ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

**மீனுக்கு வால், பாம்புக்கு தலை**

தொடர்ந்து, மீனுக்கு வாலையும், பாம்புக்குத் தலையையும் இலங்கை அரசு மற்றும் தமிழ்த் தலைமைகள் காட்டி வந்தால், அது இந்தியாவை நேரடியாக, உடனடியாக பாதிக்கப் போவதில்லை. இலங்கை என்ற நட்பு நாடும், குறிப்பாக தமிழ் மக்களும் மிக அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதே உண்மை. அதனைப் பார்த்துக் கொண்டு வாளாவிருப்பதைத் தவிர இந்தியாவால் எதுவும் செய்து விடமுடியாது.

இலங்கை விடயத்தில், இந்தியாவால் வெற்றி பெறமுடியாத நிலையில், மற்ற நாடுகளோ, சர்வதேச சமூகமோ வெற்றி பெற்றுவிட்டதில்லை என்பதே, நோர்வே போன்ற நாடுகளின் கடந்த காலப் பங்களிப்பு நிரூபிக்கும் சரித்திர உண்மையாகும்.

இந்தியாவில் பாராளுமன்றத் தேர்தல் முடிந்து, மே மாதம் இரண்டாம் பகுதியில் புதிய அரசு அமைந்த பின்னரே இந்தியா தனது நிலைமையைத் தெளிவுபடுத்தும் என்று எதிர் பார்க்கலாம். ஆனால், அது ஜெனீவா நடுநிலைமையை ஒட்டியே இருக்கும். அதனை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்வதிலேயே இந்தியா முனைப்பைக் காட்டும். ஜெனீவாவில் நடுநிலைமை என்ற இந்திய அரசின் முடிவை, தற்போதைய தேர்தல் உச்சக்கட்டத்திலும் தமிழ் நாட்டிற்கு வெளியே எந்த ஒரு அரசியல் கட்சியோ, தலைவரோ எதிர்த்துப் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனை தமிழ்ச் சமூகமும் கூட்டமைப்பும் உணர வேண்டியது அதை விட முக்கியமானதாகும்.

**இந்தியாவின் செய்தி**

மனித உரிமைகள் பேரவையில் நடுநிலை வகித்ததற்கு இந்தியா கூறிய காரணங்கள், இலங்கை நிலைமை குறித்த இந்தியாவின் கவலைகளை உலகிற்கு உணர்த்தியது. ஒன்று, இலங்கையின் ஆளுமைக்கு ஊறு விளைவிக்கும் எந்த ஒரு நிலைப்பாட்டையும் இந்தியா எடுக்காது. இரண்டு, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைப் பின் தள்ளிவிட்டு 'போர்க் குற்றங்கள்' என்ற பெயரில் எடுக்கப்படும் எந்த சர்வதேச முயற்சியும் நீண்டகால பலன் எதனையும் தராது.

இந்தியாவின் எண்ணம் எதுவாக இருப்பினும், ஜெனீவா நடுநிலைமை, சரித்திரக் காலம் தொட்டே இந்தியாவின் அண்மையில், தொப்புள் கொடி உறவு கொண்ட நாடுகள் விடயத்தில், 'அந்நிய சக்திகள்' தலையிடுவதை இந்தியா விரும்பவில்லை என்ற செய்தியைப் பிரகடனப்படுத்தி உள்ளது. அந்த வகையில், சீனாவிற்குப் பொருந்துவது அமெரிக்காவிற்கும் பொருந்தும். ரஷ்யாவிற்குப் பொருந்துவது, ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் பொருந்தும்.

அது போன்றே, இந்தியாவின் நடுநிலைமை இலங்கை அரசிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் கூட விடுக்கப்பட்ட செய்தியே. இனப்பிரச்சினை குறித்த விடயங்களில், கூட்டமைப்பு, ஊறுகாய் போல் இந்தியாவைத் தொட்டுக்கொண்டு விட்டு, சர்வதேச சமூகத்தின் பக்கத்தில் சாய்வதை இந்தியா ரசிக்கவில்லை என்ற உண்மையும் தெளிவாகிறது. இந்திய தேர்தலுக்குப் பின்னர் மத்தியில் எந்தக் கட்சி தலைமையில் ஆட்சி அமைந்தாலும், தமிழ் நாட்டின் நிலைமை எதுவாக இருந்தாலும், கூட்டமைப்பு இந்த கண்ணாமூச்சி விளையாட்டை நிறுத்துவதற்கு காலம் வந்து விட்டது.

அது போன்றே, இலங்கை அரசும், இதோ-அதோ என்று போக்குக்காட்டுவதை நிறுத்திவிட்டு, ஜெனீவாவில் இந்தியப் பிரதிநிதி திலீப் சின்கா குறியிட்டுக் கூறிய விடயங்களில் மனப்பூர்வமான முன்னெடுப்புகளைச் செய்ய வேண்டும். அரசியல் தீர்வு மற்றும் 'போர்க் குற்றங்கள்' குறித்த நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிவுறுத்தல்களை அடிப்படையாகக் கொண்டு நல்ல முடிவுகளை எடுக்க முன்வரவேண்டும்.

இந்த முறை, மனித உரிமை கவுன்சிலில், இந்தியாவின் முடிவு குறித்து கடைசி வரை அறிந்திராத உறுப்பு நாடுகள் பலவும், மேலை நாடுகளின் அழுத்தத்திற்குப் பணிந்தன. அடுத்த முறை, வாக்களிக்கும் உரிமை இல்லை என்றாலும், இலங்கையின் அண்டை நாடு என்ற முறையிலும், தென்னாசியாவில் மிகப் பெரிய சக்தி என்ற வகையிலும், இந்தியாவின் நிலைப்பாட்டை அனைத்து நாடுகளும் உன்னிப்பாகக் கவனிக்கும்.

இந்த உண்மையை, இலங்கை அரசும், கூட்டமைப்புத் தலைமையும் ஏன் புலம்பெயர் தமிழர் இயக்கங்களும் மனதில் கொள்ள வேண்டும். காரணம், முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு, இலங்கைப் பிரச்சினையில் இந்தியா எந்தவிதத்திலும் தன்னிச்சையாகவோ, தன்னலம் கருதியோ செயல்படவில்லை என்ற உண்மையை சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ளும் வாய்ப்பை, கடந்த மூன்றாண்டு மனித உரிமைகள் பேரவையில் வாக்களிப்பில் இந்தியாவின் பங்கு உறுதி செய்துள்ளது. இந்த உண்மையை இலங்கைப் பிரச்சினைக்கு காரணமான அரசும் கூட்டமைப்பும் கூட சரியான சமயத்தில், சரியான வகையில் புரிந்துகொள்ள வேண்டும்.■

**இலங்கையின் சுயாதிபத்தியத்திற்கு ஊறு விளைவிக்கும் எந்த நிலைப்பாட்டையும் இந்தியா எடுக்காது. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை பின்தள்ளிவிட்டு போர்க் குற்றங்கள் என்ற பெயரில் எடுக்கப்படும் எந்த சர்வதேச முயற்சியும் நீண்ட கால பலன் எதனையும் தராது**

***(கட்டுரையாளர் இந்தியாவின் அப்சர்வர் ரிசர்ச் பௌண்டேஷனின் சென்னைக் கிளையின் இயக்குநர்)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு திகில் திரைப்படத்தைப் போல 2014 பொதுத்தேர்தல்



அ.மார்க்ஸ்

வேறெப்போதையும் விட ஊடக வெளிச்சம், தேர்தல் முடிவு ஆருடங்கள், காட்சி ஊடகங்களில் தோன்றி அக்குவேறு ஆணி வேறாக கட்சி நிலைவரங்களை ஆராயும் கருத்துச் சொல்லிகள், முதன் முதலாக வாக்களிக்கப் போகும் சுமார் 18 கோடி புது வாக்காளர்கள், எல்லா அரசியல் கட்சிகளும் மோசம் என்கிற பொதுப்புத்தியில் படிந்த கருத்தை மட்டுமே நம்பிக் களத்தில் இறங்கும் ஆம் ஆத்மி என்னும் ஒரு புதிய கட்சி என்பதாக நடக்கவுள்ள இந்தியாவின் 16ஆவது நாடாளுமன்றத் தேர்தல் களைகட்டி விட்டது. இத்தனை தகவல்கள், ஆய்வுகள் கைவசம் இருந்த்போதும் தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும் என்பது வேறெப்போதையும் விட இம்முறை குழப்பமாகத்தான் இருக்கிறது.

ஒரு சில கருத்துகளை மக்களின் மனத்தில் உறுதியாகப் பதிப்பதில் கார்பொரேட் ஊடகங்கள் வெற்றி பெற்றுள்ளன. அதில் முக்கியமானது இந்தியாவின் பழம் பெரும் கட்சியாகிய காங்கிரஸுக்கு 'இனி எதிர்காலம் இல்லை' என்பது. கிட்டத்தட்ட காங்கிரஸுக்குக் கல்லறை வாசகங்களே எழுதப்பட்டுவிட்டன. காங்கிரஸ்காரர்களே ஆமாம் நமக்கு இனி எதிர்காலம் இல்லை என நம்பத் தொடங்கி விட்டனர். அதில் சில உண்மைகள் இல்லாமலும் இல்லை. தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஒரு தொகுதியில் கூட வெற்றி பெற வாய்ப்பில்லை என்பது ஊரறிந்த விடயம், 1960களுக்குப் பின்னர் அது தனியாக நின்ற மூன்று தேர்தல்களில் இரண்டில் (1996, 1998) ஓரிடத்தைக் கூடப்பெற இயலவில்லை. 1967இல் வெறும் மூன்று இடங்களை மட்டுமே பெற முடிந்தது. இன்று வேறெப்போதையும் விட அதன் செல்வாக்குச் சரிந்துள்ளது.

கார்பொரேட்கள் எப்போதுமே தேர்தலில் தங்கள் செல்வாக்கைக் காட்டிக்கொண்டுதான் இருந்தபோதிலும், இம்முறை அவை நேரடியாகக் களம் இறங்கியுள்ளன. கட்சிகளுக்கு நன்கொடை அளிப்பதைத் தாண்டி நேரடியாக் கூட்டணிகளை உருவாக்குவது என்கிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## காங்கிரஸின் மிகப்பெரிய பலவீனம் மாறிவரும் அரசியல் சூழல்களையும் புதிய வாக்காளர் தொகுதியின் எதிர் பார்ப்புகளையும் அது புரிந்து கொள்ளாமைதான்


நிலைக்கு அவை 'உயர்ந்துள்ளன'. பா.ஜ.க கூட்டணிக் குக் கட்சிகளை விலைக்கு வாங்குவதில் அம்பானி யின் பங்கு எல்லோருக்கும் தெரியும். அண்ணா தி.மு.க கூட்டணியிலிருந்து கம்யூனிஸ்டுகள் படு கேவலமாகக் கழற்றி விடப்பட்டது ஏதோ ஜெயாவின் வழக்கமான எதேச்சாதிகாரப்போக்கின் விளைவு மட் டும் அல்ல. தேர்தலுக்குப் பின் உருவாகப்போகும் கூட்டணி அரசில் பா.ஜ.க ஆதரவு நிலையை எடுக்க கம்யூனிஸ்டுகளின் இருப்பு தடையாக ஆகிவிடக் கூடாது என்கிற கார்பொரேட் கரிசனம் இதில் பெரும் பங்கு வகித்துள்ளது. தவிரவும் காங்கிரஸ், பா.ஜ.க. தவிர்த்த 'இடதுசாரிகள் + மாநிலக் கட்சிகள்' அடங் கிய மூன்றாவது 'மாற்று அணி' ஒன்றைக் கட்டும் பிரகாஷ்காரட்டின் முயற்சியும் இதன் மூலம் முறியடிக் கப்பட்டது. அப்படி ஒன்று உருவாகி விடக்கூடாது என்பதில் கார்பொரேட்டுகளைக் காட்டிலும் அதிக அக்கறையுள்ள மம்தா பானர்ஜி, ஜெயா பிரதமராவ தைத் தான் ஆதரிப்பதாக வீசிய தூண்டிலும் அதன் வேலையைச் சரியாகச் செய்தது. இடதுசாரிகளின் அந் தப் பலவீனமான முயற்சி முளையிலேயே கருகிப் போயிற்று.

சில மாதங்களுக்கு முன் நடந்த நான்கு மாநிலத் தேர்தல்களில் இரண்டில் பா.ஜ.க அமோகமாக வெற்றி பெற்றதும், மோடி அலை ஒன்று இந்தத் துணைக் கண் டத்தையே கலக்கும் அளவிற்கு வீசுவதாகக் கார்ப் பொரேட் ஊடகங்கள் கட்டமைத்த பிம்பமும் காங்கிர ஸிலிருந்து கூட்டணிக் கட்சிகள் விலகுவதற்கும், பா.ஜ.க கூட்டணியிலிருந்து சென்ற தேர்தல்களில் விலகி இருந்த கட்சிகள் மீண்டும் நைசாக அதனுடன் ஒட்டிக் கொள்வதற்கும் வழி வகுத்துள்ளன.

நேரடியாகவும், மாநில அளவுக் கூட்டணிகளின் வாயிலாகவும் காங்கிரஸ் கூட்டணியில் இருந்த தி.மு.க, திருணாமுல் காங்கிரஸ், ராம் விலாஸ் பஸ்வா னின் லோக் ஜன சக்தி முதலியன இன்று காங்கிரஸைக் கைவிட்டுள்ளன. அதற்குப் பெரிய அளவில் பாராளு மன்ற உறுப்பினர்களைத் தரக்கூடிய ஆந்திர மாநிலத் தில் இன்று அக்கட்சி உடைந்துள்ளது. ஜெகனின் வை.எஸ்.ஆர் காங்கிரஸ் பெரிய அளவில் அதைப் பலவீனப்படுத்தியுள்ளது. தெலுங்கானா ராஷ்டிரீய சமிதி இதனை ஈடுகட்டும் என சோனியா நம்பினார். தெலுங்கானா மாநிலத்தைச் சாதித்துக் கொடுத்தால் தன் கட்சியை காங்கிரஸுடன் இணைத்து விடுவதாக வாக்களித்திருந்த சந்திரசேகர ராவ் இப்போது அதனு டன் கூட்டணிக்குக் கூடத் தயாராக இல்லை என அறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வித்து விட்டார். வேறு வழியே இல்லை என்கிற லாலுவின் ராஷ்ட்ரீய ஜனதா தள் போன்ற கட்சிகள்தான் இன்று காங்கிரஸ் கூட்டணியில் உள்ளன.

ஒரு காலத்தில் 23 கூட்டணிக் கட்சிகளுடன் ஆட்சி அமைத்த பா.ஜ.க.வுடன் இன்று அகாலி தளம், சிவ சேனா என இரு கட்சிகள்தான் உள்ளன என இரண்டு மாதங்களுக்கு முன்னர் எழுதினேன். இந்த இடைக் காலத்தில் நிலைமை சற்று மாறியுள்ளது. முன்னர் பா.ஜ.க.வுடன் இருந்த கட்சிகள் சில மறுபடி அதனுடன் ஒட்டிக் கொண்டுள்ளன. சில புதிதாய்ச் சேர்ந்துள்ளன. ராம் விலாஸ் பாஸ்வானின் லோக் ஜன சக்தி, சந்திர பாபு நாயுடுவின் தெலுங்கு தேசம், வைகோவின் ம.தி.மு.க, மருத்துவரின் பா.ம.க, விஜயகாந்தின் தே.தி.மு.க முதலியன இவ்வகையில் சில.

**பழைய கட்சிகளின் தவறுகளை மூலதனமாக வைத்து களத்தில் இறங்கியுள்ள ஆம் ஆத்மி கட்சி இந்தியாவின் பல்வேறு சிக்கல்கள் குறித்தும் தனது நிலையைத்தெளிவாக்கவேண்டும். இடத்துக்கு இடம் சூழலுக்கு தக்க முடிவெடுக்கும் நிலை குழப்பத்திற்கே இட்டுச்செல்லும்**

தமிழகத்தில் சாதிக் கட்சிகளும் மத வாதக் கட்சிகளும், தீவிரத் தமிழ்த் தேசியம் பேசுகிற வைகோவும், அப்பட்டமான சந்தர்ப்பவாதியான விஜயகாந்தும் ஒன்றாக இணைந்திருக்கும் ஆபத்து கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இவற்றில் விஜயகாந்தைக் கூட விட்டுவிடலாம். சந்தர்ப்பவாதிகள் எந்தப் பக்கமும் சாய்வார்கள் என்கிற ஒரு ஆபத்துத்தான் அவரிடம். ஆனால் மற்ற இருவரும் அப்படி அல்ல. வைகோ கழுத்தில் ஒரு கறுப்புத் துண்டைப் போட்டிருந்தாலும் அவர் எந்நாளும் பார்ப்பனீய எதிர்ப்பையோ, சாதி எதிர்ப்பையோ பேசியவரல்ல. மிகச் சிறந்த நடிகரான அவர் எப்போதாவது காட்டுகிற தலித் ஆதரவு நாடகம் முதலியன சில மணி நேரங்கள் கூட நிலைப்பதில்லை. அடிப்படையில் அவர் ஒரு இந்துத்துவவாதிதான் எனச் சொல்வதற்கான முகாந்திரங்கள் நிறைய உண்டு. என்றைக்கும் அவர் பா.ஜ.க.வைக் கொள்கை ரீதியாக விமர்சித்ததில்லை. 2002இல் குஜராத்தில் நடந்த படுகொலைகளுக்குப் பின்னும் இம்மியும் தயக்கமில்லாமல் மோடிக்குத் தேர்தல் பிரசாரத்திற்காகச் சென்றவர் வைகோ என்பதை யாரும் மறந்து விட இயலாது.



பா.ம.க - பா.ஜ.க கூட்டை அவ்வளவு எளிதாகப் பார்த்துவிட இயலாது. சிறுபான்மை மதங்களின் மீதான வெறுப்பு அரசியல் என்பது வெறுமனே இந்து மதவாதம் சார்ந்தது மட்டுமல்ல, அதற்கொரு ஆதிக்க சாதிப் பரிமாணமும் உண்டு. முசாபர் நகரில் முஸ்லிம்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைச் செய்தவர்களை வெறுமனே இந்துக்கள் என்று மட்டும் வகைப்படுத்திவிட இயலாது. அவர்கள் ஜாட் என்கிற ஆதிக்க சாதியினரும் கூட. தமிழகத்திலும் கூட முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களைச் செய்பவர்கள் ஆங்காங்கு ஆதிக்க சாதிகளாக இருப்பவர்கள்தான் என்பதையும் நாம் கவனம் கொள்ள வேண்டும். மதம், சாதி, இனம் முதலானவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படும் வெறுப்பு அரசியல் எல்லாம் அடிப்படையில் ஒன்றுதான். ஒரு வெறுப்பு மிக எளிதில் இன்னொரு வெறுப்பாக மாறி விடுவதை உலக வரலாறு உணர்த்தும். சிவசேனையை எடுத்துக் கொள்ளுங்களேன். மராட்டா அடையாளத்துடன் அது தோன்றியபோது இடதுசாரித் தொழிற்சங்கங்களின் மீதான வன்முறை அமைப்பாக இருந்தது. பின் அது அடுத்தடுத்து தமிழர்கள், முஸ்லிம்கள், வட மாநிலத்தவர் எனத் தன் வன்முறை இலக்கை மாற்றிக் கொண்டதை மறந்து விட இயலாது.

பா.ம.க ஒரு காலத்தில் பழனி பாபா முதலானோருடன் இணைந்து செயற்பட்டது உண்மைதான். ஆனால் அது 1996க்கு முந்திய பா.ம.க. பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையோர் ஒற்றுமையைப் பேசிய பா.ம.க. இன்றைய பா.ம.க தலித்களை விலக்கிய சாதி மகாநாடுகளை நடத்துகிற அன்புமணி பா.ம.க. இனி அது என்னதான் தமிழ்த் தேசிய முகமூடியைத் தரித்துக் கொண்டாலும் மக்களை ஒன்று படுத்தும் சக்தியாக இருக்க இயலாது.

2004இல் ஆட்சிக்கு வந்த மன்மோகன் சிங் - சோனியா தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு எப்படி காங்கிரஸிடம் பாரம்ப ரியமாக இருந்த இரண்டு நல்ல கூறுக ளில் ஒன்றான அணிசேராக் கொள் கையைக்கைவிட்டு அதற்கு முந்தைய வாஜ்பாய் அரசின் அமெரிக்க - இஸ் ரேல் ஆதரவைப் பற்றிக் கொண்டது என்பதை நான் தொடர்ந்து சொல்லி வருகிறேன். காலமெல்லாம் உலக முதலாளியத்திற்குச் சேவை செய்த ஒரு அதிகாரியான மன்மோகன் சிங் காங்கிரஸின் தாராளவாதக் கொள் கையை அதன் உச்சத்திற்குக் கொண்டு சென்றார். அது இரு விளை வுகளை இங்கு ஏற்படுத்தியது. ஒன்று அந்நிய மூலதனம் மற்றும் கார்பொ ரேட் வளர்ச்சியுடன் கூடவே இங்கு வந்த இலஞ்ச ஊழல்; மற்றது வர லாறு காணாத அளவு பொருளாதார


ஏற்றத் தாழ்வு.

முதலாளிய நாடுகளின் கூட்டியக்க மான பொருளாதார ஒத்துழைப்புக் கும் அபிவிருத்திக்குமான அமைப்பு OE-CD மற்றும் பன்னாட்டு நிதியம் (IMF) ஆகியன சமீபத்தில் வெளி யிட்டுள்ள அறிக்கைகளில், மிகப் பெரிய அளவில் பொருளாதார ஏற் றத் தாழ்வு அதிகரித்துள்ள நாடுகளில் முதன்மையாக உள்ளது இந்தியா எனக்கண்டித்துள்ளன. மக்கள் தொகையில் கடைசியாக இருக்கும் 10 சதத்தினரைக் காட்டிலும் ஆக மேலாக உள்ள 10 சதத்தினரின் வரு மான வீதம், 1990களில் இருந்ததைக் காட்டிலும் 12 மடங்கு அதிகரித் துள்ளதை இவை சுட்டிக் காட்டியுள் ளன. இது ஒரு பக்கம் நால் வழிச் சாலைகளில் சீறிப் பாயும் வித வித மான வண்ணக் கார்களையும் வானளாவிய குடியிருப்புகளுக்கும், இன்னொரு பக்கம் உலகில் வேறெங் குமே காணாத அளவு குடிசைப் பகு திகளுக்கும் விவசாயிகளின் தற்கொ லைகளுக்கும் காரணமாகியுள்ளது.

காங்கிரஸ் கூட்டணி அரசின் சாத னையான 'உரிமைகள் அடிப்படையி லான வளர்ச்சி' என அது கூறிக் கொள்ளும் கிராமப்புற வேலை வாய் ப்புத் திட்டம், கல்வி, உணவு மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டங்கள் முதலியன பல குறைபாடுகளுக்கும் மத்தியில் வரவேற்கத் தக்கவையாக இருந்தன. எனினும் கூடவே பொது விநியோகத் திட்டத்தை எல்லோருக் குமானது என்கிற நிலையிலிருந்து வறுமைக் கோட்டிற்குக் கீழே என ஆக்கியது, பின் வறுமைக் கோட்டை

> **தமிழகத்தில் சாதிக்கட்சிகளும் மதவாதக் கட்சிகளும் தீவிர தமிழ்த்தேசியம் பேசுகிற வைகோவும்அப்பட்டமானசந்தர்ப்பவாதியான விஜயகாந்தும் ஒன்றாக இணைந்திருக்கும் ஆபத்து கவனிக்கப்பட வேண்டிய ஒன்று**

யாருக்கும் பயனளிக்கா வகையில் வரையறுக்க முயற்சித்தது, பொது விநியோகத்தில் உணவுப் பொருட் கள் முதலியவற்றிற்குப் பதிலாக பணம் அல்லது 'முத்திரைத் தாள் களை விநியோகித்தல், தனியார் துறை பொதுத்துறை கூட்டுச் செயற் பாடு என்கிற பெயர்களில் தனியார் துறையைக் கல்வி, பொது நலம் என எல்லாத் துறைகளிலும் நுழைக்க முயற்சித்தது, ஆதார அடையாள அட்டையை மறைமுகமாகக் கட்டாய மாக்கியது, தனியார் மற்றும் அந்நி யத் தலையீடுகளை எதிர்த்த மக்கள் போராட்டங்களை ஒடுக்கியது முத லான நடவடிக்கைகள் முன் குறிப் பிட்ட வரவேற்கத்தக்க செயற்பாடுக ளையும் ஒன்றுமில்லாமல் ஆக்கின.

காங்கிரஸ் அரசின் இரண்டாவது நல்ல அம்சமான மக்களை மத அடிப் படையில் பிளவுபடுத்தாமை என்கிற அம்சத்திலும் அது இன்று உறுதியாக இல்லாததால் பாரம்பரியமான அதன் சிறுபான்மை மக்களின் ஆதரவையும் இன்று அது இழந்துள்ளது. பெரும் பான்மை மக்களின் ஆதரவை இழந்து விடுவோமோ என்கிற அச்சத்தில் இந்துத்துவ பிளவுவாத சக்திகள் மற் றும் அவற்றின் வன்முறைகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை களை மேற்கொள்ளாததாலும், அஃப் சல் குரு தூக்கு முதலான நடவடிக்கை களில் அது மேற்கொண்ட அறங் கெட்ட நடைமுறைகளாலும், அப்பட் டமான அதன் அமெரிக்க ஆதரவுச் செயற்பாடுகளாலும் அது இன்று மதச் சார்பற்ற சக்திகளின் மத்தியில் அம்பலமாகியுள்ளது.

காங்கிரஸின் மிகப்பெரிய பலவீ னம் மாறிவரும் அரசியல் சூழல்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையும் புதிய வாக்காளத் தொகுதியின் எதிர்பார்ப்புகளையும், அது புரிந்து கொள்ளாமைதான். இது ஐரோப்பிய அரசுகளின் பாணியிலான ஒற்றை இன அரசு (Nation State) நாடல்ல. மாறாக 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் உருவான ஒற்றை அடையாள தேசிய அரசுகளுக்கு மாறான ஒரு புதிய வடிவத்தில் இந்தியா கட்டமைக்கப்பட்டது. அந்த வகையில் இதைப் பல்லின, பல் அடையாள நாடாகக் (State Nation) கருத வேண்டுமென அரசியல் அறிவியலாளர் கூறுகின்றனர். காஷ்மீர் மற்றும் வட கிழக்குப் போராட்டங்களைத் தவிர்த்து, தேசிய அடையாளத்துடன் கூடிய ஒரு அரசியல் கட்சி மாநில அளவில் முதலில் உருவானது தமிழகத்தில்தான். இன்றிந்தப் போக்கு பல்வேறு மாநிலக் கட்சிகளாக வடிவெடுத்துள்ளன. ஆங்காங்கு உள்ள பல்வேறு அடையாளங்களின் ஊடாக ஒரே மாநிலத்தில் பல மாநிலக் கட்சிகளும் உருவாகியுள்ளன.

மாநில மக்களின் இந்த அடையாள வேட்கையையும் அதனடிப்படையில் உருவாகிற மாநில மக்களின் கோரிக்கைகளையும் எப்படி தேசிய அரசியலுடன் இணைப்பது என்பதை காங்கிரஸ் உணர வேண்டும். ஈழப் பிரச்சினை காரணமாக அது இன்று தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்பட்டுள்ளது இந்த அடிப்படையில்தான். அதேபோல மாநில அளவில் காமராஜர், நிஜலிங்கப்பா என்றெல்லாம் தலைவர்கள் உருவானது போல தலைவர்கள் உருவாக அது அனுமதிக்க வேண்டும். டில்லியிலிருந்து தலைவர்களைத் திணிக்கும் நடைமுறையை அது மாற்றிக்கொள்ள வேண்டும். அதேபோல ஆம் ஆத்மிக் கட்சிக்கு இளைஞர்கள் மத்தியில் இன்று ஏற்பட்டுள்ள வரவேற்பின் பின்னணியையும் அது புரிந்துகொள்ள வேண்டும். இன்றைய இளைஞர்கள் வெளிப்படைத் தன்மையை விரும்புகின்றனர். மக்களுக்கு அதிகாரம் வேண்டும் என எதிர்பார்க்கின்றனர், இனி இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகளுக்கு வாரிசு அரசியலில் இடமில்லை என்பதை எல்லோரும் உணர வேண்டும். காங்கிரஸ், தி.மு.க ஆகியவற்றிற்கு இன்று ஏற்பட்டுள்ள சரிவிற்கு இது ஒரு முக்கிய காரணம்.

காங்கிரஸின் எதிர்மறைத் தன்மைகளாக இதுவரை கூறியவற்றில் வாரிசு அரசியல் தவிர பிற அனைத்தும் அப்படியே. ஏன் அதற்கு மேலாகவும் கூட பா.ஜ.க.விற்கும் பொருந்தும். அத்தோடு கூடுதலாக அது மக்களைப் பிளவுபடுத்தும் சக்தியாக இருப்பது கூடுதலான ஆபத்தாக உள்ளது. அறுபதாண்டுகளுக்கும் மேலாக இங்கு பல குறைபாடுகளுக்கும் மத்தியில் நடைமுறையிலுள்ள ஜனநாயக நெறிமுறைகளையும் அது அழித்துவிடும் ஆபத்தை உள்ளடக்கியுள்ளது. ஆர்.எஸ்.எஸ் என்னும் பாசிச அமைப்பு வெளியிலிருந்து தலைவர்களைத் தேர்வு செய்வதும், கட்சியை ஆட்டிப் படைப்பதும் வாரிசு அரசியலைக் காட்டிலும் மோசம்.

காங்கிரஸ் எதிர்ப்பு வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால் அது என்ன காரணங்களுக்காக எதிர்க்கப்பட வேண்டுமோ அதற்காக எதிர்க்கப்படாததுதான் வேதனை. அதன் விளைவாகத்தான் இன்று காங்கிரஸின் இடத்தை அதனினும் கொடிய மோடியை வைத்து அடையாளப்படுத்தப்படும் பாசிச சக்திகள் கைப்பற்ற எத்தனிக்கின்றன. தமிழகத்தில் இன்று காங்கிரஸ் பா.ஜ.க இரண்டையுந்தான் நாங்கள் எதிர்க்கிறோம் எனக் கூவுகிற பலரும் இந்த அம்சத்தை ஒன்றும் புரிந்து கொள்வதில்லை அல்லது திட்டமிட்டு மறைக்கிறார்கள். இதன் விளைவாக அவர்கள் காங்கிரஸின் இடத்தில் பா.ஜ.க.வை நிரப்பத் தயங்காதவர்களாக உள்ளனர்.

மோடி பரவாயில்லை என்கிற அளவிற்குக் காங்கிரஸ் எதிர்ப்பைக் கக்குகிறவர்கள் ஒன்றை யோசிக்க வெண்டும். ஏன் கார்பொரேட்கள் வரிந்து கட்டிக்கொண்டு காங்கிரஸுக்குக் கல்லறை வாசகம் எழுதத் துடிக்கின்றன. எப்படியாவது மோடியை அந்த இடத்தில் உட்கார வைக்கக் கங்கணம் கட்டிச் செயற்படுகின்றன? இன்னும் கூட காங்கிரஸில் மிக மிகப் பலவீனமாகவேனும் ஒட்டியுள்ள நேரு காலத்திய சோஷலிசச் சிந்தனைகளும், இடது சாரிகளுடனும் கூட அவை சில நேரங்களில் கை கோர்த்துக் கொள்வதும், அதன் விளைவாக சிறு வணிகத்தில் அந்நிய முதலீடு போன்ற பிரச்சினைகளில் அது அவற்றை நிறைவேற்றக் கறாராக நடந்து கொள்ளாமையும் கார்பொரேட்களை எரிச்சலூட்டியுள்ளன. தவிரவும் வரலாறெங்கிலும் கார்பொரேட்கள் ஆளும் வாய்ப்புள்ள பாசிசக் கட்சிகளுக்கு ஆதரவாகவே இருந்துள்ளன. வெறுப்பு அரசியலும் இப்படியான குரோனி முதலாளியமும் இணையும்போதுதான் பாசிசம் முழுமை அடைகிறது என்கிற பொருள்பட முசோலினி கூறியதை மறந்துவிட இயலாது.

இன்றும் கூட பா.ஜ.க., காங்கிரஸ் இரண்டில் காங்கிரஸ்தான் இந்தியாவின் பன்முகத் தன்மையைப் பிரதிபலிக்கும் கட்சியாக உள்ளது. எல்லா மாநிலங்களிலும், எல்லாத் தரப்பு மக்களிடமும் பரந்து விரிந்திருக்கிறது. அந்த நிலை பா.ஜ.க.விற்கு இல்லை. உ.பி, பீஹார் முதலிய மாநிலங்களில் அதிகளவு இடங்களைக் கைப்பற்றிய போதுதான் அது மத்தியில் ஆட்சியைப் பிடிக்க முடிந்துள்ளது. எப்போதெல்லாம் வெறுப்பு அரசியலை உச்சத்திற்குக் கொண்டு வந்து இந்த மாநில மக்களை எதிர் எதிராகப் பிரித்து நிறுத்துவதில் அது வெற்றி பெற்றதோ அப்போதுதான் அது இந்த மாநிலங்களில் அதிக இடங்களைப் பெற முடிந்திருக்கிறது. அயோத்திப் பிரச்சினை உச்சத்தில் இருந்த 1991,96,98 ஆகிய தேர்தல்களில் மட்டுமே அது உ.பியில் 50க்கும் மேற்பட்ட இடங்களைப் பெற முடிந்தது. அப்போதுதான் அது ஆட்சி அமைப்பதும் சாத்தியமானது. இன்று அந்த நிலை இல்லை. கார்பொரேட்கள் கட்டமைப்பதுபோல அப்படி ஒன்றும் மிகப் பெரிய வெற்றியை 'மோடி அலை' உருவாக்கப் போவதில்லை.

காங்கிரஸ், பா.ஜ.க இரண்டிற்குமான மாற்றாக இங்கு உருப்பெற்றிருக்க வேண்டிய இடதுசாரிகள் இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பலமிழந்துள்ளன. இன்றளவும் உலகின் இரண்டாவது பெரிய இடதுசாரி இயக்கம் இந்தியாவில் தான் உள்ளது. உலகளாவிய வீழ்ச்சிக்குப் பின்னுங் கூடத் தன்னைத் தக்க வைத்துக்கொண்ட கட்சியாகவும் அது உள்ளது. ஊழலின்மை, எளிமை, வாரிசு அரசியலின்மை ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாகவும் அது உள்ளது. அவற்றிலும் ஊழல்கள் உள்ளனவே என இரண்டொன்றைச் சுட்டிக்காட்டலாம். ஆனால் அவை விதி விலக்குகள் தான். மற்றக் கட்சிகளுக்கு அவையே விதிகளாக உள்ளன. மக்களைப் பாதிக்கும் அடிப்படைப் பிரச்சினைகளை விட்டு விட்டு உணர்ச்சி சார்ந்த பிரச்சினைகளே இன்று பொது வெளியில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன, இதில் கார்பொரேட் ஊடகங்களும், வெளிநாட்டுச் சக்திகளும் பெரும் பங்கு வகிக்கின்றன. இடதுசாரிக் கட்சிகள், இதை உரிய வகையில் எதிர் கொள்ளும் திராணியற்றவையாக இருப்பதும், உலகம் மாறிவிட்டது என்கிற உண்மையைக் கணக்கில் கொள்ளாமல் கட்சி குறித்த பழைய அணுகல் முறைகளுடன் தொடர்வதும் அவர்களின் பலவீனங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அந்நிய மூலதனம், கார்பொரேட் ஆட்சி முதலியவற்றை எதிர்க்கும் ஒரே சக்தியாக அவர்கள் மட்டுமே இருப்பதால் கார்பொரேட்களும் ஊடகங்களும் இடதுசாரிகளை அழிக்கத் தம் சக்தி அனைத்தையும் குவிப்பதும் அவர்கள் இன்று பலவீனப்பட்டிருப்பதன் இன்னொரு முக்கிய காரணம்.

கூட்டணி பலமின்றி போட்டியிடும் தமிழக இடதுசாரிகள் இன்று இங்கு வெற்றி வாய்ப்பைப் பெறுவது அரிது. மேற்கு வங்கத்தில் அவர்களின் நீண்ட கால தடித்தனமான ஆளுகையின் நினைவு இந்தத் தேர்தலிலும் அங்கு அவர்களுக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தவே போகிறது. கேரளத்திலும் இடது முன்னணியிலிருந்த புரட்சிகர சோஷலிஸ்ட் கட்சி விலகியுள்ளது. திரிபுரா தவிர பிற மாநிலங்களில் அது என்றும் ஆழமாக வேர்விட்டதில்லை. இந்தத் தேர்தல் இடதுசாரிகளை மேலும் பலவீனமாக்கும். ஆனால் அது மக்களுக்கு நல்லதல்ல.

**காங்கிரஸ் எதிர்ப்பு வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால் அது என்ன காரணங்களுக்காக எதிர்க்கப்படவேண்டுமோ அதற்காக எதிர்க்கப்படாதது தான் வேதனை. அதன் விளைவாகத்தான் இன்று காங்கிரஸின் இடத்தை அதனினும் கொடிய மோடியை வைத்து அடையாளப்படுத்தப்படும் பாசிச சக்திகள் கைப்பற்ற எத்தனிக்கின்றன**

தலித் கட்சிகளைப் பொருத்தமட்டில் அவற்றின் தவறான அணுகல் முறைகளும், கொள்கையை விட்டு விட்டுக் கட்டும் கூட்டணிகளும், ஊழல் முதலியவற்றைக் கட்டுப்படுத்துவதில் அவை காட்டும் சிரத்தையின்மையும் அவற்றை வெகுவாகப் பலவீனப்படுத்தியுள்ளன. இதில் மிகவும் வருந்தத்தக்க அம்சம் என்னவெனில், தலித் மக்களின் ஆதரவையே அவை இழந்து நிற்பதுதான். சென்ற தேர்தலில் உ.பியில் உள்ள 84 ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் 54 ஐ சமாஜ்வாதிக் கட்சி கைப்பற்றியது. 17 இடங்களை மட்டுமே பகுஜன் சமாஜ் கட்சி பெற முடிந்தது. பஞ்சாப்பில் உள்ள 34 ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் 24 ஐ அகாலி தளம் கைப்பற்றியது. வெறும் 4 சத வாக்குகளைத் தான் மாயாவதி பெற முடிந்தது. சமீபத்தில் நடைபெற்ற டில்லி மாநிலத் தேர்தலில் எதிர்பார்த்ததுபோல அல்லாமல் ஒரு இடத்தில் கூட பகுஜன் சமாஜ் கட்சி வெற்றி பெறவில்லை. 12 ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் ஒன்பதை ஆம் ஆத்மி கட்சி கைப்பற்றியது. இந்த நிலைதான் வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் தொடர வாய்ப்புள்ளது.

ஆம் ஆத்மி கட்சி குறித்து விரிவாக சென்ற இதழ்களில் எழுதியிருந்தேன். டில்லி, ஹரியானா மாநிலங்களில் அது சில நாடாளுமன்றத் தொகுதிகளில் வெற்றி பெறலாம். இன்றளவும் அது நகர்ப்புறங்களைச் சார்ந்த ஒரு கட்சியாகத்தான் இருக்கிறது. மும்பை முதலான சில நகரங்களில் அவை சில தொகுதிகளைக் கைப்பற்றலாம். மொத்தத்தில் ஒற்றைப்படையில்தான் அவர்களின் வெற்றி அமையும் வாய்ப்புள்ளது. தமிழகத்தைப் பொருத்தமட்டில் கூடங்குளத்தைச் சுற்றியுள்ள மீனவர்கள் மற்றும் நாடார்களின் வாக்குகளை நம்பி அது களம் இறங்கியுள்ளது. மீனவர் வாக்கு சிதறிவிடக் கூடாது என்பதற்காகவே முரண்டு பிடித்துக் கொண்டிருந்த புஷ்பராயனைச் சமாதானம் செய்து தூத்துக்குடியில் நிற்க வைத்துள்ளனர். சாதி அரசியலில் கைதேர்ந்த தி.மு.க, அ.தி.மு.க கட்சிகளை இவர்கள் எந்த அளவிற்கு எதிர் கொள்வார்கள் என்பது ஐயத்திற்குரியதே. நம் நாட்டில் புதிய கட்சியானாலும் பழைய கட்சி ஆனாலும், இடதுசாரிகளானாலும் சாதியை மட்டும் விட முடியாதென்பதற்கு இன்னும் ஒரு உதாரணம்.

பழைய கட்சிகளின் தவறுகளை மூலதனமாக வைத்துக் களத்தில் இறங்கியுள்ள ஆம் ஆத்மி கட்சி இந்த நாட்டில் பல்வேறு சிக்கல்கள் குறித்தும் தன் நிலையைத் தெளிவாக்க வேண்டும், இடத்திற்கு இடம், சூழலுக்குத் தக்க முடிவெடுக்கும்

*(57ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனல் பறக்கும் தேர்தல் பிரசாரம்

பாராளுமன்றத் தேர்தல் பிரசாரப்பாகத் தொடங்கியுள்ள நாடாளுமன்றத் தேர்தல் களம் தமிழகத்தில் அனல் பறக்கத் தொடங்கிவிட்டது. கோடை வெயில் கொடூரத்தைக் கூட குளிர்ச்சி தருவதாக நினைத்துக் கொண்டு தலைவர்கள் தேர்தல் பிரசாரத்தில் குதித்திருக்கிறார்கள்.


90 வயதில் தேர்தல் பிரசாரத்தைத் தொடக்கியிருக்கிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. இந்தியாவில் இதுவரை நடைபெற்ற 15 நாடாளுமன்றத் தேர்தலையும் சந்தித்த மலரும் நினைவுகளுடன் தற்போது 16ஆவது நாடாளுமன்ற பிரசாரக் களத்தில் நிற்கிறார் அவர். முதல் பிரசாரத்தை தனது பேரன் தயாநிதி மாறன் தொகுதியில் தொடங்கி அங்கு சென்னை மாநகரில் உள்ள மூன்று தொகுதி நாடாளுமன்ற வேட்பாளர்களையும் மேடையேற்றி வாக்குகளைக் கேட்டார். அங்கே அவரது குரலில் வருத்தம் தெரிந்தது. காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைக்க முடியாமல் போய்விட்டதே என்ற கோபம் அவரது பேச்சில் கொப்பளித்தது. தி.மு.க.விற்கு இயற்கையான கூட்டணிக் கட்சியாக இருக்க வேண்டிய காங்கிரஸ் இப்படியொரு சூழ்நிலையை உருவாக்கி விட்டதே என்ற எரிச்சல் வெளிப்பட்டது. ‘கை தூக்கி விட்டவர்கள் யார் என்ற நன்றி கூட இல்லாமல் தி.மு.க.விற்கு காங்கிரஸில் உள்ள சிலர் கொடுத்த தொல்லைகள்’ பற்றிப் பேசிய கலைஞர் கருணாநிதி, ஒரு கதவை லேசாகத் திறந்து வைத்தார். தேர்தலுக்குப் பிறகு மதச்சார்பற்ற ஆட்சி அமைக்க வேண்டும் என்று கூறி தான் செய்த தவறுகளுக்கு காங்கிரஸ் கட்சி மன்னிப்புக் கேட்குமானால், மதச்சார்பற்ற ஆட்சி என்ற ஒரே காரணத்தின் அடிப்படையில் காங்கிரஸ் அரசை ஆதரிக்கத் தயார் என்பதுதான் சென்னை திருவல்லிக்கேணியில் நடைபெற்ற முதல் பிரசாரக் கூட்டத்தில் கருணாநிதி திறந்து வைத்த அந்தக் கதவு.


> 90 வயதில் தேர்தல் பிரசாரத்தில் இறங்கியிருக்கிறார் கருணாநிதி. இதுவரையில் நடைபெற்ற 15 நாடாளுமன்றத் தேர்தல்களையும் சந்தித்த நினைவுகளுடன் பிரசார களத்தில் அவர் நிற்கிறார். அ.தி.மு.க.வை பொறுத்தமட்டில் சிங்கிள் மேன் ஆமி போல் முதலமைச்சர் ஜெயலலிதா மட்டும் நட்சத்திரப் பேச்சாளராக பிரசார களத்தில் நிற்கிறார்

அவர் அப்படி பேசி முடித்த மறுதினம் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற மனித உரிமைகள் மீறல் பற்றி விசாரிக்க அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தைப் புறக்கணித்து நின்றது இந்தியா. கலைஞர் கருணாநிதிக்கு கோபம் முகம் சிவக்கும் அளவுக்கு முற்றிப்போனது. அத்துடன் காங்கிரஸ் பற்றிய பேச்சை மூட்டை கட்டி வைத்து விட்டு, தேர்தல் பிரசாரத்திற்குப் புறப்பட்டார். பட்டாசு வெடித்து தி.மு.க. தொண்டர்கள் • வழியனுப்பி வைத்தார்கள்.

சென்னை

## மெயில்





முத்தையா
காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சென்னை விமானம் மூலம் கோவைக்குச் சென்ற அவர் திறந்த வேனில் சில இடங்களில் பிரசாரம். பிறகு கோவையில் பொதுக்கூட்டம். கூடவே அவருடைய துணைவியார் ராஜாத்தி அம்மாளும் இருக்கிறார். முன்பு ஆர்க்காடு வீராச்சாமி போன இடத்தில் இப்போது தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவரும், தன் பிள்ளைக்கு சீட் கேட்டு கிடைக்காத வருத்தத்தில் இருக்கும் துரைமுருகனும் சென்றார். கோவைப் பொதுக்கூட்டத்தில் கருணாநிதியின் தேர்தல் பிரசாரம் வியூகம் மாறியது. அங்கு பிரதமர் வேட்பாளராக பா.ஜ.க. கூட்டணி முன்நிறுத்தும் நரேந்திர மோடியைப் பற்றிப் பேசினார். முன்பு ஒரு முறை மோடி அலை வீசுகிறதா என்ற கேள்விக்கு இங்கு வங்காள விரிகுடா கடல் அலை மட்டும்தான் வீசுகிறது என்று பதிலளித்ததைத் தவிர, நரேந்திரமோடியை நல்லவர், வல்லவர் என்றெல்லாம் பாராட்டவே செய்தார்.

**தமிழகத்தில் ஆறுமுனைப்போட்டி என்றாலும் நடைமுறையில் நான்கு முனைப் போட்டிதான். அ.தி.மு.க., தி.மு.க., தேசிய ஜனநாயக கூட்டணி, காங்கிரஸ் கட்சி ஆகியவை மட்டும்தான் ஒவ்வொரு தொகுதியிலும் கணிசமான வாக்குகளைப்பெற்று ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டிருக்க முடியும். மற்றப்படி கம்யூனிஸ்ட் வேட்பாளர்களோ ஆம் ஆத்மி கட்சி வேட்பாளர்களோ எந்த அளவிற்கு வாக்காளர் மனதில் புகுந்து பம்பரம் விளையாடப்போகிறார்கள் என்பது புரியாத புதிரே.**

ஆனால் தேர்தல் களத்தில் காங்கிரஸ் தலைவர்கள் ப.சிதம்பரம், 'தேர்தலுக்குப் பிறகு பா.ஜ.க.வை ஆதரிக்க மாட்டோம்' என்று தி.மு.க. அறிவிக்கத் தயாரா என்றும், இன்னொரு மத்திய இணை அமைச்சராக இருக்கும் சுதர்ஸனன் நாச்சியப்பன் 'தேர்தலுக்குப் பிறகு தி.மு.க. மோடியை ஆதரிக்கலாம் என்பதால் சிறுபான்மையின மக்களும், தலித் மக்களும் தி.மு.க. மீது சந்தேகப்படுகிறார்கள்' என்றும் வெளியிட்ட கருத்துகள் கருணாநிதி மனதைத் தைத்திருக்க வேண்டும். அதனாலோ என்னவோ கோவை பொதுக்கூட்டத்தில், 'மோடிகள் மட்டுமல்ல, யாரும் தமிழ்நாட்டிற்குள் அத்துமீறி நுழைய முடியாது' என்று உரக்கப் பேசினார். அப்படிப் பேசியவர் இந்தத் தேர்தல் அனேகமாக தனக்கு கடைசித் தேர்தலாக இருக்கும் என்று கூறியபோது கூடியிருந்த தொண்டர்கள் 'வேண்டாம். அப்படிச் சொல்லாதே' என்று ஆவேசமாகக் குரல் எழுப்பினர். அந்த ஆவேசம் அடங்குவதற்கு இடம் கொடுத்து தன் பேச்சையே சில வினாடிகள் நிறுத்தினார் கருணாநிதி. ஆக, மோடி அட்டாக் என்ற ஆயுதத்தைக் கையிலெடுத்துள்ள கருணாநிதி, சிறுபான்மையினர் வாக்கு வங்கிகளை தி.மு.க. பக்கம் முழுமையாகக் கொண்டு வருவதற்கு அதுவே சிறந்த யுக்தி என்று நினைக்கிறார். இனி தி.மு.க.வின் அடுத்த கட்டத் தலைவர்கள் இந்த அட்டாக்கைத் தொடரக் கூடும். ஏனென்றால் நடிகை குஷ்பு, நடிகர் குமரி முத்து, நடிகர் சந்திரசேகர் என்று ஒரு நடிகர் பட்டாளமும், கவிஞர் கனிமொழி தனியாகவும் தேர்தல் பிரசாரத்தில் இப்போது கடைசியாகப் புகுந்துள்ளவர்கள். ஏற்கனவே முதல் சுற்றில் போன தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின் ஏறக்குறைய 21 நாடாளுமன்றத் தொகுதிகளில் பிரசாரத்தை முடித்து விட்டார். அதாவது இருக்கின்ற 234 சட்டமன்றத் தொகுதிகளில் 126 தொகுதிகளில் பிரசாரத்தை முடித்துவிட்டார். அப்படி பிரசாரத்தை முடித்து விட்டு சென்னைக்குத் திரும்பிய மு.க. ஸ்டாலின், 'தி.மு.க. 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெறும்' என்று ஏப்ரல் 6 ஆம் திகதி சென்னை விமான நிலையத்தில் பேட்டியளித்துள்ளார். கருணாநிதி சுமார் 20க்கும் மேற்பட்ட நாடாளுமன்றத் தொகுதிகளில் பிரசாரத்திற்குப் போகிறார். அவருடைய பிரசாரம் 'மோடி எதிர்ப்பு' 'ஜெயலலிதா எதிர்ப்பு' என்ற போக்கில் போனாலும், திராவிட இயக்கம் பற்றியும் பேசுகிறார்.

## சிங்கிள் மேன் ஆமியாக ஜெயலலிதா

அ.தி.மு.க.வைப் பொறுத்தமட்டில் 'சிங்கிள் மேன் ஆமி' போல் முதலமைச்சர் ஜெயலலிதா மட்டுமே பிரசாரக் களத்தில் நட்சத்திரப் பேச்சாளராக நிற்கிறார். தி.மு.க. மற்றும் காங்கிரஸை அட்டாக் பண்ணிப் பேசிக் கொண்டிருந்த அவர் தற்போது தி.மு.க. பொருளாளர் ஸ்டாலினுக்கும் பதில் சொல்லத் தொடங்கியிருக்கிறார். ஜெயலலிதா பேசும் மேடைகளில், 'தி.மு.க.வையும், காங்கிரஸையும் வேரோடும் வேரடி மண்ணோடும் வீழ்த்த வேண்டும். செய்வீர்களா, செய்வீர்களா' என்று வாக்காளர்களைக் கேட்கிறார். அதற்குப் பதில் அளிக்கும் வகையில் ஸ்டாலினோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'2011 தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகளை செஞ்சீங்களா, செஞ்சீங்களா' என்று எதிர்க் கேள்வி போட்டார். இதனால் இப்போதெல்லாம் பிரசாரக்கூட்டங்களில் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டவற்றில் நிறைவேற்றிய வாக்குறுதிகளை பட்டியலிட்டு விட்டு, 'உண்மையா, இல்லையா' என்று வாக்காளர்களைப் பார்த்து கேள்வி எழுப்புகிறார். பிறகு மற்ற சப்ஜெக்டுகளுக்குப் போகிறார். அது மட்டுமன்றி ஒவ்வொரு கூட்டத்திலும் உள்ளூர் பிரச்சினை பற்றியோ அல்லது உள்ளூர் வேட்பாளர் பற்றியோ விலாவாரியாகப் பேசுகிறார். அந்த வகையில் அவருடைய பிரசாரத்தின் ஸ்டைல் சற்று மாறியிருக்கிறது.

ஆனால் எதிர்க்கட்சியினர் கேட்கும் ஒரேயொரு கேள்விக்கு மட்டும் அவர் இன்னும் விளக்கம் சொல்லாமல் தவிர்த்து வருகிறார். அது



'பா.ஜ.க.வை ஏன் நீங்கள் விமர்சிக்கவில்லை' என்ற கேள்வி. இந்தக் கேள்வியை முதலில் ஸ்டாலின் கேட்டார். பிறகு மார்க்ஸிஸ்ட் கட்சிச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் கேட்டார். காங்கிரஸ் கட்சியின் சார்பில் ப.சிதம்பரம் கேட்டார். இப்போது பா.ஜ.க. கூட்டணியில் இருக்கும் வைகோவே வேறு மாதிரி கேள்வி எழுப்பிவிட்டார். அவர், 'வெற்றி பெற்ற பிறகு பா.ஜ.க.வை ஆதரிப்போம் என்று கூறி வாக்கு கேட்கிறார்கள் அ.தி.மு.க.வினர். எங்கள் வாக்குகளைத் திருட நினைக்கிறார்கள். பா.ஜ.க. ஒருபோதும் அ.தி.மு.க.வின் ஆதரவை ஆட்சி அமைக்கக் கோராது. ஏனென்றால் வாஜ்பாய் பட்டபாடு அவர்களுக்கு நன்கு தெரியும்' என்று சென்னையில் நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணி பிரசாரக் கூட்டத்தில் பகிரங்கமாக குற்றம் சாட்டியிருக்கிறார். பா.ஜ.க. வாக்குகள் தனக்கு எதிராகப் போய் விடக்கூடாது என்பதற்காக மோடியை விமர்சிக்காமல் தவிர்க்கிறார் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா. இதைப் புரிந்து கொண்டுதான் தி.மு.க. தலைவர் கருணாநிதி தனது மோடி அட்டாக்கைத் தொடங்கியிருக்கிறார். அவர் சிறுபான்மையின வாக்குகளை தன் பக்கமாகத் திரட்ட இந்தத் தாக்குதலைத் தொடுக்க, வைகோ போன்றவர்கள் தேசிய ஜனநாயகக் கூட்டணி வாக்குகள் அ.தி.மு.க.விற்குப் போய்விடக் கூடாது என்பதற்காக தாக்குதலைத் தொடுக்கிறார்.

பா.ஜ.க.வின் தலைமை செய்தித் தொடர்பாளராக இருக்கும் ரவிசங்கர் பிரசாத் போன்றவர்கள் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. அதிக இடங்களில் வெற்றிபெறும் என்று தன் கூட்டணி பற்றிக் கவலைப்படாமல் பேட்டி கொடுத்தாலும், மற்ற பா.ஜ.க. தலைவர்கள் அப்படிப் பார்க்கவில்லை. ஜெயலலிதாவிடம் தங்கள் வாக்குகளை இழந்துவிட்டால் தங்கள் வேட்பாளர்களுக்குப் பெரும் பிரச்சினையாகி விடும் என்பதை உணருகிறார்கள். அதனால்தான் பா.ஜ.க.வின் தென் சென்னை வேட்பாளர் இல. கணேசன், பா.ஜ.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவரான வெங்கய்யா நாயுடு போன்றவர்கள், 'தேர்தலுக்குப் பிறகு புதிய கட்சிகளின் கூட்டணியை ஏற்க மாட்டோம்' என்று பிரகடனம் செய்திருக்கிறார்கள். இது நேரடியாக அ.தி.மு.க.வின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல். 'எங்கள் வாக்குகளைப் பிரிக்கும் யுக்தியைக் கைவிடுங்கள் ப்ளீஸ்' என்று அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதாவிற்கு விடுக்கும் வேண்டுகோள் போல்தான் அவர்களின் இந்தப் பேச்சு இருக்கிறது. இதுவும் ஜெயலலிதாவிற்குப் புரியாமல் இல்லை. ஆனால் அவரோ தனக்கு 25 தொகுதிகளுக்கு மேல் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். அப்படியொரு எண்ணிக்கை கிடைத்த பிறகு இங்குள்ள பா.ஜ.க. தலைவர்களைக் கேட்டு விட்டா நம்முடன் கூட்டணி பேசப் போகிறது அகில இந்திய பா.ஜ.க. என்ற திடமான எண்ணத்தில் இருக்கிறார். அதனால் அவர் பா.ஜ.க.வினரைப் பற்றி சட்டை பண்ணவே இல்லை. அவர் தொடர்ந்து பா.ஜ.க.வை விமர்சிப்பதில்லை என்ற விரதத்துடனேயே தேர்தல் பிரசாரத்தில் இருக்கிறார். ஆனால் அ.தி.மு.க. பேச்சாளர் நாஞ்சில் சம்பத் மோடியை விமர்சிக்கிறார். அ.தி.மு.க.வின் அதிகார நாளேடான நமது எம்.ஜி.ஆர் பத்திரிகை மோடியை கிண்டல் பண்ணுகிறது. இன்னொரு பக்கம் நடிகை விந்தியா, கிராமியக் கலை அனிதா குப்புச்சாமி போன்றோர் அ.தி.மு.க.வின் பிரசாரத்தை முன்னெடுத்துச் சென்று விஜயகாந்த், டாக்டர் ராமதாஸ் போன்றவர்களை விமர்சிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டி அணைத்துக்கொண்ட அண்ணன்தம்பிகள்

பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக் கூட்டணியைப் பொறுத்த மட்டில் வைகோவும், விஜயகாந்தும் 'அண்ணன்தம்பிகளாக' மாறிவிட் டார்கள். நெல்லை மாவட்டம் கலிங் கப்பட்டியில் உள்ள வைகோவின் வீட்டிற்கே சென்று விருந்து சாப்பிட்டு விட்டு, வைகோ போட்டியிடும் விரு துநகர் தொகுதியில் பிரசாரமும் செய்து விட்டு வந்துவிட்டார் விஜய காந்த். கூட்டணியில் இருப்பவர் களை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று கௌரவிக்கும் பண்பு எப் போதுமே வைகோவிற்கு உண்டு. அந்த வரிசையில் விஜயகாந்தும் வந் திருக்கிறார். அரசியல் ரீதியாக மூத்த வராக இருந்தாலும் விஜயகாந்துடன் வேனில் ஏறி நின்று வைகோவும் வாக்குக் கேட்ட விதம் சற்று உருக்க மான காட்சிகளாக இருந்தது. டாக்டர் ராமதாஸுக்கும், விஜயகாந்திற்கும் அந்த ஒற்றுமை இதுவரை வர வில்லை. அவர் தே.மு.தி.க. தொகுதி களுக்கும் போகவில்லை. விஜய காந்தும் ராமதாஸின் கட்சி போட்டி யிடும் தொகுதிகள் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை. அன்புமணி ராமதா ஸும், விஜயகாந்தின் மைத்துனர் சுதி ஷும் அந்தக்கூட்டணியை ஒட்ட வைக்க பகீரத முயற்சிகளில் இறங்கி யிருக்கிறார்கள். ஆனாலும் நிலை மையில் எந்த முன்னேற்றமும் இல்லை.

அந்தக் கூட்டணியில் விஜயகாந் தின் மைத்துனர் சுதிஷ், டாக்டர் ராம தாஸின் புதல்வர் டாக்டர் அன்புமணி ராமதாஸ், பா.ஜ.க.வில் இல. கணே சன், கட்சித் தலைவர் பொன். ராதாகி ருஷ்ணன், முன்னாள் பா.ஜ.க. தலை வர் சி.பி. ராதாகிருஷ்ணன் அனைவ ரும் ஸ்டார் வேட்பாளர்கள். அவர்க ளின் வெற்றி பற்றியே அவர்களுக்கு அதிக கவலை இருக்கும் போது, கூட் டணிக் கட்சித் தலைவர்களுக்குள் ஏற் பட்டுள்ள இந்த குஸ்திகளைப் பார்ப் பதற்கே நேரமில்லை. இனி இறுதிச் சுற்றில் நரேந்திரமோடி பிரசாரத்திற்கு வருகிறார். அப்போதாவது தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்கள் அனைவரும் ஒரே மேடையில் காட்சி தருவார்களா என்பது இமாலயக் கேள்வியாகவே இருக்கிறது. வாக் காளர்களிடம் இந்த அணி மீது ஒரு மோகம் இருக்கிறது. ஆனால் மோடி என்ற இமேஜை தமிழகத்தில் உள்ள கூட்டணிக் கட்சித் தலைவர்கள் மார் கெட் பண்ணுவதற்கு ஆயத்தமாக இல்லை இதில் பா.ஜ.க. தலைவர்க ளும் கூட அடக்கம்.

### பிரசாரத்திற்கு வரும் ராகுல், சோனியா

காங்கிரஸ் கட்சி பற்றி கேட்கவே வேண்டாம். வேட்பு மனுத் தாக்கல் கடைசி நாளான ஏப்ரல் 5ஆம் திகதி யன்று கடைசி நிமிடத்தில் தென் சென்னை தொகுதிக்கு வேட்பாளரை அறிவித்து அவரை வேட்பு மனுத் தாக்கல் செய்ய வைத்தது. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருக்கும் ஞானதேசிகன் அந்த அளவிற்கு குழப்பிவிட்டார் என்றே காங்கிரஸ் தலைவர்கள் கசப்புணர்வைக் கக்குகி றார்கள். காங்கிரஸிலும் நட்சத்திர வேட்பாளர்கள் அதிகம். ஆனால் அக்கட்சிக்கு இப்போதைக்கு ஜி.கே. வாசன் மட்டுமே அனைத்துத் தொகு திகளிலும் பிரசாரம் செய்கிறார். தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி அவருக்காகவே காத்திருந்தது. ஆனால் போட்டியிடுவதில்லை என் பதில் உறுதியாக இருந்த வாசன், பிரசாரத்தில் மட்டும் கவனம் செலுத் துகிறார். நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு அவர் தனிக்கட்சி தொடங்கலாம் என்ற குரல் இப் போதே பரவலாக காங்கிரஸிற்குள் கேட்கத் தொடங்கி விட்டது. நிதிய மைச்சராக இருந்த ப.சிதம்பரம் போட்டியிடவில்லை என்பதில் காங் கிரஸ் மேலிடத்திற்குக் கோபம். ஆனாலும் என்ன செய்வது. கூட் டணி இல்லை என்றால் கரைசேர முடியாது என்பது அவருக்குத் தெரி யும். ஞானதேசிகனுக்கோ காங்கிரஸ் ஆதரவு அரசியல் என்பதை விட, தி.மு.க. எதிர்ப்பு அரசியலை மட் டுமே அவர் செய்து கொண்டிருக்கி றார் என்ற கோபமும் சில காங்கிரஸ் காரர்களுக்கு இருக்கிறது. ராகுல் காந்தியும், சோனியா காந்தியும் பிர சாரத்திற்கு வந்த பிறகுதான், தமிழக காங்கிரஸ் வேட்பாளர்களின் முகத் தில் புன்னகை தவழும். அந்தத் திக திக்காக அவர்கள் காத்திருக்கிறார் கள்.

### ஆறுமுனை இருமுனையாக மாறிய களம்

ஐந்து அல்லது ஆறு முனைப் போட்டி என்றாலும், நடைமுறையில் நான்கு முனைப் போட்டிதான். அ.தி.மு.க, தி.மு.க., தேசிய ஜனநாய கக் கூட்டணி, காங்கிரஸ் கட்சி இந்தக் கட்சிகள் மட்டும்தான் ஒவ்வொரு தொகுதியிலும் கணிசமான வாக்குக ளைப் பெற்று ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டிருக்க முடியும். மற்றபடி கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்களோ, ஆம் ஆத்மி கட்சி வேட்பாளர்களோ எந்த அளவிற்கு வாக்காளர் மனதில் புகுந்து பம்பரம் விளையாடப் போகிறார்கள் என்பது புரியாத புதிரே. இரு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் 'வேட்பாளர்க ளைப் போட்டு விட்டோம்' என்ற திருப்தியில் இருக்கிறார்கள். அதே திருப்திதான் ஆம் ஆத்மி மற்றும் காங்கிரஸ் கட்சிக்கும் கூட இருக்கி றது. ஏதாவது வாக்குகளை வாங்கி தி.மு.க. அல்லது அ.தி.மு.க.வை மிஞ்சிவிட முடியுமா என்ற வியூ கத்தை டில்லியிலிருந்தும், சென்னை யில் உள்ள கமலாலயத்திலிருந்தும் (பா.ஜ.க.வின் மாநில அலுவலகம் இருக்கும் இடம்) தேசிய ஜனநாயகக் கூட்டணியினர் வகுத்துக் கொண்டி ருக்கின்றன. ஆனால் எந்தத் தேர்த லாக இருந்தாலும் 'போட்டி எங்கள் இருவருக்கும் இடையில்தான். நீங்கள் எல்லாம் பார்வையாளர்கள்' என்ற தெம்பில் அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் தங்கள் தேர்தல் பிரசா ரத்தை சூடுபடுத்திக் கொண்டிருக்கின் றன. காட்சிகள் ஜோராக தமிழகத்தில் போய்க்கொண்டிருக்கிறது. ஆனால் ஜெயிக்கப் போகும் கட்சி எது என்ற கேள்விக்கு உரிய பதில் இன்னும் வாக்காளர்கள் மனதிலிருந்து வெளியே கசியவில்லை. காத்திருக்கி றார்கள் கட்சித் தலைவர்கள். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அகிலன் கதிர்காமர்



அகல்யா பிரான்சிஸ்கிளைன்

# அனலைதீவு: கடலின் மத்தியில் ஓர் கிராமம்

**அனலைதீவு மக்கள் எதிர்நோக்குகின்ற சமூக மற்றும் பொருளாதார சவால்கள் தொடர்பில் வட மாகாண சபையின் கவனத்திற்குக்கொண்டு வரும் நோக்கில் ஒரு சிறு ஆய்வு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரிலிருந்து அனலை தீவிற்கு புறப்படுவோமாயின் ஊர்காவற்துறைக்கு ஒரு மணித்தியாலம் பஸ்சில் பயணித்து பின் 45 நிமிடங்கள் தனியார் படகில் 50ரூபா பற்றுச்சீட்டுடன் ஏறினால் அங்கு ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள், பெற்றோருடன் பிள்ளைகள், மூட்டைகளுடன் வர்த்தகர்கள் மற்றும் படகின் மேல் மோட்டார் சைக்கிள்களும் லீசிங் வர்த்தகர்களின் பொருட்களும் காணப்படும். அவ்வாறே கடலில் பயணிக்கும் போது சிறு சிறு அலைகள் படகினை மெல்ல மோதி படகு ஆடி ஆடி நகர சிறு தீவுகளின் அழகான காட்சிகளை அனுபவிக்கலாம். இவ் அழகினை ரசித்தபடி ஜெட்டியை அடைந்தால் அங்கு ஓர் பஸ்ஸும் பல ஆட்டோக்களும் தீவின் உள் போக்குவரத்திற்காகக் காத்திருக்கும்.

புவியியல் ரீதியாக யாழ்ப்பாண மாவட்டத்தின் விளிம்பு நிலையிலிருக்கும் தீவுகளில் மிகக்கூடிய தூரத்திலிருக்கின்றது நெடுந்தீவு. அதற்கடுத்ததாக நயினாதீவும் அனலைதீவும் காணப்படுகின்றன. தீவுகளில் விவசாயம் செய்வதற்கு நன்னீர் கிடைப்பது மிகவும் அருமையாக இருந்த போதும் அனலைதீவில் விவசாயத்திற்கு ஏற்ற மண் மற்றும் நீர் வளங்கள் போதியளவு இருக்கின்றது. கடற்றொழில், விவசாயம் என வடமாகாணத்தின் இரு முக்கிய பொருளாதாரத்துறைகளும் அனலைதீவில் இயங்குகின்றன. பனைவளங்கள் மிகுந்த இந்தத் தீவில் பனை மூலப்பொருட்கள் சம்பந்தப்பட்ட தொழில்களைச் செய்வோரும் வசித்து வருகின்றனர்.

### கடற்தொழிலும் விவசாயமும்

இந்திய மாநிலத்திற்கு அண்மையிலிருக்கும் தீவுப்பகுதிகளில் ஒன்றான அனலைதீவும் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்களால் அதீத பாதிப்பை அடைந்துள்ளது. கடல் வளங்கள் அழிந்ததன் காரணமாக மீனின் உற்பத்தி குறைந்துள்ளது. இழுவைப்படகுகள் வரும் நாட்களில் கடலுக்குள் போகாமல் இருப்பதனால் இக்கிராமத்தினுடைய தொழிலாளர்களின் வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது. சந்தைப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இவர்களுக்கு பாரிய பிரச்சினை. உள்ளூரில் மாத்திரமே சந்தைப்படுத்த முடிகின்றது. வேறு இடங்களுக்கு விநியோகிப்பதாயின், படகுகளிலே 11 மணிக்குப் பின்னர் யாழ் கொட்டடி சந்தைக்குக் கொண்டு செல்கின்றார்கள். அதற்குள் மீன்கள் பழுதடைந்து விடலாம். ஏனெனில் மீன்களைச் சேமித்து வைக்க குளிரூட்டி வசதிகள் தேவைப்படுகின்றன.

வடமாகாணத்தின் விவசாயிகள் காலநிலை வரட்சி காரணமாக அறுவடையினைப் பெறமுடியாது பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளார்கள். இத்தீவு மக்களும் மழை மற்றும் கிணற்றினை நம்பி விவசாயம் செய்வதனால் இதே பிரச்சினையைச் சந்திக்கின்றார்கள். இங்கு புகையிலை, வெங்காயம், மிளகாய், நெல் போன்ற பயிர்கள் ஒரு போகம் மாத்திரம் செய்யப்படுகின்றன. 1960களில் சின்ன சிங்கப்பூர் என இக்கிராமத்தினை அழைக்கும் அளவில் விவசாயம் மிகவும் சிறப்புற்று பொருளாதார முன்னேற்றத்தினை அடைந்திருந்தது. தென் இலங்கைக்குக் கூட பணப் பயிர்களை இங்கிருந்து ஏற்றுமதி செய்தார்கள். ஆனால் இன்று அறுவடை பெறமுடியாது பொருளாதார வீழ்ச்சியைச் சந்திக்கின்றார்கள்.

## சமூக, பொருளாதார சவால்கள்

பெண்களின் நிலையினை நோக்குகையில் இவர்களில் சிலர் கூலிவேலைக்குச் செல்கின்றார்கள். சில பெண்கள் தையல், பனைவேலைகள் என பல வேலைகள் பழகியுள்ள போதும் இவ் வேலைகளை முன்னெடுக்க உட்கட்டுமான வசதிகள் குறைவாக இருக்கின்றன. ஒரு சில பெண்கள் வீட்டில் வைத்து தையல் தொழிலைப் புரிகிறார்கள் மற்றும் சிலர் வலைகளைத் தைக்கின்றார்கள்.

இத்தீவின் மூன்று பாடசாலைகளில் இரண்டு பாடசாலைகள் தரம் 1-5 வரையானவை மற்ற பாடசாலை தரம் 6-13வரை காணப்படுகின்றது. கடந்த இரண்டு வருடங்களிற்கு முன்னரே தரம் 13 ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதுவும் கலைப்பிரிவு மாத்திரமே தற்போது கற்பிக்கப்படுகின்றது. ஏனைய துறையினைப் பயில்கின்ற மாணவர்கள் ஊர்காவற்துறைக்குச் செல்ல வேண்டியுள்ளது. தரம் - 11 ஆறு வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் இப் பாடசாலைகளுக்கு வேறு இடங்களிலிருந்து ஆசிரியர்கள் பணியாற்றுகின்ற போது போக்குவரத்துப் பிரச்சினையை எதிர்கொள்வதால் பெரும்பாலான ஆசிரியர்கள் இங்கு சென்று கல்வி கற்பிப்பதனை விரும்புவதில்லை. தனியார் கல்வி நிறுவனங்கள் ஏதும் இல்லாததால் பிள்ளைகளை பகுதிநேர வகுப்பிற்கு அனுப்ப முடியவில்லை என இக்கிராமத்தவர்கள் கூறுகிறார்கள். உயர் கல்வியினைப் பயில ஊர்காவற்துறைக்குச் செல்ல வேண்டியிருப்பதால் பாடசாலையிலிருந்து சில மாணவர்கள் இடைவிலகிக் கொள்கிறார்கள்.

இங்கிருக்கும் வைத்தியசாலையில் அதிக வசதி வாய்ப்புகள் இல்லை. கர்ப்பிணித்தாய்மார் மற்றும் சிறுபிள்ளைகளுக்கு மாதாந்தம் போடும் ஊசிகளுக்கு ஊர்காவற்துறைக்குச் செல்ல வேண்டியிருக்கின்றது. வைத்தியர்கள் இங்கு திங்கள் முதல் வெள்ளி வரை பணி புரிகின்றனர். சனி, ஞாயிறுகளில் நோய்வாய்ப்படில் ஊர்காவற்துறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டிய நிலையிலுள்ளார்கள். இரவு நேரத்தில் அவசர சிகிச்சை, பிரசவம் போன்றவற்றிற்குச் செல்வதாயின் தனியார்படகு அல்லது கடற்படையின் உதவியுடனே ஊர்காவற்துறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது. தனியார் படகுகளில் செல்வதாயின் 2500ரூபா.

இங்கு கொண்டுவரப்படும் பொருட்கள் யாழ் நகரிலிருந்து தனியார் படகுகளில் வருவதனால் பொருட்களின் விலை 30 வீதம் அதிகமாகும். மேலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை யாழில் விற்பனை செய்வதற்கு போக்குவரத்துச் செலவுகள் பெரும் சவாலாக அமைகின்றது. மற்றும் மின்சார வசதிகள் சில இடங்களில் மாத்திரம் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

ஒட்டு மொத்தமாக வடமாகாணத்தின் வேறு கிராமங்களின் உட்கட்டுமானங்களிலும் பார்க்க இத்தீவில் போக்குவரத்து வசதிகள் பெரிய தொரு பிரச்சினையாகவுள்ளது. ஆனால் அனலைதீவில் வங்கிகள் இல்லாவிட்டாலும் வடமாகாணத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தின் அண்மைக்கால நிதிமயமாக்கலின் தாக்கம் இங்குள்ளது. வங்கிகளிடமிருந்து கடன், நகையடைவு, பெண்கள் மத்தியிலான சிக்கன கடன் மற்றும் லீசிங் நுகர்வுகளினால் கடன்களில் மக்கள் மூழ்கியிருக்கின்றார்கள்.

இக்கிராமத்தில் பொலிஸ் இல்லை. சில சமூக வன்முறைகள், பிரச்சினைகள் தோன்றும் போது கிராமசேவகரே அதைத் தீர்த்து வைக்க வேண்டிய நிலைமையிலுள்ளார். ஆனால் யுத்தகாலத்திலிருந்து இன்று வரை கடற்படையின் அழுத்தங்கள் இக் கிராமத்திலிருப்பதாகக் கூறப்படுகின்றது. மற்றும் இங்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இயங்குகின்றது, ஆனால் அதனுடைய செயற்பாடுகள் குறைவாகவே காணப்படுகின்றது.

கடந்த தசாப்தங்களாக போரின் பாதிப்பு உட்க்கட்டுமான பிரச்சினைகள், இடப்பெயர்வு மற்றும் புலப்பெயர்வுகளால் அனலைதீவினுடைய சனத்தொகை 3000குடும்பங்களிலிருந்து தற்போது 600குடும்பங்களாகக் குறைந்துள்ளது. இவ்வாறு வடமாகாணத்தில் பல விளிம்புநிலைக் கிராமங்கள் இருந்தபோதும் அனலைதீவு புவியியல் ரீதியாகவும், புலப்பெயர்வு, இடப்பெயர்வு, பொருட்களின் விலைபோன்ற காரணங்களினால் மிகவும் பின்னோக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

## கிராமப்புற வாழ்க்கையை மேம்படுத்தல்

இலங்கையில் அண்மைக்காலத்தில் நகரமயமாக்கல் மற்றும் நகரத்தை நோக்கிய இடப்பெயர்வு அதிகரித்தே வருகின்றது. இந்நிலையில் கிராமப்புற வாழ்க்கையின் எதிர்காலம் மற்றும் உள்ளாற்றல் என்னவென்ற கேள்வி எழும்புகின்றன.

அனலைதீவு போன்று புவியியல் மற்றும் சமூகரீதியாக விளிம்பு நிலையிலிருக்கும் கிராமத்தின் மேம்பாடு தற்போது அவசியமாக விவாதிக்கப்பட வேண்டும். ஏனெனில் நகரத்திற்குச், செல்வோரில் ஒரு சிலருக்குத் தான் அங்கு வேலைவாய்ப்புகள் இருக்கின்றது. மற்றும் கிராமங்களில் மிஞ்சியிருப்போர் சமூக புறந்தள்ளல்களினால் ஒதுக்கப்படாமல் அவர்களுடைய சமூக, பொருளாதார வளர்ச்சிக்கான தீர்வுகளை தமிழ் புத்திஜீவிகள், வடமாகாணசபை மற்றும் இலங்கை அரசாங்கம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இந்தக் கட்டத்தில் அனலைதீவிற்கு மேற்குறித்தவாறு பலவிதமான உட்கட்டுமானங்கள் மற்றும் அரசசேவைகள் தேவைப்படுகின்றன. இதற்குள் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, போக்குவரத்து போன்ற உட்கட்டுமானத் தேவைகள் குறிப்பிடத்தக்கவை. ஆனால் இதற்கு மேலாக இத்தீவினை மேம்படுத்துவதற்கு உள்ளூர் வாய்ப்புகளுமே மிக முக்கியமான சவாலாக அமைகின்றன. இங்கு கடற்தொழில் விவசாயம் மற்றும் பனைவேலைகள் அத்துடன் பெண்களுடைய வேலை வாய்ப்புகளுக்கு அரசாங்க முதலீடுகள் தேவையாக இருக்கின்றன. கடற்தொழிலைப் பொறுத்தவரையில் இந்திய இழுவைப்படகு பிரச்சினையைத் தீர்ப்பது அவசியம். விவசாயத்தின் வளர்ச்சிக்கு மாற்று பயிர்கள், நெல்லின் உற்பத்தி போன்ற முயற்சிகளுக்கு உதவிகளும் ஆலோசனைகளும் தேவைப்படுகின்றன. அத்துடன் பனைஉற்பத்தி மற்றும் பெண்களின் தையல் வேலைகளுக்கு கைத்தொழில் நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

இத்தீவின் முக்கியஸ்தர்கள் கூறுகையில், போக்குவரத்து உட்கட்டுமானங்கள், விவசாயத்திற்கான இயந்திரங்கள் மற்றும் உற்பத்திக்கான மில் என்பன இந்தத் தீவின் பொருளாதாரத்தை வளர்க்க உதவும் என்கின்றார்கள். சமூக, பொருளாதார வளர்ச்சியை அணுகும் போது ஒரு கிராமத்தின் மக்களுடைய கூட்டுச் செயற்பாட்டு அபிவிருத்தியை சாத்தியமாக்கும். இங்கு ஏற்கனவே இயங்கிவரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைப் பலப்படுத்துதல், மேல் வசதிகளை கூட்டுறவினூடாக இயங்க வைத்தல் மற்றும் போக்குவரத்து பிரச்சினைகளை அரசாங்கத்துறை அல்லது கூட்டுறவு முயற்சியினால் முன்னெடுப்பதன் ஊடாக உற்பத்தி மற்றும் விநியோகித்தலில் அந்த சமூகத்திற்கு பல முன்னேற்றங்கள் வரலாம். இவ்வாறான கிராமப்புற மேம்பாட்டினை வடமாகாண சபை முக்கியப்படுத்தல் அவசியமாகும். ▪

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலட்சம் வருடங்களுக்குப் பின்னர்


# எப்படி இருப்பார்கள் உங்கள் வழித்தோன்றல்கள்?

அறிவியல் களரி



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

உங்களுக்கு உங்கள் பாட்டனின் முகம் ஞாபகமிருக்கும், ஆனால் கொள்ளுப் பாட்டனதும் பாட்டியினதும் முகம் தெரிந்திருக்க நியாயமில்லை. போட்டோக் கலை வந்தே 200 வருடங்கள்தான் ஆகிறது. அதேபோல மறக்க முடியாமல் பதிந்திருப்பவை பிள்ளைகள், பேரப் பிள்ளைகளின் முகங்களாக இருக்கலாம். ஆனால் நான்கு தலைமுறைக்குப் பின்னர் உங்களது வழித்தோன்றல்களின் முகம் எப்படியிருக்கும் என்பதை நிச்சயம் சொல்ல முடியாது அல்லவா? கற்பனையில்தான் பார்க்க வேண்டும்.




*Australopithecus africanus*
*2.5 million years ago*

விஞ்ஞானிகள் மகா கற்பனைவாதிகள். ஒரு இலட்சம் வருடங்களுக்குப் பின்னர் மனித முகம் எப்படி இருக்கும் எனக் கற்பனை பண்ணிப் பார்த்து எங்களுக்கும் சொல்லியிருக்கிறார்கள்.

Nickolay Lamm என்பவர் ஒரு வழியில் விஞ்ஞானி, மற்றொரு வழியில் வடிவமைப்பாளர். சில காலத்திற்கு முன்னர் இவர் வடிவமைத்த மனித முகங்கள் மேலைத்தேய ஊடகங்களில் வெளிவந்து பரபரப்பைக் கிளப்பின.

பத்துத் தலை இராவணன், ஆனை முகத்துப் பிள்ளையார், ஆறுமுகத்தான், குதிரை முகத்தாள், கோரமுகக் காளி என எமது முன்னோர்கள் புராதன காலத்திலேயே தங்கள் கைவரிசைகளைத் திறமையாகக் காட்டியிருக்கிறார்கள். நிலவு காயும் இரவில் புற்தரையில் தென்றல் தழுவக் கிடந்தபடி நீலவானில் விழி மேய்கையிலும், சாய்வு நாற்காலியில் கண்மூடி உடலாறக் கிடந்து கற்பனைக் குதிரையின் வாலை முறுக்கும் செயல்கள் அவை. ஆனால் Nickolay



*Homo heidelbergensis*
*50000 Years ago*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Lammயின் வடிவமைப்புகள் அந்த ரகத்தைச் சேர்ந்தவை அல்ல. Washington University யைச் சார்ந்த கணினி மரபில் நிபுணரான Dr.Alan Kwan அவர்களுடன் கலந்துரை யாடி இந்த மாதிரிகளை அமைத் துள்ளார். அவ்வாறு வடிவமைப்ப



*Faces-of-the-Future-20000 years*

தற்கு முன்னர் மூன்று முக்கிய விடயங்களைக் கவனத்தில் எடுக்க வேண்டியிருந்தது.

1. கடந்த காலத்தில் மனிதர்களதும், மனித முன்னோடிகளினதும் உடலும் முகங்களும் தங்கள் சூழலின் சவால் களுக்கு ஏற்ப எவ்வாறு மாற்றமடைந் துள்ளன என்பதைத் தெளிவாக அறிய வேண்டும். இதற்கு புதைவ டிவ மனித எச்சங்களை காலரீதியாக ஆய்வதன் மூலம் கூர்ப்பில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்துகொள்ளமுடி யும். அகழ்வாய்வுகளில் கண்டுபிடிக் கப்பட்ட மிகப் பழைமையான புதை வடிவ மனித எச்சம் ஆர்டி Ardi (Ardipithecus kadabba) என்ற பெண்ணினது. இம் மனித மூதாதை கள் 4.4 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் எதியோப்பியாவில் வாழ்ந்தவர் களாவர்.

2. இன்றும் எதிர்காலத்திலும் எமது வளிமண்டலத்திலும் பூமியின் ஒளி யமைப்பிலும், கதிர்வீச்சுகளாலும் ஏற் படக் கூடிய சூழல் மாற்றங்கள் எவை என்பதை விஞ்ஞான ரீதியாக ஊகி த்து அறிய வேண்டும். அவற்றிக்கு மனிதன் எவ்வாறு முகம் கொடுத்து மாற்றமடைவான் என்பதைக் கணிக்க வேண்டும்.

3. மனிதனின் இற்றைவரை யான மாற்றங்கள் சுயமாக கூர்ப்பில் நடந்தன. ஆனால் இப்பொழுது மனித அறிவானது மரபணுக்களில் தம் விருப்பிற்கு ஏற்றவாறு மாற்றங்க ளைச் செய்யுமளவு வளர்ந்துள்ளது.



*Faces-of-the-Future-100000 years*

இது எதிர்காலத்தில் மேலும் கூர்மை யடைந்து மனித உருக்களில் மாற்றங் களை ஏற்படுத்தக் கூடியனவாக அமையும். இதையும் அவர்கள் கருத் தில் கொண்டார்கள்.

இவை யாவற்றையும் கவனத்தில் எடுக்கையில் சுமார் 1000 முதல் 60,000 ஆண்டுகளில் மனிதர்களின் தோற்ற மாற்றம் பற்றிய கணிப்பீடு கள் விவாதத்திற்குரியன என்பதில் ஐயமில்லை.

ஆனால் விஞ்ஞானிகள் ஏன் ஒரு இலட்சம் வருடங்கள் முதல் 5 இலட் சம் வருடங்களுக்குப் பின்னர் மனித இனத்தின் உருவில் ஏற்படக்கூடிய மாற்றங்களைப் பற்றிப் பேசுகிறார் கள். 1000, 2000, 10000 எனக் குறு கிய கால மாற்றங்கள் பற்றிய எதிர்வு களைக்கூறவில்லை. 'மனிதன் மாற வில்லை' என கண்ணதாசன் வேறு காரியத்திற்காக கூறியது நினைவில் வருகிறது. ஆம் மனிதன் விரைவில் மாறுவதில்லை. உருவ மாற்றங்க ளுக்கு நீண்ட காலம் பிடிக்கும். உயிரி னக் கூர்ப்பில் குறைந்த தரத்திலான நத்தை இனங்களின் சோர்வான வளர்ச்சி வேகத்தோடு ஒப்பிடுகை யில், மனித மாற்றங்கள் சோடை போகவில்லைத்தான். இருந்த போதும் பழைய கற்கால மனிதனுக் கும் இன்றைய புதுயுக மனிதனுக்கும் இடையேயான நீண்ட பயணத்தில் மனித உருவில் பெரிய வேறுபாடு கள் தெரிவதில்லை.

### யுகயுகமாக மாற்றங்கள்

உயர் விலங்கினத்தில் ஒன்றான வன் மனிதன். அவனில் ஏற்பட்ட முக்கிய மாற்றமானது நாலு காலில் தவண்டு திரிந்தவன் 'நிமிர்ந்த நடை யும் நேர்கொண்ட பார்வையுமாக' இரட்டைக் காலில் நடக்கத் தொடங்கி யதுதான். ஆனால் அதற்கு முன்னரே நாலு கால்களையும் நடப்பதற்கா கவே உபயோகிப்பதைக் கைவிட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னங் கால்களால் பற்றிப் பிடிக்கப் பழகிக்கொண்டான். அவை கைகள் ஆகின. பின்னர் நிமிர்ந்து நிற்கவும் நடக்கவும் முடிந்தது.

ஒரு வரியில் நான் இதைச் சொல்லி விட்டாலும் இது ஒரு பாரிய மாற்றம். அதற்கேற்ப அவனது எலும்புத் தொகுதி மாற நேர்ந்தது. இரண்டு கால்களால் மட்டும் திடமாக நடக்க நேர்ந்ததால் உடலின் முழுப் பாரத்தையும் தாங்குமளவிற்கு அடிவயிற்று எலும்பானது (Pelvis) வலுவுள்ளதாக மாறியது. அதேநேரம் நெஞ்சுப் பகுதியானது முற்புறம் தள்ளியிருப்பதைத் துறந்து தட்டையாக மாறியது. அதற்கும் அப்பால் உள்ளுறுப்புகளான இதயம், சுவாசப்பை, ஈரல், குடல், சிறுநீரகம் போன்றவை கிடை அச்சைக் கைவிட்டு நீள்வச அச்சில் (longitudinal axis) தொங்குவதற்கு ஏற்றவாறு மாற நேர்ந்தது.

## மண்டை ஓடும் மூளையும்

மற்றொரு முக்கிய மாற்றம் மண்டை ஓட்டிலும் மூளையிலும் ஆகும். மனிதனின் அறிவாற்றல் வளர்கின்ற வேகத்தைப் பார்க்கும் போது பெரும்பாலானவர்கள் இவற்றின் கனவளவு வேகமாக அதிகரிக்கும் என்றே எண்ணுகிறார்கள். ஆனால், 50000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ரொடேசிய மற்றும் நெதண்டதால் மனிதர்களது மண்டை ஓட்டின் அளவானது இன்றைய மனிதனின் மண்டை ஓட்டின் அளவை ஒத்ததாகவே இருப்பதை நோக்கும் போது பாரிய மாற்றம் ஏற்படாது என்றே தோன்றுகிறது.

ஆனால், சுமார் ஒரு கோடி வருடங்களுக்கு முன் வாழ்ந்த phylogenetic சின் மண்டை ஓட்டின் உட்புறக் கன அளவு 900 cc ஆக இருக்க, இன்றைய மனிதனது மண்டை ஓட்டின் உட்புறக் கன அளவு சுமார் 1450 cc யாகப் பருமன் அடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே 500000 வருடங்களில் இது 1750 cc ஆக உயரலாம் என்பது சாத்தியமே. அவ்வாறு மாறும்போது மண்டை ஓட்டின் வடிவமானது தற்போதுள்ளது போன்ற நீள்வட்ட வடிவிலிருந்து சற்று மாறி கூடியளவு வட்ட வடிவத்தை நோக்கி நகரக் கூடும் என்கிறார்கள். மண்டை ஓட்டின் நீளத்தை விட அகலம் அதிகரிக்கும் தன்மையை brachycephaly என்பார்கள். இவ்வாறான மாற்றத்தை தெற்கு ஜேர்மனி, பிரித்தானியாவின் சில பகுதிகளிலும் இப்பொழுதே அவதானிக்க முடிவதாகக் கூறுகிறார்கள்.

மண்டை ஓட்டில் ஏற்படக்கூடிய மற்றொரு மாற்றமானது பெண்களை மகிழ்வடையச் செய்யக்கூடியது. 'உங்களை விட நாங்கள் கூர்ப்பில் 500,000 வருடங்கள் முன் நிற்கிறோம்' என ஆண்களைப் பார்த்து பெருமை பேசக்கூடியது.

ஆதிகாலத்தில் மண்டை ஓடானது சற்றுக் கரடு முரடானதாகவும், வளைவுகளில் கூர் முனைப்பானவையாகவும் இருந்தன. ஆனால் கால ஓட்டத்தில் மென்மை கூடியதாகவும் அதிக வழுவழுப்புத்தன்மை கொண்டதாகவும் மாறிவருகிறது. சாதாரண கண்களுக்கு வெளிப்படையாகத் தெரிவது கண்களுக்கு மேல் புருவப் பகுதியில் உள்ள எலும்பு முனை வரம்பு ஆகும்.

பெண்களில் இந்தப் புருவ வரம்பானது வழவழப்பாகவும் வளைவுகள் குறைந்து செங்குத்துத்தன்மை கொண்டதாகவும் இருக்கிறது. ஆண்களில் புருவ வளைவுகள் முனைப்புக் கொண்டதாக இருக்கிறது. இதைச் சுட்ட கூர்ப்பில் தாங்கள் முன்னோடிகள் எனப் பெண்கள் பெருமை கொள்ளலாம். ஆண்களுக்கு அவ் வளைவுகள் மறைய மேலும் 500000 ஆண்டுகள் ஆகலாம்.இவை விஞ்ஞான ஆய்வுகளும் அதன் நீட்சியான ஊகிப்புகளும் ஆகும்.

## முகமாற்றம்

இவற்றின் அடிப்படையில் மனித முகம் எவ்வாறு மாறும்?

ஏற்கனவே சொல்லப்பட்டது போலவே நாம் தலை கனத்தவர்களாக இருப்போம். இரு விதங்களில் தலையினதும் மூளையினதும் அளவு 500000 ஆண்டுகளின் பின் நிச்சயம் அதிகரித்திருக்கும். அதேவேளை அவற்றின் தரத்திலும் செயற்பாட்டுத் திறனிலும் பெருமளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும். இருந்த போதும் மூளையின் அளவில் அதிகரிப்பு ஏற்படுவதை விட அதன் தரத்திலேயே பெருமளவு மாற்றம் ஏற்படும் என வேறு பல விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். விழிகள் கார்ட்டூன் படங்களில் வருவதுபோல பெரியதாகவும் முழிப்பாகவும் தெரியும் என்கிறார்கள். சில இலட்ச வருடங்களின் பின் பூமியில் மட்டுமன்றி வேறு கிரகங்களிலும் மனிதன் வாழ நேரிடும். அவற்றில் பலவற்றில் ஒளி குறைவாக இருக்கக் கூடியவை. எனவே குறைந்த ஒளியிலும் கூர்மையாகப் பார்ப்பதற்கு உதவியாக கண்கள் பெரு மாற்றம் அடையும் எனப்படுகிறது.

பிரபஞ்சத்தில் உலவுவதாலும் வேறு கிரகங்களில் வாழ நேருவதாலும் அதிகளவு UV radiationக்கு எதிர்கால மனிதன் முகம் கொடுக்க நேரிடும் அல்லவா? அதிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சருமத்தின் நிறம் கூடுதலாக கருமையடைவதற்கான சாத்தியங்கள் உண்டு.

## அச்சில் வார்த்த குழந்தைகள் போல

'வாற வருஷம் நாங்கள் பெறப் போற பிள்ளைக்கு என்ரை மூக்கும் உன்ரை பல்வரிசையும்தான் இருக்க வேணும் என்று எங்கடை டொக்டரட்டை சொல்லிப் போடு' என்றான் கணவன். பிள்ளைக்கு என்ன பெயர் வைக்க வேணும் என்று இப்ப நாங்கள் விவாதிப்பதில்லையா? அதைப் போல எதிர்கால விவாதங்கள் இருக்கலாம்.

எதிர்காலக் குழந்தைகள் அச்சில் வார்த்ததுபோல நேர்த்தியாக இருப்பார்கள். முகத்தின் இரு பக்கங்களுக்கும் இடையே சிறிய வேறுபாடுகளும் இன்றி சரியான சமச்சீரானதாக இருக்கும். இது கூர்ப்பினால் ஏற்படப் போவதல்ல. தங்கள் குழந்தைகளின் முகம் அழகாக இருக்க வேண்டும் என்பதற்காக அவற்றின் DNAக்களில் மருத்துவ ரீதியாகக் குறுக்கீடு செய்ய அந்நேரத்தில் முடியும் என்பதால் பிறக்கும் குழந்தைகளின் நிறம் மூக்கின் நீளம், உடல் உயரம் போன்ற யாவற்றையும் பெற்றோர்களே தீர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னித்து விடுவார்கள்.

எல்லாம் சரி! ஒரு இலட்சம் வருடங்களுக்குப் பின் உலகம் இருக்குமா? அணுகுண்டு, இயற்கையைச் சூறையாடல் போன்றவற்றை எல்லாம் தாண்டும் வல்லமை அதற்கு உண்டா எனக் கேட்காதீர்கள். ஒரு வேளை உலகம் தப்பிப் பிழைத்தாலும் மனிதன் அக்காலத்தில் பூமியில் இருப்பானோ என்பதே சந்தேகம். ஒருவேளை இருந்தாலும் அவன் மனிதனாக இருப்பானோ அல்லது வேறு ஒரு உயிரினமாக மாறியிருப்பானோ என்பதும் நிச்சயமில்லை. இதை எல்லாம் யோசித்து ஏன் கற்பனைச் சுகங்களை இழக்க வேண்டும்? ▪

---

*(33ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

என்று அரசியல் யாப்பு ரீதியான தடை இருந்தது. இந்தக் கட்டுப்பாடு இருந்திருக்காவிட்டால் ஜப்பான் இன்று உலகின் பொருளாதாரப் பலம் மிக்க அரசுகளில் ஒன்றாக உயர்ந்திருக்க முடியுமா என்பது சிந்திக்க வேண்டிய கேள்வி. ஆகவே இராணுவச்செலவுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையிலான தொடர்பு சிக்கலான விடயமே. இருந்தபோதும் இராணுவச் செலவு பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும் என்பதற்குச் சில சான்றுகள் உள்ளன. ஐக்கிய அமெரிக்காவில் இராணுவக் கொள்வனவு என்ற ஆய்வை தோமஸ்கார்ஷே (THOMAS CARSEY) வெளியிட்டார். இந்த ஆய்வு இராணுவச் செலவுகள் பலதுறைகளுக்குப் பங்கிடப்படுவதால் நன்மை கிடைக்கிறது என எடுத்துக்காட்டியது. ஏற்கனவே பணக்காரர்களாக இருந்தோர் அமெரிக்காவில் மேலும் பெரிய பணக்காரர் ஆவதற்கு இது உதவியது. ஆனால் இது அமெரிக்காவின் வறிய மாநிலங்களை செல்வந்தப்பகுதிகளாக்கவோ, நாட்டில் வேலையின்மையைக் குறைக்கவோ உதவவில்லை. இது முக்கியமானதோர் விடயம். அரசுகள் இராணுவச் செலவை நியாயப்படுத்துவதற்கு முன்வைக்கும் வாதங்களில் ஒன்று அது வேலைவாய்ப்பை (புதிய பதவிகளை) உருவாக்குகிறது என்பதே. வேலை வாய்ப்பை உருவாக்குகிறோம் என்ற சாட்டு எப்போதும் அரசாங்கங்களால் முன்வைக்கப்படுவதுண்டு. இது ஆதாரமற்ற ஒரு பேச்சு என்பதே உண்மை.

இப்போது மூன்றாவதும் இறுதியுமான விடயத்திற்கு வருவோம். அரசாங்கங்கள் உள்நாட்டில் கைக்கொள்ளும் பலவிதமான தந்திரரோபாய நடவடிக்கைகளோடு இராணுவச் செலவு என்ற விடயம் பிணைக்கப்பட்டுள்ளது. இராணுவப் போட்டியின் உண்மையான பரிமாணங்களை விளக்குவதற்கு அரசாங்கம் தனது கொள்கைப் பிரசாரத்தை யாரை நோக்கி முன்வைக்கிறது என்று பார்க்க வேண்டும். ஐக்கிய அமெரிக்காவில் ஆயுத உற்பத்திச் செலவு பற்றிய சர்ச்சைகளில் வெளியில் இருந்து வரும் ஆபத்து என்ற விடயம் எப்போதும் முன்னிறுத்தப்படும். இதன் மூலம் நாட்டுக்குள் இயங்கும் அதிகாரக் கூட்டுக்களை ஒன்று திரட்டிப் பலப்படுத்தலாம். அமெரிக்க அதிபர் ரீகன் காலத்தில் நவ பழமைவாதக் கூட்டு (நியோ-கொன்சர் வேட்டிவ் புளக்) ஏற்படுத்தப்பட்டிருந்தது. இது 'ரஷ்ய ஆபத்து' என்ற விடயத்தின் உதவியில்லாமல் சாத்தியமாகி இருக்காது. ஏகாதிபத்திய எண்ணம் கொண்ட நாடுகளில் இராணுவச் செலவு சிக்கலான பல விடயங்களுடன் பிணைக்கப்பட்டுள்ளது. அரசைக் கட்டியெழுப்புதல், பிராந்தியப் பொருளாதார வளர்ச்சி என்பனவற்றோடு மட்டுமல்லாமல் அரசாங்கங்கள் பலாத்கார வன்முறையை முதன்மைப்படுத்திக் காட்டும் திறமையிலும் இது தங்கியுள்ளது.

உலகின் இராணுவச் செலவுகளுக்குப் பின்னால் உள்ள உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அரசாங்கங்களின் நடத்தையின் சுயமான இயல்பு இதுதான் என்று கூறும் பொதுமைப்படுத்திய கூற்றுகளை ஊடுருவிப் பார்த்து அடியாளத்தில் உறையும் உண்மைகளைக் காண வேண்டும். அரசாங்கங்களை அதிகாரத்தை உச்சப்படுத்துபவை என்று வர்ணிப்பதை விடுத்து ஒவ்வொரு சமூகத்திலும் இடம்பெறும் இராணுவமயமாக்கலின் அரசியல் (Politics of militarism) என்ற சிக்கலான பிரச்சினையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ▪

*த கார்டியன்*

---

*(45ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

நிலை குழப்பத்திற்கே இட்டுச் செல்லும். க்ரானி கேபிடலிசம், அம்பானி - அட்னானி - காங்கிரஸ் - மோடி கூட்டணி பற்றி முதல் நாள் ஆரவாரித்த கெஜ்ரிவால் அடுத்த நாள் முதலாளிகள் கூட்டமைப்பில் தான் கார்பொரேட்களுக்கு எதிரானவனல்ல எனக் கூறியதும், காஷ்மீர், ஈழப் பிரச்சினைகளில் வெவ்வேறு தலைவர்கள் வெவ்வேறு கருத்துகளைப் பேசுவதும், இன வெறுப்புடன் பேசிய, நடந்து கொண்ட டில்லி அமைச்சரைக் கடைசி வரை விட்டுக் கொடுக்காததும், ஹரியானாவில் தங்களுக்குக் கொஞ்சம் ஆதரவிருக்கிறது என்பதற்காக சாதி ('கப்') பஞ்சாயத்துக்களை ஆதரித்ததும் அவர்களிடம் முக்கிய அம்சங்களில் கொள்கைத் தெளிவு இல்லாததன் விளைவே.


எப்படியும் காங்கிரஸ், பா.ஜ.க இரண்டும் மொத்தத்தில் 270 இடங்களைத் தாண்டப் போவதில்லை, இடதுசாரிகள், ஆம் ஆத்மி கட்சி ஆகியனவும் பெரிதாகச் சாதிக்கப் போவதில்லை. தேர்தலுக்குப் பின் புதிய அரசு அமைப்பதில் மாநிலக் கட்சிகளின் பங்கு முக்கியமானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சி அமைத்தால் அதை ஆதரிப்போம் என கருணாநிதியும், ஏ.பி பரதனும் கூறியுள்ளனர். பிற மாநிலக் கட்சிகள் என்ன நிலை எடுக்கும் எனத் தெரியவில்லை. சந்தர்ப்பவாதம் இதில் பெரிய அளவு பங்கு வகிக்கும் என்பதில் ஐயமில்லை. ▪

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுப்பரவல்

# தி.க.சி.

## (1925- 2014)



## மாறாத இடதுசாரி இலக்கியத் தடம்

மூர்.ஜீவானந்தம்

இந்த முகவரியைத் தெரியாத சிறுபத்திரிகைகளும் இடதுசாரி இதழ்களும் இருக்கவே முடியாது: 21 இ, சுடலை மாடன் தெரு திருநெல்வேலி டவுண். இம் முகவரிக்கு சொந்தக்காரரும் மூத்த எழுத்தாளருமான தி.க.சி. என்கிற திருநெல்வேலி கணபதியப்பன் சிவ சங்கரன் தனது 90ஆவது வயதில் (24.03.2014) கால மானார். சமூக அக்கறையுடன் இயங்கிய தி.க.சி மரண தண்டனை ஒழிப்பு, கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டம் என்று தனது முதிய வயதிலும் இச்சமூகம் கண்ட பிரச்சினைகளுக்கு குரல் கொடுத்தவர். இறுதி வரை வாசகராக இருந்தவர். இதற்கு இவர் எழுதிய எதிர்வினைகளும் கடிதங்களும் சாட்சி.

நெல்லைச் சீமையில் இலக்கியம் வளர்த்த மூன்று 'சி'க்களில் (டி.கே.சி, தொ.மு.சி,தி.க.சி) இவரை சற்று முக்கியமாக குறிப்பிட்டுச் சொல்லலாம். இலக்கியத் தைப் பொறுத்தவரையில் தான் இன்னும் ஒரு மாணவன் தான் என்று அடக்கத்துடன் சொல்லிக்கொள்பவர். இதுவ ரையில் ஆறு மொழிபெயர்ப்பு நூல்களையும், நான்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனாய்வு நூல்களையும் எழுதியுள்ளார். அதில் 'விமர்சனங்கள் - மதிப்புரைகள் - பேட்டிகள்' என்ற இவரது நூலுக்காக 2000 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அக்கடமி விருது வழங்கப்பட்டது. எப்போதும் தன் வீடு தேடி வருகின்ற அன்பர்களை வாசல் வரைக்கும் எழுந்து வந்து உற்சாகமாக வரவேற்கக்கூடிய பாசாங்கற்ற பண்புடையவர். இளையவர், மாணவர்கள் என்று பாகுபாடு இல்லாமல் அனைவரையும் தோழமையுடன் அரவணைத்துக்கொள்ளக்கூடியவர். மூத்த எழுத்தாளர்கள், இளம் எழுத்தாளர்கள் என்ற பாகுபாடு காட்டத் தெரியாதவர்.

தி.க.சி திருநெல்வேலியில் 1925 மார்ச் 30 ஆம் திகதி கணபதியப்பன் - பார்வத்தம்மாள் தம்பதியினருக்கு மூத்த மகனாகப் பிறந்தவர். தனது இளம் வயதிலேயே தாய், தந்தையர்களை இழந்துவிட்டவர். இவரது தாய் மரணப்படுக்கையில் இருந்தபோது சொன்ன வார்த்தைகள் (நல்லா படிக்கணும், நல்லவனாய் வாழணும், நல்ல பெயரை எடுக்கணும்) இவர் மறைவு வரை இவரது காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தது. இவர் பள்ளிக்கூடத்தில் படித்த காலத்திலும் பள்ளி நேரம் தவிர்ந்த இதர நேரங்களிலும் திருநெல்வேலி சைவசித்தாந்த நூல்பதிப்புக் கழகம் சார்ந்த நூல்களையும் ஆறுமுக நாவலர் நூலகம் சென்று நல்ல நூல்களை எடுத்தும் படிப்பதையே தனது பொழுதுபோக்காகக் கொண்டிருந்தார்.

1936ஆவது வருடம் இந்தியாவில் விடுதலை வேள்வி கொழுந்துவிட்டெரியும் நேரம் நெல்லையிலும் போராட்டம். ஜவுளிக்கடை மறியல், ஆர்ப்பாட்டம் எல்லாம் நடைபெற்றன. தெருவில் தேசபக்த பஜனை நடக்கும். தொண்டர்கள் பாரதி பாடல்களைப் பாடிக்கொண்டு போவார்கள். கதராடை அணிந்து தலையில் காந்திக் குல்லாவுடன் சட்டையில் பகத்சிங் பட்ஜ் குத்திக்கொண்டு காங்கிரஸ் தியாகி எம்.ஆர்.சுப்ரமணியம் பாரதி பாடல்களைப் பாடிச் சென்ற கம்பீரம் தி.க.சி.யையும் விடுதலை உணர்வு கொள்ளத் தூண்டியது. அரசியல் ஆர்வம் வளர்ந்துவந்தது. காந்தியின் நூல்களைத் தேடிப்படிக்கலானார். இப்படி அரசியல் ஆர்வம் தலைதூக்கி வளர்ந்து வந்தாலும் பாடசாலையில் முதல் மாணவனாகவும் தி.க.சி. விளங்கி வந்தார்.

1936-40 ஆம் ஆண்டுகளில் காங்கிரஸ் கட்சிகளின் செயலாளராக இருந்து பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் சிந்து பூந்துரை சண்முகம். இவர் தன் சொந்தச் செலவில் சோவியத் நூல்களை மொழிபெயர்த்து வெளியிட்டவர். கம்யூனிஸ்ட் தத்துவங்களை அறிய நிறைய புத்தகங்களை தி.க.சி.யிடம் படிக்கக் கொடுத்தவர். அப்புத்தகங்கள் தி.க.சி.யின் வாழ்க்கையை மாற்றியமைத்தது. இவர் சமூகம் குறித்த இடதுசாரிப் பார்வையை வளர்த்துக் கொள்ள ஆரம்பித்தார். 1941ஆம் ஆண்டில் தி.க.சி.கல்லூரியில் அடியெடுத்த போது பாரதிதாசன், வ.ரா ஆகியோரின் படைப்புகளுடன் பரிச்சயம் ஏற்பட்டது. இவரது கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர்களாக பணியாற்றிய கு.அருணாசலக் கவுண்டரும் ஆ.முத்துசிவனும் பாரதிதாசன் கவிதைகள் புத்தகத்தை இவரிடம் படிக்கக் கொடுத்து கவிதையில் ஆர்வத்தை ஏற்படுத்தினர். இந்தக் காலத்தில் கல்லூரியின் பழைய மாணவர் என்கிற முறையில் 'நானும் என் கதைகளும்' என்ற தலைப்பில் புதுமைப்பித்தன் பேசினார். ஒவ்வொரு கதையையும் தான் எப்படி எழுதினேன் என்பதை அருவிபோல புதுமைப்பித்தன் விளக்கிக் கொண்டே போனார். அக்காட்சிகள் ஒரு நாடகம் போல தி.க.சி.யினுடைய கண்களில் நிழலாடியது. இலக்கியம் பற்றிய அனுபவத்தை புதிதாக உள்வாங்குவதற்கான களம் திறக்கப்பட்டது.

**தி.க.சி.யை ஒத்த தலைமுறையைச் சார்ந்த ஈழத்து எழுத்தாளர் எவரிடமும் அவரது ஆளுமைப்பண்புகளைத்தேட முடியவில்லை. இடதுசாரி அரசியலை வலுப்படுத்தி வளர்த்தெடுப்பதற்கான உலகப் பார்வையை, கருத்தியல் நோக்கை தி.க.சி. வெளியிட்டதுபோல் ஈழத்து தமிழ் இடதுசாரிகளால் வெளிப்படுத்த முடியவில்லை**

1941-42ஆம் ஆண்டு தான் பார்த்து வந்த வேலையை உதறித்தள்ளிவிட்டு முழு நேர எழுத்தாளராக நெல்லைக்கு வந்து தங்கிய தன்னுடைய நண்பரும் குருநாதனுமான வல்லிக்கண்ணனை அழைத்து தான் நடத்தி வந்த 'இளந்தமிழன்' என்கிற கையெழுத்துப் பத்திரிகைக்கு ஆசிரியராக அமர்த்தி அழகுபார்த்தார். வல்லிக் கண்ணன் வைத்திருந்த நூலகம் தி.க.சி.யினுடைய அறிவுப் பசிக்கு தீனி போடுவதாக இருந்தது. இளந்தமிழன் இதழில் தி.க.சி.யினுடைய படைப்புகள் பல பிரசுரமாகின. அவற்றுள் சில அப்போது நாரணதுரைக்கண்ணனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த பிரசண்ட விகடனிலும் பிரசுரமானது. இதனைத் தொடர்ந்து கிராம ஊழியன், கலாமோகினி, ஹனுமான், இந்துஸ்தான் போன்ற இதழ்களிலும் இவரது படைப்புகள் வெளியாகின.

இந்தக் காலகட்டத்தில் தி.க.சி சினிமா விமர்சனம் எழுத ஆரம்பித்தார். இதை அறிந்த பேராசிரியர் வான மாமலை சினிமா விமர்சனம் எழுதி வீணாகி விடாதே. அதற்குப் பதிலாக புத்தக விமர்சனம் எழுது என்று தி.க.சி.யைப் பணித்தார். அப்போது மு.வரதராசனாரின் புத்தகங்கள் தமிழகத்தில் அதிகளவு விற்பனையாகிக் கொண்டிருந்த நேரம். பேரா.நா.வான மாமலை தி.க.சி.யிடம் மு.வ.வினுடைய புத்தகங்களை விமர்சனம் செய் என்று சொல்ல மு.வ.வினுடைய 80க்கும் மேற்பட்ட நூல்களை வாங்கி ஒரே மூச்சில் படித்து முடித்து விட்டு அந்நூல்களை நடுநிலைமை, நிதானம், முரண்பாடின்மை என்கிற விமர்சனப் பண்புகளோடு விமர்சித்து எழுதி அதை மு.வ.விற்கே அனுப்பி வைத்தார். சில நாட்கள் கழித்து 'உங்கள் கருத்தை சொல்லியிருக்கிறீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி' என மு.வ.விடம் இருந்து ஒரு போஸ்ட் காட் வந்து சேர்ந்தது தி.க.சி.க்கு.

1947 ஆம் ஆண்டு அக்டோபர் 13 அன்று எட்டயபுரத்தில் பாரதி மணி மண்டபத் திறப்பு விழாவில் பாரதி வழி என்னும் தலைப்பில் தோழர் ஜீவா நிகழ்த்திய ஒரு மணிநேர சொற்பொழிவை தி.க.சி. கேட்டார். இதன் பின்னர் ஜீவாவின் சீடர்களில் ஒருவனாகத் தன்னை இணைத்துக் கொண்டார். ஜனசக்தி ஆசிரியர் என்றளவில் மட்டுமன்றி பாரதியின் புரட்சிகர சிந்தனையின் அருமை பெருமைகளை தமிழ் நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் பரப்பியவர் என்கிற நிலைப்பாட்டில் ஜீவாவை அதிகமாகவே நேசிக்க ஆரம்பித்தார் தி.க.சி. ஜீவா வழிவந்த உயிர்ப்பான செயற்பாட்டுத்தளம், செயலாற்றுகை முதலானவற்றை தி.க.சி. தன்வசப்படுத்திக்கொண்டார். இலக்கியச் செயற்பாட்டாளராக இயங்குவதற்கான அனுபவத்தை, முதிர்ச்சியை ஜீவாவிடம் கற்றுக்கொண்டார்.

தி.க.சி. வங்கியிலும் சிறிது காலம் பணியாற்றினார். அப்போது வங்கிப் பணியாளர் சங்கம் அமைப்பதில் தீவிரமாக இயங்கிவந்தார். இதனால் பல்வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். பல அவஸ்தைகளுக்கு உள்ளானார். பல்வேறு ஊர்களுக்கு பணிமாற்றம் செய்யப்பட்ட போதிலும் தனது இலட்சியத்தில் எந்த வித மாற்றமும் ஏற்படாமல் உறுதியாக இருந்தார். எந்தக் காரணத்தால் இவர் பணிமாற்றம் செய்யப்பட்டாரோ அந்தக் காரணத்தால் தொழிற்சங்கம் அமைப்பதை அங்கெல்லாம் தொடர்ந்தார். 1964ஆம் ஆண்டு இறுதியில் குடும்பத்தாரின் அதிருப்தி எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் வங்கிப் பணியைத் துறந்து சென்னை வந்து சேர்ந்தார். இதன் பின்னர் சோவியத் நாடு இதழில் தனது கல்லூரித் தோழனும் தலைசிறந்த மார்க்சிய வாதியுமான ஏ.எஸ். மூர்த்தியுடனும் தொடர்பை வலுப்படுத்திக் கொண்டார். மேலும் சிறுபத்திரிகையை பெரும்பத்திரிகைக்கு இணையாக எல்லோரும் விரும்பிப் படிக்கும் வண்ணம் நடத்த முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில் சரஸ்வதி என்ற தலைசிறந்த இதழை நடத்திக் கொண்டிருந்த விஜயபாஸ்கரனோடும் இணைந்து பணியாற்றினார். சுமார் 25 ஆண்டுகள் (1963-90) சோவியத் செய்தித்துறையில் ஆசிரியர் குழுவில் ஊதியம் பெற்று பணியாற்றி பின்பு ஓய்வுபெற்றார்.

தி.க.சி.யின் எழுத்துலக வாழ்க்கையில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியது, தாமரை முற்போக்கு இலக்கிய இதழின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றமையைக் குறிப்பிடலாம். 1965-73 காலகட்டங்களில் இந்தப் பொறுப்பை தி.க.சி. வகித்திருந்தார். இன்று பிரபலமாக விளங்கும் எழுத்தாளர்களுக்கு தாமரை ஒரு நாற்றங்காலாக விளங்கியது. பேரா.நா.வான மாமலை வழிகாட்டி வந்தார். ஆண்டு தோறும் சிறுகதை மலர் வெளியிடப்பட்டது. குறிப்பாக மொழிபெயர்ப்பு சிறுகதை மலர், கரிசல் இலக்கிய மலர், பாரதி மலர், வியட்நாம் மலர் ஆகியவற்றை தாமரை வெளியிட்டது. இந்தக் காலகட்டத்தில் எழுச்சி பெற்ற கலை, இலக்கியம் சம்பந்தமான முக்கிய பிரச்சினைகளில் எல்லாம் தாமரை அக்கறை கொண்டிருந்தது. தனது நிலைப்பாட்டை உறுதியுடன் தெரிவித்து வந்தது. ஈழத்துப் படைப்பாளிகளுக்கும் மிகுந்த ஊக்கம் அளித்து வந்தது. இந்தக் கால தாமரையின் பணிகளில் தி.க.சி.யின் பங்களிப்பு வலுவானது.

தி.க.சி. தாமரையின் ஆசிரியராக இருந்த காலப்பகுதி தொடர்பில் எழுத்தாளர் பூமணி ஒரு பேட்டியில் குறிப்பிடுவது இங்கு கவனத்திற்குரியது. 'நாங்கள் தாமரை எழுத்தாளர்கள் ஒரு பெரிய கூட்டம். பிரபஞ்சன், பா.செயப்பிரகாசம், பூமணி, வண்ணநிலவன், கோ.ராசாராம், தமிழ்நாடன், ஆ.மாதவன், அழ. கிருஸ்ணமூர்த்தி இப்படியொரு தாமரைக் கூட்டம் தி.க.சி.வளர்த்து விட்ட பிள்ளைகள். நாங்கள் தி.க.சி.யினுடைய அரவணைப்பில் வளர்ந்தார்கள். தமிழிலக்கியத்திற்கு அதுவும் இடதுசாரி இலக்கியத்திற்கு அவர் மிகப்பெரிய பங்களிப்புச் செய்திருக்கிறார். அவர் இல்லையென்றால் இன்றைக்கு இருக்கும் எழுத்தாளர்களில் பலர் நமக்கு கிடைத்திருக்க மாட்டார்கள்'. பூமணியின் இந்தக் கூற்று தி.க.சி.யின் ஆளுமையை எடுத்துக் காட்டுகின்றது. இடதுசாரி இலக்கியத்திற்கு புதுவளம் சேர்த்தவர் தி.க.சி.

தி.க.சி. தனது ஆரம்ப காலத்தில் இருந்து படைப்பாளிகள் இலக்கிய ஞானத்தைப் பெறுவது முக்கிய கடமை என்றும் அவர்களது படைப்புகள் தேசிய மற்றும் சர்வதேசத் தரத்திற்கு இணையாகத் திகழவேண்டும் என்கிற உன்னத இலட்சியத்தோடு செயற்படவேண்டும் என்றும் வலியுறுத்தி வந்தார். ஒரு படைப்பானது பொதுவாக வாழ்க்கையில் காணப்படும் யதார்த்த நிலைகளையும் பிரச்சினைகளையும் சித்தரிப்பதைத் தவிர அதை விமர்சனப்படுத்துவதாகவும் அமைதல் வேண்டும். ஒரு படைப்பாளியின் படைப்பில் கலையழகு, உலகளாவிய மனிதகுல நேயம், சமூக நோக்கு ஆகிய மூன்று அம்சங்கள் நிறைந்து கிடக்க வேண்டும் என்பார் தி.க.சி. இதனை எப்போதும் ஆற்றுப்படுத்துவதற்கான உலகக் கண்ணோட்டமாகவும் கொண்டிருந்தார். அனைத்தையும் மீறி படைப்பாளி அடிப்படையில் சிறந்த மனிதனாகவும் விளங்க வேண்டும் என்பார்.

தி.க.சி. எழுத்தாளர், விமர்சகர், மொழிபெயர்ப்பாளர், பத்திரிகையாளர், தொழிற்சங்கவாதி என பல்வேறு பரிமாணங்களுடன் இயங்கி வந்தவர். எப்போதும் வாசிப்பு என்பது ஒரு அரசியல் செயற்பாடாகவே தி.க.சி.க்கு இருந்து வந்துள்ளது. இளைய தலைமுறையினரை ஆற்றுப்படுத்தி வழிகாட்டுவதையும் தமது பணிகளில் ஒன்றாகவே கருதிவந்துள்ளார். தனது அனுபவம், தேடல் சார்ந்து தமிழியம், பெண்ணியம், தலித்தியம், சுற்றுச் சூழலியம், மார்க்சியம் என்கிற பஞ்சசீலக் கொள்கையை இலக்கியத்திற்கும் இலக்கியப் படைப்பாளிகளுக்கும் வகுத்துக்கொடுத்துள்ளார். இந்தப் பஞ்ச சீலக் கொள்கையின் அடிப்படையிலேயே எதிர்கால வியல் பற்றிய தரிசனத்தை முன்வைத்தார். தனது இறுதி மூச்சுவரை இந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்ச சீலக் கொள்கையை உயர்வாகப் பற்றிப்பிடித்து வந்துள்ளார்.

நான் பஞ்சசீலர் கொள்கைகள் என்று பெயரிட்ட ஐந்து கருத்தாக்கங் களிலும் இசம் ஒட்டிக்கொண்டிருப்ப தால் தவறான கணிப்புக்கு ஆட்பட லாம். இவை கொங்ரீற்றில் வார்க்கப் பட்ட, மாற்றத்திற்கு அப்பாற்பட்ட இறுகிப்போன விடயங்கள் அல்ல. காலத்தின் அனுபவத்தின் தாக்கத் தால் விளையும் மாறுதல்களை உள் வாங்கும் ஆற்றலும் நெகிழ்வுத்தன் மையும் உள்ளவை. தனிமைப்பட்டுப் போகும் குழு மனப்பான்மைக்கும் குருட்டுத்தனமான தலைமை வழி பாட்டுக்கும் நான் இரையாக மறுக்கி றேன். இந்தப் பின்னணியில் எனது ஐந்து கருத்தாக்கங்களைக் குறித்த துணைவிளக்கம் தேவை. இதுபற்றி தி.க.சி.யின் வார்த்தைகளிலேயே தொடர்ந்து புரிந்துகொள்வோம்.

தமிழியம் என்பது தமிழ்மொழி/ தமிழ்மக்கள் சார்பு. பண்டிதத்தன மான கிணற்றுத் தவளைத்தனம் அல்ல. இது மண்சார்பு, வேர்மட்ட கலாசார சார்பு, வளரும் அறிவு நூற் றாண்டுச் சவால்களை எதிர்கொள்ள தமிழை புத்துருவாக்கும் சார்பு.

பெண்ணியம் என்பது காலம் கால மாக பெண்மக்கள் சுமந்திருந்த நுகத் தடிகளைக் களையவும் பெண் தன் ஆளுமை வெளிப்பாட்டில் பொருளா ர்ந்து செயற்படவும் அமைப்புசார் அநீதிகளைக் களையவும் வழிவகுக் கும் சார்பு. எல்லா வரலாற்று/ இன் றைய நிகழ்வுகளிலும் ஆணாதிக்க கூறுகளையே இனம் காணுவது ஆண் எதிர்ப்புக் கோஷங்களும் எனது பெண்ணியப்பார்வையுடன் இணைந் தது அல்ல. என்பார்வையில் பெண் விடுதலை என்பது ஆண்விடுதலை யையும் உள்ளடக்கிய பரந்துபட்ட மானுடவிடுதலையின் ஓர் அம்சம் தான்.

தலித்தியம் ஒடுக்கப்பட்ட எல்லா மக்கள் குழாங்களின் அர்த்தமுள்ள விடுதலை /முன்னேற்றம் சார்ந்தது. இந்தக் கருதுகோளை ஒரு சில சாதிக ளின் வரம்புக்குள் சிறைப்படுத்துவது எனக்கு உடன்பாடு அல்ல. பரந்து பட்ட சமூக அநீதி எதிர்ப்புத்தான், சமூக நீதி சார்பு தான் எனது தலித்தியம்.

எனது சுற்றுச்சூழலியம் இயற்கை வளத்தையும் சுற்றுச்சூழலையும் பொறுப்புடனும் விவேகத்துடனும் பேண வேண்டுமென்ற பிரக்ஞை. இப் பிரக்ஞையின் பாற்பட்ட செயலாக்க முனைப்பு. சென்ற தலைமுறை நமக்கு அளித்த கொடையாகவும் அதைப் பேணிக்காத்து வளர்த்து அடுத்த தலைமுறைக்கு நாம் கொடுக்க வேண் டிய சொத்தாகவும் இதைக் காணும் அறங்காவல் அணுகுமுறை. அதே நேரத்தில் எல்லா வளர்ச்சி/ மேம் பாட்டு முயற்சிகளையும் சுற்றுச் சூழல் என்ற கோஷத்தின் அடிப்ப டையில் எதற்கும் வறட்டுத் தனத்தி ற்கு என் சுற்றுச்சூழலியத்திற்கு இட மில்லை.

அடுத்து மார்க்சியம். சமூக வர லாற்று இயங்கு காரணிகளைப் பகுத் தறியவும் இந்த அறிவின் / புரித லின் ஊடாக அர்த்தமுள்ள மாற்றத்தி ற்கு வழிகோலவும் உதவும் தத்துவப் பாதை என் மார்க்சியம். இந்த உன்னத மான தத்துவத்தை ஒரு சில சூத்திரங்க ளுக்குள் முடக்கிப்போடுவது மார்க் சிய தத்துவ இயங்குநெறியைக் கொச் சைப்படுத்துவதென்பது என் கருத்து. மாற்றங்களில் இன்றியமையாத் தன் மையை சுவீகரிப்பதுதான் வரலாற்று மாற்றங்களின் இயங்குசக்திகளை இனங்காணுவதும் அதனூடாக செய லாக்கத்திற்கு முன் நிற்பதுதான் மார்க் சிய உயிர்நாடி, மார்க்சிய தர்க்கம். உயிர்ப்புள்ள தத்துவ/ செயல்நெறி வழிகாட்டி தான் எனது மார்க்சியம்.

இந்தப் பரந்த பின்புலத்தில் எனது நீண்டகால நோக்கு இவ்வாறு மொட் டவிழ்கிறது. எனது பஞ்சசீலக்கொள் கைகளின் சாரம் மனிதாயம். அதன் வேரில் இருந்து ஒரு புதிய கலாசாரம் முகிழ்த்தலும், அது ஒரு புதிய மனி தனை ஈன்றெடுக்கும். இப்புதிய மனி தர்களின் சங்கமம் ஒரு புது உலகிற்கு வழிவகுக்கும். இந்த இலக்கு தேட்டத் தில் குழுக்களாகச் சிதறுவதைத் தவிர் த்து கூட்டு முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள தி.க.சி.யின் தத்துவப்பாதை தத்துவத்தை மீறிய பரவலான உலகப்பார்வை, சமூகப் பொறுப்புணர்வுள்ள மனிதநேயம் சார்ந்த தெளிவான கட்டமைக்கப் பட்ட பார்வை. இந்தப் பார்வைக்கும் தான் வரித்துக்கொண்டுள்ள கருத்திய லுக்கும் உண்மையாக தம் வாழ்வை அர்ப்பணித்தமையே தி.க.சி.யின் வாழ்வின் சிறப்பு. உள்ளுணர்வு, அறி வுத்தெளிவுடன் ஓர் அடிப்படை வாழ்வு இலக்கைத் தேர்ந்தெடுத்து அந்த இலக்கை என்றும் முன்னிறுத்தி அதனின்று வழுவாது நின்றவர் தி.க.சி. தமிழிலக்கிய உலகில் பல களங்களுடனும் படைப்புகளுடனும் 60 ஆண்டுகளுக்கு மேலாக இடைய றாத ஈடுபாடும் பங்களிப்புகளும் இவரது முக்கிய பணிகள். இடதுசா ரித்தனமான பார்வையை விரிவாக்கி ஆழப்படுத்தி தமிழ்ச் சமூக அசைவி யக்கம் தொடர்பில் நீண்ட உரையா டல்களுக்கான களங்களைத் திறந்து விட்டவர். இதனால் ஈழத்தமிழர் விவகாரத்திலும் தெளிவான அரசி யல் கண்ணோட்டம் கொண்டிருந்த வர்.

தி.க.சி.யை ஒத்த தலைமுறையைச் சார்ந்த ஈழத்து எழுத்தாளர்கள் எவ ரிடமும் இவரது ஆளுமைப் பண்புக ளைத் தேடமுடியவில்லை. இடதுசாரி இலக்கியத்தை, இடதுசாரி அரசியலை வலுப்படுத்தி வளர்த்தெடுப்பதற்கான உலகப்பார்வையை கருத்தியல் நோக்கை தி.க.சி.வெளியிட்டதுபோல் ஈழத்து தமிழ் இடதுசாரிகளால் வெளிப்படுத்த முடியவில்லை. அந் தளவிற்கு வறுமையும் வறட்சியும் ஈழத்து இடதுசாரிகளைப் பீடித்துள் ளது. தி.க.சி.யை நினைவுகொள்ளல் தவிர்க்க முடியாமல் நமது சூழலை யும் உரசிப்பார்க்க வேண்டிய அவசி யத்தை உருவாக்கியுள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைப்பித்தனுக்கு வந்த சோதனை

அதிசேனன்





புதுமைப்பித்தன்

சென்னை பல்கலைக்கழகம் இளங்கலை தமிழ்ப் பாடத்திட்டத்தில் உள்ள புதுமைப்பித்தன் சிறுகதைத் தொகுப்பில் இருந்து இரண்டு கதைகளை அதிரடியாக நீக்கிவிட்டது. 'பொன்னகரம்' மற்றும் 'துன்பக்கேணி' ஆகிய கதைகள் தலித் மக்களை மோசமாகச் சித்தரிப்பதாக பல்கலைக்கழகம் முடிவு செய்திருக்கிறது. இந்த முடிவு சில வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற பல்கலைக்கழக ஆட்சிமன்றக்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பொன்னகரம் (1934) அன்றைய மதராஸ் பட்டினம் பற்றியது. இக்கதையில் நோயாளிக் கணவனைப் பசியாற்ற அவள் மனைவி பாலியல் தொழிலில் ஈடுபடுவது பேசப்படுகிறது. இரவின் ஒளிவெள்ளத்தில் மிதக்கும் மதராஸ் பட்டினத்தின் இருண்ட சந்துகளில் கற்பு விலை போவதைப் பற்றிப் பேசும் புதுமைப்பித்தன் கதை முடிவில் 'என்னமோ கற்பு கற்பு என்று கதைக்கிறீரே இதுதான் ஐயா பொன்னகரம்' என்று விளாசுகிறார். பிறப்பால் பெண்ணாகப் பிறந்தவளுக்கு கற்பு வேலி போட்டு உடலை விலைபேசும் கலாசார ஈனத்தைப் பற்றி புதுமைப்பித்தன் போல வெளிப்படையாகப் பேச யாருக்கும் அப்போது துணிவில்லை. அதைவிட இந்தக் கதை எழுதப்பட்டு வந்த காலம் முக்கியம். இந்தப் பின்னணியில் வைத்துத்தான் நாம் இந்தக் கதையை வாசிக்க வேண்டும், புரிந்துகொள்ள வேண்டும்.

இதுபோல் துன்பக்கேணி (1935)கதை இலங்கைத் தேயிலைத் தோட்டத்தில் கூலிகளாக பஞ்சம் பிழைக்கத் தள்ளப்பட்டவர்களில் தலித் பெண்ணுக்கு நேர்ந்த கொடுமைகளைப் பற்றியது. அந்தப் பெண்ணை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கிய ஸ்டோர் மனேஜர் அவளுடைய மகளையும் பலவந்தப்படுத்தி கெடுத்ததை அறிந்ததும் பத்திரகாளியாகிறாள். 'என்னைக் கெடுத்த பாவி என் மகளையும் குலைத்தாயே' எனக் கூவி அவனது நெற்றிப் பொருத்தில் கல்லைத்தூக்கிப் போட்டுக் கொல்கிறாள். எதார்த்தத்தில் இப்படி அந்தக்காலத்தில் நடக்குமோ இல்லையோ. ஆனால் கதையின் முடிவில் புதுமைப்பித்தன் பொறுக்கமுடியாமல் இயற்கையான நியாயத்தை வழங்கியுள்ளார். இது புதுமைப்பித்தனது படைப்புக் கலைக்கு ஒவ்வாததொன்று. வேறு கதைகளில் இவர் இப்படி ஆவேசப்பட்டு முடிவைத் தாமே வழங்கியதில்லை. இங்கே துன்பக்கேணியில் தன்னையும் தன் மகளையும் கெடுத்தவனை தலித் பெண் கொலை செய்வதில் உச்சத்தைத் தொட்டுவிட்டது.

இலங்கையின் தேயிலை தோட்டங்களில் பணிபுரிந்த ஏழை தலித் பெண்கள் எவ்வாறு அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் பல்வேறுவிதமான துன்பங்களுக்கும் பாலியல் சித்திரவதைகளுக்கும் ஆளானார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது துன்பக்கேணி. இதனை அந்தக் காலத்தின் பின்னணியில் நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால், நம் துரதிருஷ்டம் புதுமைப்பித்தன் எக்காலத்திற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புத்தகங்கள் சொல்லும் கருத்துகள் தவறானவையாகவே இருந்தாலும்கூட அவற்றை எதிர்க்கருத்துகளின் மூலம்தான் வெல்ல முடியுமே தவிர நீதிமன்ற உத்தரவுகளாலும் சிறு குழுக்களின் அதிகார ஆணைகளினாலும் முறியடிக்க முடியாது. பாடத்திட்டத்திலிருந்து கதைகளை நீக்குவதால் பாடப்புத்தகக்குழு சாதியத்தைக் கடந்து போகும் விடுதலையை அடையும் என்று எதிர்பார்க்க முடியாது . பாடத்திட்டக்குழுவில் உள்ளவர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் பல்கலைக்கழக துணை வேந்தர்களுக்கும் நெஞ்சில் உரமும் செயலில் நேர்மையும் மற்றோரை விடவும் அதிகம் இருக்க வேண்டும்**

குமான எழுத்தாளன் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியவர்கள் புரிந்துகொள்ளாததும், அதன் காரணமாக உருவான பண்பாட்டு வறுமையும் அந்தப் பண்பாட்டு வறுமை ஈன்றெடுக்கும் பண்பாட்டு வன்முறையும் கவலை அளிக்கிறதென ஆதங்கப்படுகிறார் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர்.வீ.அரசு.

'புதுமைப்பித்தன் எனும் பிரம்மராஷஸ்' எனும் நூலை எழுதியவர் ராஜ்கௌதமன். இவர் தலித்திய ஆய்வாளர், விமர்சகராகவும் நன்கு அறியப் படுபவர். தற்போது புதுமைப் பித்தன் கதைகளை நீக்கியமை தொடர்பில் தனது பார்வையை வெளிப்படையாகவும் முன்வைத்து வருகிறார். மேலும், இந்தப் பிரச்சினை தொடர்பான கட்டுரை ஒன்றில் 'இயற்கையில் மானாகப் பிறந்த பிறப்பு மான் இனத்தின் உயிர் வாழ்வைத் தீர்மானிக்கிற மாதிரி, விலங்குண்ணியாகப் பிறந்த பிறப்பு அவ்விலங்கினத்தின் உயிர்வாழ்வைத் தீர்மானிக்கிற மாதிரி, மனிதரின் சாதிப் பிறப்பு அந்தந்த சாதிக்குழுவின் வாழ்க்கையை சாதிய ஏறுவரிசை நிர்ணயிக்கிற படி வாழத் தீர்மானித்து வந்துள்ளது. விலங்கு நிலை தொடர்கிறது. முழு மனிதராக மாற்றம் நடை பெறவில்லை.

இத்தகைய சாதி உறவுகளில் புலப்படுகின்ற மிருகத்தன்மைகளை படைப்புவழி அணுகி ஆராய்ந்த புதுமைப்பித்தனுடைய சிறுகதைகளில் பாதிக்கப்பட்ட சாதி மக்கள் அவமான உணர்வு பெறவோ அல்லது பாதித்த சாதி மக்கள் குதூகலமடையவோ எவ்விதத் தடயங்களும் இல்லை. சிறந்த இலக்கிய ஆக்கங்களின் பொதுப் பண்பு இது. இன்னும் சொல்லப்போனால் அபத்தமான இந்தச் சாதித் தகுதிக்காக சக மனிதரை ஒடுக்கிய சக்திகள் வெட்கப்படுமளவிற்கு அவர் படைத்துள்ளார்.

சாதியத்தின் அபத்தத்தை போட்டு உடைப்பது சிறந்த கலை இலக்கியக் காரர்களின் கடமை. ஏனெனில் அது மானுடத்திற்கு முற்றிலும் பாதகமானது. இங்கே எந்தவொன்றைப் பற்றிப்படைத்தாலும் சாதி வராமல் இருக்காது. இருக்கவும் முடியாது. சாதி நீடிக்கும் வரை வரும். அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை என்று தோளை உயர்த்துவது 'பூனை கண் மூடி'ச் சித்தாந்தமே. நடைமுறை விவகாரம் பற்றி படைப்பில் பேசுவ தொன்றும் பாவம் இல்லை.

இவ்வாறு ராஜ்கௌதமன் எழுதிச் செல்வதன் தாற்பரியத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஓர் இலக்கியப் படைப்பு எனும் கலைப்புனைவை எப்படி அணுகுவதென்பது வாசகர் கையில் உள்ளதே அன்றி அதனை ஆக்கியோர் கையில் இல்லை. வாசகரின் பன்முக வாசிப்பிற்கு இடமிருக்கிறது. இந்த வாசிப்பை உயர்தளத்திற்கு இட்டுச் செல்லுகிற பொறுப்பு விமர்சகருக்கும் கல்வியாளர்களுக்கும் ஊடகக்காரர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் உண்டு. இந்த உண்மையை நாம் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும். இதனைத்தான் ராஜ்கௌதமனும் வலியுறுத்துகிறார். மேலும் அவர், தலித்துகளுக்கு ஒரு வார்த்தை. தலித் மாணவர்கள் சாதிய மனோபாவத்திலிருந்து முதலில் விட்டுவிடுதலையாக வேண்டும். அப்போது தான் போகவேண்டிய பாதை துலக்கமாகத் தெரியும். ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள் தங்களது உரிமைக்கு குரலிடும் போராட்டங்களில் சாதி அணியாக, பாதிக்கப்பட்ட மனித அணியாகத் திரளவும் வேண்டும். அதே சாதி ஒழிப்பு நழுவவிடாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். வேதங்களும் யாகங்களும் காவியங்களும் கோபுரங்களும் அறங்களும் கலைகளும் ஓங்கி வளர்ந்த இந்தப் புண்ணிய பூமியின் சாதியக் கேடுகளை மானிட நோக்குள்ள ஒரு படைப்பாளி அம்பலப்படுத்தவே செய்வான். அப்பேர்ப்பட்ட புதுமைப் பித்தனுடைய துன்பக்கேணியை பாடமாகப் படிப்பதற்கு ஒடுக்கப் பட்ட பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் சங்கடப்பட ஏதுமில்லை. சங்கடங்கள் ஊட்டிவிடப் படுகின்றன. வருங்காலத்தை வளமாக்கும் மாணவர்கள் இன்றைய இரட்டை வேடமிடும் சாதி அரசியலை உதறத் தயங்கக்கூடாது. தங்களுடைய சமூகக் கலாசார வரலாற்றைக் கற்பது மாணவர்களுக்கு இன்றியமையாதது. இதற்கு படைப்பிலக்கியம் உதவும். கற்பிதமான கதைகளால் தலித்துகள் மீது சுமத்தப் பட்ட கறைகள் நீங்காது. கற்பிதமான மாற்றுக்கதைகளால் தலித்துகளின் விடுதலை அமையாது. தலித்திய ஆய்வாளர் ராஜ்கௌதமன் கூறும் மேற்குறிப்பிட்ட கூற்றில் இருந்து புதுமைப்பித்தன் போன்ற படைப்பாளிகளை, ஆளுமைகளை நாம் புரிந்துகொண்டு செல்வது சமகாலத் தேவையாகிறது.

'கல்விக்கான நூல்களை தணிக்கைக்கு உட்படுத்தி இருட்டடிப்புச் செய்வது பள்ளிக்கூடங்களில் மட்டுமன்றி பல்கலைக்கூடங்களிலும் அதிகரித்து வருவதாக' ஓய்வுபெற்ற நீதிபதி சந்துரு குறைபட்டுக்கொள்கிறார். முன்பு கவிஞர் இன்குலாப் எழுதிய நூலுக்கு மதுரை காமராசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகம் சில வருடங்களுக்கு முன்னர் தடைவிதித்திருந்தது. இப்போது இதன் தாய்ப்பல்கலைக் கழகமான சென்னைப் பல்கலைக்கழகமும் இதன் வரிசையில் சேர்ந்துள்ளது. புதுமைப்பித்தனின் சிறுகதைகள் இரண்டு தற்போது பலியிடப்பட்டுள்ளன. புதுமைப்பித்தனின் துன்பக்கேணியை பாடமாக வைத்தால் 'இந்தக் கதைகள் எதிர்விளைவைத் தான் ஏற்படுத்தும். ஒற்றுமையாக இருக்கவேண்டிய வகுப்பறைச் சூழலை இது சீர்குலைக்கும்' என்று யாழன் ஆதியும், குற்றமுள்ள கதைகளை ஆதிக்கச் சிந்தனை தான் இலக்கியமாகப் பார்க்கும் என்று சத்தியச் சந்திரனும் எழுதியுள்ளனர். பாடப்புத்தகத்தில் இருந்து இந்தக் கதையை அகற்றக்கூறி இரண்டாம் அவர் போட்ட வழக்கு முடியும் முன்னரே சென்னைப் பல்கலைக்கழகம் புதுமைப்பித்தனின் இரு கதைகளை பாடத்திட்டத்தில் இருந்து நீக்கி விட்டது. இதனைக் கண்டித்து பல தமிழ் அறிஞர்கள் இப்போது எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக தலித் சிந்தனையாளர் ரவிக்குமார் விடுத்த எதிர்ப்புக் குரல் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. ராஜ்கௌதமன், ரவிக்குமார் முதலானோர் தலித் இலக்கியம் தொடர்பில் ஆய்வுகளையும் கோட்பாடுகளையும் உருவாக்கி தமிழ்ச்சூழலுக்கு வழங்கியவர்கள். அவர்களே புதுமைப்பித்தன் கதைகளை நீக்குவது தொடர்பில் தமது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

புத்தகங்கள் சொல்லும் கருத்துகள் தவறானதாகவே இருந்தாலும் கூட அந்தக் கருத்துகளை எதிர்க்கருத்துகளின் மூலம் தான் வெல்ல முடியுமே தவிர நீதிமன்ற உத்தரவுகளாலும் சிறுகுழுக்களின் அதிகார ஆணைகளினா லும் முறியடிக்க முடியாது. பாடத்திட்டத்தில் இருந்து கதைகளை நீக்குவதால் பாடப்புத்தகக்குழு சாதியத்தைக் கடந்துபோகும் விடுதலையை அடையும் என்று எதிர்பார்க்க முடியாது. பாடத்திட்டக் குழுவில் உள்ள ஆசிரியர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் பல்கலைக்கழக துணைவேந்தர்களுக்கும் நெஞ்சில் உரமும் செயலில் நேர்மையும் மற்றோரை விட அதிகம் இருக்க வேண்டும். சமூகப் பொறுப்புடன் இயங்குவதற்கான துணிச்சலை வளர்த்துக்கொண்டவர்களாகவும் அவர்கள் இருக்கவேண்டும்.

நம்முடைய கல்வியமைப்பு அழுகிச் சீழ்பிடித்து புழுத்து நெளிந்து கொண்டிருக்கிறது. பல்கலைக்கழகங்கள் கல்லறைகளாகவும் துறைகள் சவப்பெட்டிகளாகவும் துறைத்தலைவர்கள் சவங்களாகவும் மாறிப்போய் விட்டார்கள். கொழுத்த சம்பளம், தாராளமான ஓய்வூதியங்கள் போன்றவை அறிவுசார் துறையினரின் அடிப்படைப் பண்பு நலன்களையே மாற்றிவிட்டிருக்கின்றன என்கிறார் எழுத்தாளர் ஞாநி. இந்த விவகாரத்தில் பல்கலைக்கழகம் அதன் முடிவை மறுபரிசீலனை செய்யலாம் என்று ஒரு புறம் தகவல்கள் வெளிவருகின்றன. தேசிய கல்வித்தரச் சான்றிதழ் அமைப்பு விரைவில் சென்னை வந்து பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்ய இருக்கிறது. தரச் சான்றிதழை நீட்டிக்க ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் நிகழும் வருகை இது. தனது கௌரவத்தை காப்பாற்றிக்கொள்ள பல்கலைக்கழகம் துன்பக்கேணி, பொன்னகரம் முதலான கதைகளை மீண்டும் பாடத்திட்டத்தில் சேர்க்கலாம். ஆனால், பல்கலைக்கழகம் முதுகெலும்பு இல்லாதவர்களால் நிரம்பி வழிகிறது என்பதில் எந்த மாற்றுக்கருத்துமில்லை என்கிறார் மூத்த பேராசிரியர் ஒருவர்.

கலை இலக்கியச் சூழல், கல்விச் சூழல் போன்றவை பொறுப்பற்றவர்களின் அதிகாரத்துக்கு அடிபணிந்து வருவது ஆரோக்கியமானதல்ல. புதுமைப்பித்தனுக்கு வந்த சோதனை இன்னும் பலருக்கும் வரலாம். ■

---

***(65ஆம் பக்கத்தொடர்ச்சி...)***

முயற்சியை ஆரம்பித்த எழுத்தாளர் (அல்வாய்) குணேஸ்வரன் அவர்கள் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கின்றார். இவரோடு இன்னும் சில எழுத்தாளர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டதற்கான பதிவுகள் உண்டு.

இவைகளோடு வேல்அமுதன் அவர்களின் இலக்கிய முயற்சிகள் பற்றி இன்னும் சிலவற்றைக் குறிப்பிட்டாக வேண்டும்.

எழுபத்தைந்து குறுங்கதைகளுக்கும் எழுபத்தைந்து படங்கள் இணைக்கப்பட்டுள்ளது. அதுவும் மிகத்தரமான பத்திரிகையில் பதிப்பித்துள்ளார். 03.11.2013 இல் இராஜேஸ்வரி அமரத்துவம் அடைந்துள்ளார். இத்தொகுப்பு 30.11.2013 இல் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. இருபத்தியொரு நாட்களில் இந்நூல் பதிப்பிக்கப்பட்டதாக வேல் அமுதன் அவர்களே தனது குறிப்புரையில் குறிப்பிட்டுள்ளார். இவைகளுக்கு மேலால், கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் இத்தொகுப்பு நூல் வெளியீடு செய்த போது இந்நூல் தனது மனைவியின் நினைவாக வெளியீடு செய்யப்படும் நூல் என்ற வரையறைக்குள் நின்று நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் இந்நூலை இலவசமாகவே வழங்கியுள்ளார்.

இயேசுமகான் தனது போதனையில் குறிப்பிட்ட ஒரு பகுதியை இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமானதென நினைக்கிறேன்.

'விதை விதைப்பவன் விதைகளை விதைத்தான், சில விதைகள் கட்டாந்தரையில் விழுந்து கருகிப்போயின, இன்னும் சில விதைகள் முட்களுக்கு மத்தியில் விழுந்து முளைத்து முட்களால் குத்தப்பட்டு இறந்துபோயின, இன்னும் சிலவிதைகள் செளிப்பான தரையில் விழுந்து முளைத்து ஒன்றுக்குப் பத்தாகவும், பத்துக்கு நூறாகவும் பயன்கொடுத்தன'.

இலக்கியப்பரப்பில் வாசனைப்பழக்கம் மேற்குவானத்தை நோக்கியதாக இருப்பினும் வேல் அமுதனின் இந்த முயற்சி நம்பிக்கைத்துளிர்களை ஏற்படுத்தும் என்பதை நம்பலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனுவல் பார்வை

# 'கிழிசல்' பற்றிய ஒரு வரலாற்று நோக்கு



கே.ஆர்.டேவிட்

மூத்த எழுத்தாளர் வேல் அமுதனின் 'கிழிசல்' என்ற குறுங்கதைத்தொகுதி வெளியாகியுள்ளது. இது அவரின் ஏழாவது வெளியீடாகும். 03.11.2013இல் அமரத்துவமடைந்த அவரது துணைவியார் திருமதி இராஜேஸ்வரி வேல் அமுதன் அவர்களின் ஞாபக மலராகவே இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. எழுபத்தைந்து குறுங்கதைகளையும், எழுபத்தைந்து குறுங்கதைகளுக்கான எழுபத்தைந்து படங்களையும் உள்ளடக்கியதாக வெளியாகியுள்ள இத்தொகுப்பின் நுழைவாயிலில் இராஜேஸ்வரி அவர்களின் மரண சம்பவத்தோடு தொடர்புபட்ட இரண்டு அஞ்சலிக்கதைகளும், முதுபெரும் கவிஞர் கந்தவனம் அவர்களின் அர்த்த புஷ்டியான இந்த நூலாசிரியரான வேல் அமுதன் அவர்களின் 'என்னுரை' என்ற தலைப்பில் ஒரு குறிப்பும் இடம்பெற்றுள்ளது. பைபிள் என்ற கிறிஸ்தவ நூலில் கூறப்படுகின்ற 'ஆதாம்-ஏவாள்' ஆகிய இருவரை யும் நினைவுபடுத்தும் வகையிலானதொரு அட்டைப்படமும் அமைந்துள்ளது. தனது மனைவியின் இறப்பை, அதனூடாக ஏற்பட்ட இழப்பை முன்னிலைப்படுத்தியுள்ளதாகவுள்ள இத்தொகுப்பில், தங்களின் இல்லற வாழ்வின் அர்த்த புஷ்டியை வெளிப்படுத்தும் நோக்கோடு இந்த அட்டைப்படம் தெரிவு செய்யப்பட்டிருக்கலாம் என்று எண்ணத்தோன்றுகிறது.




நமக்கு முன்னாள் பல இலக்கிய வெளியீடுகள் இருக்கும்போது, வேல் அமுதன் அவர்களின் 'கிழிசல்' என்ற ஞாபகமலரை நான் முன்னிலைப்படுத்தியதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. ஒரு இலக்கியத்தொகுதியை மதிப்பீடு செய்யும்போது அம்மதிப்பீடு இரண்டுவகையான நியமங்களின் அடிப்படைகளிலேயே செய்யப்படுகின்றது. ஒன்று, அகநிலைப் பட்ட கருத்தியல் வெளிப்பாடு பற்றியது, இரண்டாவது புறநிலைப்பட்ட அழகியல் வெளிப்பாடு பற்றியது. 'கிழிசல்' என்ற இத்தொகுப்பின் அகநிலைப்பட்ட பொருத்தப்பாடுகளுக்கப்பால், இத்தொகுதி நூலுருப் பெறுவதற்கு அடிநாதமாகவும், ஆதாரசுருதியாகவும் இருந்த வேல் அமுதன் அவர்களின் இறுக்கமானதும்-நுணுக்கமானதும் பயனுறுதி கொண்டதுமான அவரது இலக்கிய சிந்தனைகளை வாசகர்களோடு பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

அமரத்துவம் அடைந்த இராஜேஸ்வரியின் ஞாபக மலராகவே வேல் அமுதன் அவர்கள் இத்தொகுதியை வெளியீடு செய்துள்ளார் என்ற தெளிவுடன் நமது பார்வையைத் தொடர்வது நமது புரிதலை இலகுவாக்கும் என எண்ணுகிறேன். அறுபது காலப் பகுதியில் ஒருவர் இறந்துவிட்டால் அவரது வாழ்க்கையின் முக்கிய அம்சங்களைப் பதிவாக்கி 'கல்வெட்டு' என்ற பெயரில் வெளியிடுகின்றதொரு வழமை இருந்தது. இவ்வழமை மேட்டுக்குடி மக்களிடமிருந்தே தோற்றம் பெற்றிருந்தது. இலவசக்கல்வி, சுயமொழிக்கல்வி போன்ற புதிய கல்வித்திட்டங்களின் வருகையோடு இச்செயற்பாடு 'நினைவஞ்சலி' என்ற பெயரில் பரவலாகியது. இதன் பின் ஏற்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பினால் பொருளாதார வளம் நினைவஞ்சலி வெளியீட்டை மேலும் பரவலாக்கியதோடு ஒரு நாகரிக அர்த்தத்தையும் ஏற்படுத்தியது.

இதில் கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், பெருந்தொகைச் செலவில் இவ்வெளியீடுகளை மேற்கொண்டபோதிலும் இதன்பயன்பாடு நூறுவீதம் என்று கூறக்கூடியளவிற்குப் பூச்சியமாகவே இருந்தது. இதற்கான சான்றுகள் நிறையவுண்டு. வீண்விரையமாகிப்போகும் இப்பொருளாதார முதலீடுகளை, இலக்கிய வளத்தை நோக்கித்திருப்பும் ஒரு முயற்சியில் வேல் அமுதன் அவர்கள் வெற்றி கண்டுள்ளார் என்பதே என்கருத்தாகும்.

1975ஆம் ஆண்டு இப்படியொரு நினைவஞ்சலி நூலை முதுபெரும் எழுத்தாளர் அமரர் வ.அ. இராசரத்தினம் அவர்கள் தனது மனைவியின் நினைவாக வெளியிட்டுள்ளார் என்பது கவனத்துக்குரியதாகும். அதன் பின்பு 2007இல் இப்படியொரு

(64ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

# நேரமுகாமைத்துவம்



ஆ.சுரேந்திரன்

நாங்கள் அன்றாடம் சந்திக்கும் நபர்களில் ஒருவராவது 'எனக்கு நேரமில்லை' எனச் சொல்வதைக் கேட்டிருப்போம். அல்லது நாங்கள் யாருக்காவது எனக்கு நேரமில்லையெனச் சொல்லியிருப்போம். இப்படிச்சொல்ல நேரிடுவது எதனால்? என்பதை நாங்கள் எப்போதாவது ஆற அமரச் சிந்தித்திருக்கிறோமா? இந்த விடயத்தில் தான் நேரமுகாமைத்துவம் பற்றிய எண்ணக்கரு முக்கியத்துவம் பெறுகின்றது. நேரத்தை வேலையுடன் இணைத்துத் திட்டமிடுவதுதான் நேரமுகாமைத்துவம் (Time management) என்று குறிப்பிடப்படுகிறது. நேரத்தை வேலையுடன் இணைத்துச் சிறப்பான திட்டவரைபொன்றைச் செய்துவிட்டால் வேலைச்சுமை என்ற பேச்சுக்கே இடமிருக்காது. காலதாமதம் என்பதும் தவிர்க்கப் பட்டுவிடும்.

ஆனால் எங்களில் அநேகர் நேரமுகாமைத்துவம் குறித்துக் கவனம் செலுத்துவதில்லை. இது பல்வேறு வழிகளில் எம்மீது தாக்கம்செலுத்துகிறது. ஓர் எளிய உதாரணத்தைப் பார்ப்போம். ஓர் அரசாங்க உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு நேரமாகிவிட்டதென்ற பதற்றத்துடன் மோட்டார் சைக்கிளில் வேகமாச் செல்கிறார். சாலை வளைவொன்றில் வேகத்தைக் கட்டுப்படுத்தவியலாமல் விபத்துக்குள்ளாகிறார். எலும்பு முறிவும் ஏற்படுகிறது. இதன் விளைவாக அன்றைய தினம் அலுவலகத்திற்கு உரிய நேரத்திற்கு சமூகமளிக்க முடியாது போவதுமட்டுமல்ல குறித்த நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவர் உடல் நிலை சுமுகமாகித் திரும்பும் வரை அவரது இயல்பு வாழ்க்கையும் பாதிப்பிற்குள்ளாவதை அவதானிக்க முடியும். இங்கே நேரமுகாமைத்துவம் கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் இந்நபருக்கு நேர்ந்திருக்கக் கூடிய அசம்பாவிதத்தைத் தவிர்த்திருக்க முடியும்.

அலுவலக வேலைகளுக்கு மட்டுமன்றி, அன்றாட வாழ்வின் பிற கருமங்களுக்கும் நேரமுகாமைத்துவத்தைக் கடைப்பிடிப்பது பயன் விளைவைத் தரக்கூடியதாகவிருக்கும். நேரமுகாமைத்துவம் குறித்த கலந்துரையாடல்களில் எப்போதும் வழமையாக 'உரியநேரத் தந்திரோபாயம்'(JIT-JUST in Time) ஒருவகை மாதிரியாக எடுத்துக்காட்டப்படுகிறது. மூலப்பொருட்களை ஏற்கனவே கொள்வனவு செய்து களஞ்சியப் படுத்துவதைத் தவிர்த்து உற்பத்திக்கான உரிய நேரத்தைத் திட்டமிட்டு அந்த நேரத்திற்கு மூலப்பொருட்களை வரவழைத்து உற்பத்தியை மேற்கொள்வதென்பதே இதன் அடிப்படையாகும். இதன் மூலம் பொருட்களைக் களஞ்சியப்படுத்தி வைத்திருக்க வேண்டிய செலவு ஏற்படுவதில்லை. நாங்கள் நேரமுகாமைத்துவத்தைப் பின்பற்ற வேண்டியிருப்பதின் முக்கிய காரணம் செலவைக் குறைப்பதென்பதைக் காட்டிலும், மன அழுத்தத் தைத் தணிப்பதற்காகவே என்பதைக் கவனத்திற்கொள்ளவேண்டும். நேரமுகாமைத்துவத்தைப் பின்பற்றாதநிலையில் வேலைச் சுமை கூடிச்செல்கிறது. இது மன அழுத்தத்தை அதிகரிக்க ஏதுவாகின்றது. தொடர்ந்தும் மன அழுத்தத்திற்குள்ளாகும் போது தற்கொலைக்குத் தூண்டப்படலாம். தவிரவும் பக்கவாதம், நரம்புத்தளர்ச்சி போன்ற உடலியல் பாதிப்புகளுக்குமுள்ளாகலாம். இதனால் நேரமுகாமைத்துவத்தின் அவசியத்தையுணர்ந்து அதை நாளாந்த செயற்பாடுகளில் கடைப்பிடிப்பதற்கு நம்மைப் பரிச்சயப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

நேரமுகாமைத்துவங் குறித்த ஆய்வொன்றில் சட்டைப் பொத்தான்களை மேலிருந்து கீழாக போட்டுக் கொள்வதனைக் காட்டிலும், கீழிருந்து மேலாகப் போட்டுக் கொள்வது குறைவான நேரத்தை எடுப்பதாகக் கணிப்பிட்டிருக்கின்றனர். மேலை நாடுகள் இவ்வாறான சின்ன விடயங்களிலெல்லாம் நேரமுகாமைத்துவத்தைக் கடைப்பிடிப்பது முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது மட்டுமன்றி, நேரமுகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தினையும் உணர்த்துவதாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான சஞ்சிகை

**2ஆவது மலர் இப்பொழுது விற்பனையில்**




விலை 20/=




சிறப்பு இணைப்பாக T20 உலகக்கிண்ணம் வென்ற இலங்கையின் அணியின் வர்ணப் படம்

CHUTTI KESARI

# சுட்டி கேசரி

நாளைய தினம் நம் கையில்

உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள் அருகிலுள்ள பத்திரிகை முகவர்களை நாடுங்கள்

**மேலதிக விபரங்களுக்கு 0117 322783**

**மாதம் இருமுறை வெளிவரும் சஞ்சிகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd, at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org